மாத வெளியீடு

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

வருட சந்தா ரூபா 3 — தனிப் பிரதி அணா 4

மாலை 13	MARCH 1945 : தாரண ஃ பங்குனி மீ	முத்து 3

பொருளடக்கம்

	விஷயம்		பக்கம்
1.	ஹிண்டு 'கோட்' அல்லது வாலிழந்த நரி—கௌண்டின்யன்	...	121
2.	அன்னதான பலன்—கா. கனகராஜையர்	...	132
3.	எண்ணும் எழுத்தும்—வே நாராயணன்	...	135
4.	கடவுளின் அருள்—ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாசன்	...	137
5.	ஸம்ஸ்கிருத கீர்த்தனை—ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.	...	143
6.	கவிதையும் கற்பனையும்—வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி	...	145
7.	அம்பலம் ஏறுமா ?—த. வீ. இராதாகிருஷ்ண சாஸ்திரி, எம்.ஏ., எல்.ஐ.எம்.		150
8.	மண் குதிரை—ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.	...	156
9.	தாக்ஷிண்யம்—"குசப்ரியை"	...	161
10.	தேயிலைத் தொழிலின் அபிவிருத்தி—என். எஸ். நரஸிம்ஹம், எம். ஏ.	...	164
11.	கருமையே செம்மை—இ. வி. சாஸ்திரி	...	170
12.	பிரார்த்தனைகள்—பண்டிட் யம். வி. எஸ். ராம், பி. ஏ., பி. எல்.	...	172

"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ் : "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"

வடக்கு பீச் ரோடு, : : சென்னை

உள்ளூர் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட்	மவுண்ட் ரோட்	திருவல்லிக்கேணி
மயிலாப்பூர்	தியாகராய நகர்	புரசவாக்கம்

❋

சென்னை ராஜதானியிலுள்ள எல்லா முக்கிய இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகள் உள்ளன.

வெளியிடப்பட்டு வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	33,55,946
ரிஸர்வ் நிதி	ரூ.	33,00,000
டிபாஸிட்டுகள்	ரூ.	10½ கோடிக்குமேல்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் கவனிக்கப்படும்.

[விவரங்களுக்கு பாங்கியின் எந்த ஆபிஸிற்காவது எழுதவும்.]

N. கோபால அய்யர்,
காரியதரிசி.

N P. B./101

S. S. S.

சிறு சேமிப்பு திட்டம்

உங்கள் குழந்தைகளே உங்கள் செல்வம்
அவர்களது சுகம் உங்களது பொறுப்பு.

சேமித்து அவர்களுக்கு

நாஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகள்

சில வாங்குங்கள்.

ஒவ்வொரு			ஆகிறது	
ரூ.	5/-	12 வருஷங்களில்	ரூ.	7-8-0
,,	10/-		,,	15-0-0
,,	50/-		,,	75-0-0
,,	100/-		,,	150-0-0
,,	1000/-		,,	1500-0-0
,,	5000/-		,,	7500-0-0

இது வருமான வரி நீங்கலானது.

கிடைக்கும் இடம் : (1) அதிகாரம் பெற்ற ஏஜண்டுகள்
(2) தபால் ஆபீஸ்கள்
(3) ஸேவிங்ஸ் பீரோக்கள்

A. A. & S. N. S. 11.

கோடை காலத்திற்குத் தகுந்த

குளிர்ந்த பானங்கள்

கும்பகோணம்

T. S. R.

கம்பெனியின்

"குங்குமப்பூ, நன்னாரி,

ரோஸ், ஆரஞ்சு"

முதலிய சர்பத்துகள்.

*

Madras Agents :—

PUSHPAVANAM STORES,
Triplicane, Madras

Coimbatore Stockists—

B. BALAPATTABI,
Vaisyar Street, Coimbatore

L. R. V.

ஹிண்டு 'கோட்'

அல்லது

வாலிழந்த நரி

[கௌண்டின்யன்]

தினவெடுத்தவன் சொறிந்து கொள்ளுவதுண்டு. ஒரு உபாதியும் இல்லாமலிருப்பவனுக்கு அரிப்பிருப்பதாக எண்ணி அண்டையில் படுத்திருப்பவன் அவன் முதுகைப் புறண்டினால் அவனுக்கு ரத்தம் கிளம்பி ரணமுண்டாகுமே யொழிய குணமுண்டோ? இந்த விபரீத கைங்கரியத்தைத்தான் ஹிந்து ஸமூகத்திற்குச் செய்ய ராவ் கமிட்டியார் முன்வந்துள்ளார்கள்.

"அதென்ன, இந்தக் கமிட்டியார் ஹிந்து ஸமூகத்தைச் சார்ந்தவர்களல்லவா, அவர்களுக்கு அதன் தேவை என்னவென்றுதெரியாதா, அந்தத்தேவையைத் தீர்த்துக்கொள்ளவேண்டிய உபாயத்தைத் தேட அவர்களுக்கு உரிமை இல்லையா?" என்றெல்லாம் கேட்கிறீர்களோ? ஒவ்வொரு கேள்விக்கும் 'இல்லை' என்ற விடையை நான் தைரியமாய் அளிக்கிறேன். காரணத்தைக் கேட்டால் நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள். இக்கமிட்டி அங்கத்தினர் எல்லோரும் ஹிந்து ஸமூகத்தில் பிறந்தவர்தான். தாங்களும் ஹிந்துக்கள் என்றே சொல்லிக்கொண்டுதான் இருக்கிறதாகத் தெரிகிறது. ஆனால் கிரியாம்சையில் அந்தப் பட்டத்திற்கவர்கள் தகுதி யுள்ளவர்களல்ல. சீர்திருத்தம் என்று எண்ணிக்கொண்டு இப்பொழுது தர்ம சாஸ்திரங்களைத் தலைகீழாகத் திருப்பி எழுதமுன் வந்துள்ளார்களே, இவ்வித மாறுபாடுகளைத் தாங்கள் வெகுகாலமாய் ஆமோதித்து வந்திருப்பதோடில்லாமல் பல முறையில் தம் நடத்தையிலும் குடும்ப அமைப்பிலும் பின்பற்றியும் வந்திருக்கிறார்கள். தொன்றுதொட்ட காலமாக வந்திருக்கும் நல்லொழுக்கத்திற்குப் புறம்பான கொள்கைகளில் தீவிரப்பற்றுள்ள இவர்களுக்கு, ஸதாசாரம் தர்ம சாஸ்திரத்தைப் போன்ற பெரிய பிரமாணம் என்று நம்பியிருக்கும் ஹிந்துக்களுக்கு தர்ம நியாயம் சொல்ல என்ன அதிகாரம்? விருப்பு வெறுப்பு இல்லாமல் நடுநிலைமையில் நின்று சாஸ்திரத்தின் அதிசூக்ஷ்மமான கருத்தை உணர்ந்து ஜனங்களின் அழியா நன்மையை மட்டும் கோரிச் சட்டம் வகுத்தவர்களையே ஸ்மிருதி கர்த்தாக்களாக நம் ஸமூகம் ஒப்புக்கொண்டு வந்திருக்கிறது. இந்தக் கமிட்டி அங்கத்தினரிடம் இந்த வித யோக்கியதை காணப்படவில்லை என்று நான் சொல்லத் தேவையில்லை.

'கர்த்ருவைலக்ஷண்யம்' இப்படியிருக்க, 'விஷய வைலக்ஷண்ய'த்தைப்பார்ப்போம். இந்தக் 'கோட்' இல்லை என்று யார் அழுதரார்கள்? ஸமூகம் இதை அபேக்ஷிக்கவில்லை. அரசாங்கத்தாரை இவ்விதக் 'கோட்' வேணுமென்று யாரும் மனுச் செய்துகொள்ளவில்லை. 'ஹிந்து ஸ்திரீகளின் சொத்துரிமைச் சட்டம்' என்ற விசித்திரச் சட்டம் ஒன்று செய்தார்கள் சில வருஷங்களுக்குமுன். ஸர்க்கார் சட்ட நிபுணர்களும் மத்திய சட்டசபையில் இருந்த சட்டப் புலிகளும் சேர்ந்து ஸமூகத்தையும் ஸ்திரீகளையும் கரையேற்றுவதாக எண்ணி வெகு பாடுபட்டு அமைத்த இந்தச் சட்டத்தில் ஆயிரம் பொத்தல்கள் இருப்பதை நடைமுதலில்

நீதி ஸ்தலங்கள் வெளிப்படுத்தின. பொத்தலடைத்து மாளாதுபோலிருந்தது. அப்பொழுது ஒரு குருட்டு யுக்தி தோன்றிற்று திவிரச் சீர்திருத்தக்காரர் மனதில். "இந்த ஒரு சட்டத்தை மட்டும் செப்பனிடுவது என்றால்தான் சங்கடமாயிருக்கிறது. ஹிந்துக்கள் சம்பந்தமான சட்டம் எல்லாவற்றையும் ஒன்றாய்த் தொகுத்துவிட்டால் முன்னுக்குப்பின் முரணில்லாமல் பண்ணிவிடலாம்" என்று ஸம்யோசிதமாய்ச் சொல்ல முன்வந்தார்கள் இந்தக் கமிட்டி அங்கத்தினர்களாயிருப்பவர் இரண்டொருவர். "ரொம்ப ஸரி. நீங்களே செய்துவிடுங்கள் இந்த மகத்தான காரியத்தை; உங்களைவிட இதைச் செய்யத் தகுதியுள்ளவர் வேறு யார் இருக்கிறார்கள்?" என்று அரசாங்கத்தார் ஆயத்தைக் கழிக்கும் முறையில் சொல்லிவிட்டார்கள். வந்தது அநர்த்தம். இந்தக் கமிட்டியார் உடனே யாக்ஞவல்கியரும் மனுவும் நாரதரும் பிருஹஸ்பதியும் தங்கள் ஹிருதயத்தில் ஆவிர்பவித்ததாக எண்ணிவிட்டார்கள். பல ஸ்மிருதிகளிலும் 'கேஸ் லா' என்று சொல்லப்பட்ட ஆங்கில துரைத்தனத்தால் அமைக்கப்பட்ட நீதி ஸ்தலங்களின் தீர்ப்புக்களிலும் தேடித் தெரிந்து கொள்ளவேண்டிய நிலைமையில் இருக்கும் ஹிந்து சட்டத்தை ஒன்றுசேர்த்து ஒரே புஸ்தகத்தில் எழுதிவிட்டால் சட்டத்தை எளிதில் அறிந்துகொள்ளலாம் என்ற கருத்துடன் இவர்கள் நியமிக்கப்பட்டிருக்க, ஹிந்து சட்டம் பல அம்சங்களில் குறையுள்ளதாகவும், தற்கால நாகரிகத்துக்கு ஒற்றுமைப்படாததாகவும் இருப்பதாய்த் தங்களுக்குள்ளே முடிவு கட்டிக்கொண்டு இந்த அம்சங்களைச் சீர்திருத்தி ஒரு புது ஸ்மிருதி நிர்மாணிப்பதே தங்கள் கடமை என்று கமிட்டியார் எண்ணிவிட்டார்கள். அந்த எண்ணத்தின் பலனாக மலை கல்லி எலி பிடித்தான் என்ற கதையாய்ப் பல வருஷம் வேலைசெய்து பொது ஜனங்களின் திரவியத்தையும் ஏராளமாகச் செலவிட்டு இந்த அதிசயக் 'கோடை'த் தீட்டியிருக்கிறார்கள். முப்பது கோடி ஹிந்துக்களின் தர்மத்தையும் பழக்க வழக்கங்களையும் பாதிக்கக் கூடிய இத்தகைய மாறுதல்கள் அவர்களுடைய வேண்டுகோளுக் கிணங்கிப் பிரேரேபிக்கப்படவில்லை என்று இப்பொழுது நன்கு விளங்குகிறது அல்லவா?

இந்த மாறுதல்கள் எவ்வகைப்பட்டவை, இவைகளின் விளைவு எத்தகையதாகவிருக்கும் என்று ஹிந்து ஸமூகம் அறிந்து கொள்ளுவதற்கு வேண்டிய ஒழுங்கான ஏற்பாடுகளோ தேவையான அவகாசமோ கிடையாது. இந்தத் தேசத்தில் நூற்றுக்கு இரண்டு பேருக்குக்கூட ஆங்கிலம் தெரியாது; 'ஹிண்டு கோடோ' ஆங்கிலத்தில் எழுதப்பட்டு நேற்றுவரையில் ஆங்கிலம் தெரிந்தோருக்கே விளங்கும் நிலைமையில் இருந்தது. வெகுஜனப் புகாரின் பேரில் இரண்டு மூன்று மாதத்திற்கு முந்தித்தான் தேசிய பாஷைகளில் மொழிபெயர்த்துப் பிரசுரித்தார்கள். சட்டத்தின் நுட்பங்களை சாமானிய ஜனங்கள் தம் புத்தியைக் கொண்டே அறிந்து விவேசனம் பண்ணுவது முடியாத காரியம்; கற்றறிந்தவரும் சட்டப்பிரக்ஞை உள்ளவர்களுமே இந்தத் தலைகீழ் சட்டப் பிரேரேபணையை ஆராய்ந்து அதன் உட்கருத்தையும் அதனால் ஏற்படக்கூடிய நன்மை தீமை எல்லாவற்றையும் பொது ஜனங்கள் அறியும்படி எடுத்துக் கூற முடியும். அப்படிச் செய்யத் தகுந்த அவகாசம் கொடாமலே கமிட்டியார் ஊரூராய்ச் சென்று இந்தக் 'கோடை'ப்பற்றி சாக்ஷி விசாரிப்பதாக ஒரு பாவனை பண்ணி வருகிறார்கள். இந்தச் சட்டத்தை எதிர்ப்பவர்களுக்குத் தகுந்த விசாரணை வசதி கிடைக்காவிடினும் எதிர்ப்பு ரொம்ப பலமாகத்தான் இருக்கிறது என்று கமிட்டி அங்கத்தினரே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்க, இவர்கள் பிடிவாதமாக முடிவு செய்தார்களானால் அந்த முடிவுகள் ஹிந்து ஸமூகத்தின் ஆதரவைப் பெற்றவை என்று ஒருவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இந்த

மாறுதல்களைச் சட்டமாய்ச் செய்து அமுலுக்குக் கொண்டுவர அதிகாரமுள்ள சட்டசபையின் யோக்கியதையைப் பற்றியோ அதிகம் சொல்லத் தேவையில்லை. அதில் ஹிந்துக்கள் மட்டுமல்ல, மஹம்மதியர், கிறிஸ்தவர், பார்ஸிகள் இன்னும் பல மதஸ்தர்களும் நானா ஜாதியினரும் அங்கத்தினரா யிருக்கிறார்கள். இந்த வேறு மதஸ்தர்களுக்கு ஹிந்து தர்மம் நிலைத்திருக்கும் விஷயத்தில் அக்கறை இருக்கக் காரணமில்லை. அவர்களுக்கு அதன் மர்மத்தை உணரப் பழக்கமும் படிப்பும் தகுதியும் கிடையாது. அப்படியிருக்க, இவர்களுடைய 'வோட்'களின் உதவியைக் கொண்டு ஹிந்து அங்கத்தினர் ஒரு சிறு பான்மையோர் புதுமை மோஹத்தால் இந்தச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டால் இது நியாயமாகுமா? மேலும் சட்டசபை அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பத்து வருஷமாகிறது. தேசத்தில் இந்த விஷயங்களைப்பற்றி நடமாடும் அபிப்பிராயங்களை இவர்கள் அறியவோ சரிவர அனுஸரிக்கவோ தகுதியற்றவர்கள் என்பது திண்ணம்.

'கர்த்ருவைலக்ஷண்ய'மும் 'விஷயவைலக்ஷண்ய'மும் எப்படி என்று சொன்னோம். கிரந்தவைலக்ஷண்யமோ? கேட்பானேன்! எடுக்கும்போதே 'சுக்லாம்பரதரம்' கண்ணில் குட்டிக் கொள்வதுபோல் 'ஹிந்து' என்றால் ஹிந்து, புத்த, ஜைன, சீக்கு மதங்களைச் சார்ந்தவர்களையும் இந்தக் 'கோடு' ஏற்படுவதற்கு முன் எம்மதத்தராயினும் ஹிந்து சட்டத்தையோ பழக்க வழக்கங்களையோ பின்பற்றியவர்களானால் அவர்களையும் குறிக்கும் என்று 'கோடு' துவங்குகிறது. இதை விளக்கக் கொடுக்கப்பட்ட உதாரணங்களிலிருந்து, தாய் தகப்பன் இருவரும் ஒரே மதஸ்தராயிராமல் ஒருவர் ஹிந்துவாயும் மற்றவர் அந்நிய மதஸ்தராயு மிருந்தாலும் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை 'ஹிந்து'வாக வளர்க்கப்பட்டு வந்தால் அது ஹிந்துவாகவே கருதப்படும் என்று ஏற்படுகிறது. நாளது வரையில் பின்பற்றப்பட்ட சாஸ்திரம் ஆசாரம் சட்டம் இவைகள் ஒன்றாவது இந்த விபரீதத்தை ஒப்புக்கொள்ளா. அந்நிய மதத்தில் பிறந்தவனுக்கு ஹிந்து ஸமூகம் இடம் கொடுப்பதில்லை. ஹிந்துவாய்ப் பிறந்தவன் தன் மதத்தைத் துறந்தானானால் அவனை ஸமூகம் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவதுமில்லை. அவன் தன்னை ஹிந்து என்று சொல்லிக்கொண்டாலும் ஹிந்துக்கள் நம்பும் மேலான தத்துவங்களை ஒப்புக்கொண்டாலும் அவன் ஸமூகத்திற்கு வெளியே இருக்க வேண்டியதுதான். இந்தக் கட்டுப்பாடு காலப்போக்குக்குவிரோதமானதுஎன்றும் இது காரணமாக மத மாறுதலாலோ ஆசாரக் குறைவாலோ பதிதர்களானவர்கள் ஸமூகத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டு நாளுக்கு நாள் ஹிந்துஸமூகம் பலம் குன்றியும் இதர ஸமூகங்கள் வலுத்தும் வருகின்றன என்றும் ஆஸ்திகர்களான சிலர்கூட முறையிடுகிறார்கள். ராஜீயவாதிகள் இவ்விதம் பேசுவது சகஜம். ஆனால் தர்மத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் இந்தக் கக்ஷியை ஒப்புக்கொள்ள முடியாது. இந்தியர்கள் எல்லோரும் ராஜீய விஷயங்கள் பற்றிய வரையில் ஒன்று, மத வேற்றுமைகள் இதை பாதிக்கமாட்டா, சுதந்திரம் அடைய வேண்டிய துறையில் எல்லோரும் முயலக் கடமைப்பட்டவர்கள் என்று வாதிக்கும் தேசீய வாதிகள் ஹிந்துக்களின் ஜனத் தொகை குறைந்துவிட்டால் ஹிந்துக்களுக்கு பலம் குன்றிவிடும் என்று சொல்லுவது முன்னுக்குப் பின் முரணுகை வல்லவா இருக்கிறது? உண்மையில் தர்மத்தினின்றும் மயிரிழையும் பிறழாத ஒரு ஹிந்து இருக்குமளவும் ஹிந்து ஸமூகம் அழியாது. சரித்திர மூலமாகப் பார்த்தால் தர்மத்திலும் ஆசாரத்திலும் அழுத்தமான நம்பிக்கை இருந்து வந்ததால்தான் நாளதுவரையில் எவ்வளவோ இன்னல்களுக் குட்பட்டும் ஹிந்துஸமூகமும் நாகரிகமும் அழியாமல் வந்திருக்கின்றன. கோடிக் கணக்கான ஹிந்துக்கள் இதர மதங்களைத் தழுவிவிட்டார்களே, இது பெரிய நஷ்டமல்லவா என்று கேட்கலாம். அப்படி அவர்

கள் கழுவிப் போனதற்கு முக்கியக் காரணம் நம் தர்மத்தையும் மதத்தையும் பாமரரும் நன்குணரும் வகையில் பிரசாரம் செய்து தங்கள் நடத்தையிலும் இவைகளின் விசேஷம் துலங்கும்படி காட்டக்கூடிய பெரியார்கள் இந்தக் காரியத்தில் அசிரத்தையாய் இருந்ததுதான். இதைச் சரியாய் உணராமல், ஸமூகம் பலம் குன்றும் விருப்பதற்கு வைத்தியம் ஸமூகத்தை ஒன்றுபடுத்தும் கட்டுப்பாடுகளையே தகர்த்தல் என்று முடிவு செய்வது தலைவலியைப் போக்கத் தலையையே வெட்டுவது போல்தான் ஆகும்.

"இதென்ன, ஐயா, எந்தப் பேச்சை எடுத்தாலும் 'மதம் மதம்' என்று மாரடிக்கிறீர்களே, உண்பதிலும் உறங்குவதிலும், பெண்டாடுவதிலும் சொத்துச் சுதந்திரம் அனுபவிப்பதிலுமா மதம் உட்கார்ந்திருக்கிறது? இதெல்லாம் ஸமூகக் கட்டுப்பாடுகளே யொழிய மதத்திற்கும் இவைக்கும் என்ன சம்பந்தம்? மதம் என்றால் ஈசுவரன், ஆத்மா, மாயை என்ற தத்துவ விசாரம் அல்லவா? தனி மனிதன் தனக்குள் ஆராய்ந்து துணிய வேண்டிய விஷயம். இதைப் பழக்க வழக்கங்களோடு கலந்து கோளாறு பண்ணினதால்தான் நம் ஸமூகம் பதினாயிரம் வித்தியாஸங்களால் பிளவுண்டு தவிக்கிறது" என்று தீவிரச் சீர்திருத்தக்காரர்கள் சீற்றம் கொள்கிறார்கள். இப்போக்கொத்தவர்களைத் திருப்தி பண்ணுவதிலேயே குறிப்பாயுள்ள கமிட்டியார் தர்மத்திற் கடிப்படையான கொள்கைகளை நிராகரித்தே முக்கியமான மாறுதல்களை அமைத்திருக்கிறார்கள். ஹிந்து ஸமூகத்துக்கே தார்மிக விவாஹம் அஸ்திவாரம். 'ப்ராஹ்மம்' என்று ஸ்மிருதிகளில் கூறப்பட்ட விவாஹம்தான் வெகு காலமாய் ஆஸ்திகர்களால் அனுமதிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஒரே வர்ணத்தவரும் வெவ்வேறு கோத்திரம் பிரவரம் உள்ளவர்களுமே சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட சடங்குகளை வழுவாமல் நடத்தி மேற்படி விவாஹத்தைச் செய்துகொள்ளலாம். இந்தக் கமிட்டியாரோ எந்த வர்ணத்தவர் வேணுமானாலும் எந்த வர்ணத்தவரையும் கலியாணம் பண்ணிக்கொள்ளலாம்; இதர மதத்தவரையும் மணந்துகொள்ளலாம் அவர்கள் 'ஹிந்து'வாகிவிட்டால்; கோத்திரம் பிரவரம் ஒன்றும் பார்க்க வேண்டியதில்லை; சடங்குகள் இரண்டொன்றே நடத்தினால் போதும்; அப்படி நடத்தப்படாமற் போனாலும் அதனால் கலியாணம் ரத்தாகாது; யாதொரு சடங்குமில்லாமல் civil marriage செய்துகொள்ளலாம்; அந்த civil marriage பற்றின நிபந்தனைகளும் ஹிந்து 'கோடில்' ஒரு பாகமாய்ச் சேர்க்கப்படுமாதலால் அதன்படி கலியாணம் நடத்தியவர்களைத் தற்காலம் Civil Marriage Act இல் கண்டிருக்கும் நிர்பந்தங்களும் சொத்துரிமைகளைப் பற்றின தடைகளும் பாதிக்கா; ஒரு பெண்டாட்டி யிருக்கையில் இன்னொரு கலியாணம் செய்வது குற்றமாக்கப் படவேண்டும்; இதற்கனுகுணமாகச் சில காரணங்களை முன்னிட்டு விவாஹரத்தும் அனுமதிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் பிரேரேபித்திருக்கிறார்கள்.

வர்ண தர்மத்தில் நம்பிக்கையில்லாதவர்களும் ஸ்மிருதிகளிடத்தில் மதிப்பில்லாதவர்களும் Civil Marriage Actபடி மனம்போன போக்கை அனுஸரித்துக் கலியாணம் பண்ணிக்கொள்ளப் பூர்ண சுதந்திரம் தற்காலம் இருக்கிறது. அப்படி மணம் புரிபவருடைய ஸந்ததி ஆஸ்திகர்களாயும் பிராசீன ஸம்பிரதாயத்தை யொட்டி நடப்பவர்களுமான ஞாதிகள் பந்துக்கள் சொத்துக்கு அநந்தரவாரிசு பாத்தியம் கொண்டாட முடியாது என்பது ஒன்றைத் தவிர வேறு எவ்வித இடையூறுகளும் இவர்களுக்கு இல்லை. இப்படி இருக்க, ஹிந்து ஸமூகத்தின் பெரும்பாலாருக்கு விஷமாயிருக்கும் மேற்கண்ட மாறுதல்களைச் செய்து ஸமூகத்தைக் குலைக்க ஏன் அவர்கள் ஆவல் கொள்கிறார்கள் என்றுதான் தெரியவில்லை. ஆசார விவஹாரங்களெல்லாம் அசட்டுத்தனம், அவை மதத்திற்கு யாதொரு தொடர்புமுடையன அல்ல, ஆகையால் அவைகளைத் துறந்தவர்

களை ஹிந்துக்கள் அல்ல என்று ஒதுக்கி வைக்க முயல்வது அநியாயம்; அவர்களுக்கும் ஹிந்து சட்டமும் ஸமூகமும் இடம் கொடுக்க வேண்டுமென்கிறார்கள். இதைவிடப் பயித்தியக்காரத்தனம் வேறுண்டோ? ஹிந்து ஸமூகத்திலிருந்து இவர்களை பஹிஷ்கரித்தது ஆஸ்திக ஹிந்துக்கள் அல்ல; நடை முதலில் அமுலில் இருக்கும் ஹிந்து சட்டமும் அல்ல; இவர்களுடைய நடவடிக்கையும் கொள்கைகளுமே இவர்களை ஸமூகத்திலிருந்து வெளியேற்றி விட்டன. சட்டம் இவர்கள் நடத்தையை ஒட்டியே இவர்களைத் தனியாகக் கருதுகிறதேயொழிய இவர்கள் நிலைமைக்கு அது காரணமல்ல. ஹிந்து தர்மமானது வாழ்நாளையே ஒரு நீடித்த ஸம்ஸ்காரமாக எண்ணுகிறது. இந்த ஜன்மத்தின் நல்வினை தீவினை இந்த ஜன்மத்தோடுதொலைந்துபோகிறதுஎன்ற சில மதத்தினர் கொள்கைக்கு எதிரிடையாக, 'இஹ' த்துக்கும் 'பர'த்துக்கும், இந்த ஜன்மத்திற்கும் போன ஜன்மங்களுக்கும் வரப்போகும் ஜன்மங்களுக்கும், ஒருவன் செய்யும் கர்மாவுக்கும் அவன் அடையும் பலனுக்கும் தகர்க்க முடியாத சம்பந்தம் இருப்பதாகப் போதிக்கிறது. கலியாணமோ மற்றுமுள்ள சம்பந்தங்களோ போகத்தை முக்கிய நோக்கமாகக் கொண்டவையா யிருக்கக் கூடாது என்றும் தர்ம ஸாதனங்களாகவே நினைக்கப்பட வேண்டுமென்றும் சொல்லுகிறது. கோத்திரம் சூத்திரம் என்பதெல்லாம் பிதற்றல் என்று வாதிப்பவர்கள்கூட அண்ணன் பிள்ளை தம்பி பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ள இஷ்டப்படுவதில்லை; ஏனோ? ஐரோப்பியர்களும் மஹம்மதியர்களும் இப்படிச் செய்து கொள்கிறார்கள்; பர்மாவில் ஆண்ட அரசர்கள் தங்கள் சகோதரிகளையே மணந்தார்கள். இந்த ஸமூகங்களில் இப்பழக்க வழக்கங்களால் நிதர்சனமாய் ஆரோக்கியக் குறைவு பரம்பரை க்ஷீண மடைதல் முதலிய கெடுதல்கள் ஏற்படக் காணோம். அப்படி ஏற்பட்டிருந்தால் உலகத்திலேயே முற்போக்காளரெனக் கருதப்படும் ஐரோப்பியர்கள் இப்பழக்கங்களைப் பின் தொடர்வார்களா? அப்படியிருக்க, நமது சீர்திருத்தக்காரர்கள் தங்களுக்குக் குரு ஸ்தானத்திலிருக்கும் ஐரோப்பியரின் நடத்தையைச் சிற்றப்பன் பெண்ணை மணப்பதென்ற சின்னக் காரியத்தில் மட்டும் பின்பற்ற ஏன் இஷ்டப்படவில்லையோ? அது வெகு காலத்து வாஸனையால் மனதுக்கு வெறுப்பை உண்டுபண்ணுகிறது போலும். இப்பேர்ப்பட்ட வெறுப்புத் தானே பலபட்டறைக் கலியாணம், ஒரு கோத்திரத்திலேயே மணப்பது, விவாஹரத்து முதலிய புதுப் பழக்கங்களில் இவர்கள் மோகம் கொண்டாலும் ஆஸ்திகர்களைத் துன்புறுத்தும்? சீர்திருத்தக்காரர்களாவது, "எங்களுக்குக் காரணம் சொல்லத் தெரியாது, ஆனால் என்ன இருந்தாலும் சிற்றப்பன் பெண்ணை மணப்பதென்றால் பிடிக்கவில்லை" என்ற நொண்டிக்காரணம் ஒன்றுதான் சொல்லலாம். ஆஸ்திகர்களோ 'ஹிண்டு கோடு' செய்யத் துணியும் சீர்திருத்தங்களெல்லாம் சாஸ்திர விரோதம் என்றும் பெரியோர் கையாண்ட பழக்கங்களுக்கும் உபதேசங்களுக்கும் முரணென்றும் நம்புகிறார்கள். அவர்கள் மனதைப் புண்படுத்தும்படி அந்நிய ஸர்க்கார் அந்நிய மதஸ்தர் இவர்கள் பலத்தைக் கொண்டு ஸநாதன தர்மத்தை அழிக்க முயலுவதைவிட அக்கிரமம் வேறுண்டோ?

இந்தச் சீர்திருத்தங்கள் சாஸ்திர விரோதம் என்றால், "ஓகோ, தற்காலத்துப் பிராமணர்கள் மனுநீதி வழுவாமல் தான் நடக்கிறார்களோ? எந்தத் தொழில் வேணுமானாலும் செய்யத் தயாராயிருக்கிறார்கள். தங்களுக்கு விதிக்கப்பட்ட அத்யயனம் அத்யாபனம் முதலியவையை முற்றிலும் துறந்துவிட்டார்கள்; சாரதா சட்டம் போன்ற அடிப்படையான மாறுதல்களை அங்கீகரித்ததோடில்லாமல் 20 வயது, 25 வயதான பெண்களைக்கூடக் கலியாணம் செய்து கொடுக்காமல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்; இவர்கள் தர்மசாஸ்திரம் பேசுவது வெகு அழகாயிருக்கிறதே!"

என்று ஏசவும் ஏசுகிறார்கள். கலிக்கு இதெல்லாம் உண்மை யென்றே வைத்துக் கொள்வோம். இருந்தாலும் என்ன ? சாஸ்திரத்தை நம்பி சாஸ்திரப்படி நடக்கும் ஒரு பிராம்மணனோ மற்றவர்ணத்தவன் ஒருவனோ இருக்குமளவில் அவனை இவ்விதம் ஸர்க்கார் பலத்தைக் கொண்டு ஹிம்ஸிக்கலாமா ? காலப் போக்கால் ஆசாரங்களில் மாறுதல்கள் ஏற்பட்டு வந்திருப்பது வாஸ்தவமே. ஆனால் மாறுதல் செய்ய வேண்டும் என்ற பிடிவாதத்தினால் செய்யப்பட்ட மாறுதல்கள் அல்ல அவை. அந்த அந்தக் காலத்திலும் ஆஸ்திகர்களும் ஸகல சாஸ்திரவல்லவர்களும் தீர்க்கதர்சிகளும் அனுபவம் மிக்கவர்களும் சுயநலம் கருதாதவர்களுமான பெரியார்கள் இந்த விஷயங்களைப் பரிசீலனை பண்ணி ஸத்ஸம்பிரதாயங்களை ஒட்டி சில மாறுதல்களை அனுமதித்திருக்கிறார்கள். எல்லா விதத்திலும் சாஸ்திரப்படியும் ஸம்பிரதாயப்படியும் நடக்காதவர்களும் தாங்கள் தர்மத்தினின்றும் வழுவின அளவுக்கு துக்கித்து வந்தார்களே யொழிய அதைப் பெருமையாகச் சொல்லிக்கொண்டதில்லை. உலகத்தின் ஹிம்ஸையால் நடத்தையில் சில குறைவுகள் ஏற்பட்டிருந்தபோதிலும் ஸமூகத்தின் நோக்கத்தையும் மதிப்பையும் பெற்ற சாஸ்திர முறையில் பூர்ண நம்பிக்கையும் அதைக் கைப்பற்றி நடப்பது தான் சிரேயஸ் என்ற துணிபும் அவர்களிடையே நழுவாமல்தான் இருந்தது. ஊனை வளர்த்து இஷ்டம்போல் செய்து சிற்றின்பங்களை அடைந்து மிருகத்தைப் போல் காலந்தள்ளுவதே மேலான நோக்கம் என்ற கொள்கையிலிருந்து உதிக்கும் 'ஹிண்டு கோடு' போன்ற சீர்திருத்தங்கள் ஆரியதர்மத்திற்கு எள்ளளவும் பொருந்தா.

வாரிசு பாத்தியம் சம்பந்தமாகக் கமிட்டியார் சிபாரிசு செய்திருக்கும் மாறுதல்களும் நம் ஸமூஹத்திற் கடிப்படையான தர்மத்தையே அலக்ஷியமாய்ப் புறக்கணிக்கின்றன. ஸ்திரீகளுக்குச் சுதந்திரமளிக்க வேண்டியது அத்யாவசியம், அது சொத்துரிமையாலேயே சித்திக்கக்கூடியது, ஆகையால் பிள்ளைகளுக்குக் குடும்ப சொத்தில் பாகம் கொடுப்பது போல் பெண்களுக்கும் கொடுக்கவேணும் என்கிறார்கள். ஆனால் பெண்களுக்கு அரைபாகம் போதுமாம். இது என்ன கணக்கோ, நமக்குப் புரியவில்லை ! பெண்கள் இவ்விதம் கிடைக்கும் சொத்தைத் தானவிக்ரயம் முதலிய ஸமஸ்த அதிகாரத்தோடு உபயோகப் படுத்தலாம் என்று வேறு சிபாரிசு செய்திருக்கிறார்கள். இதுமட்டுமா ? பெண்களுக்குப் பாகம் கொடுப்பதால் பிள்ளைகளுக்குக் கிடைக்கும் வீதம் குறைந்து விடுமல்லவா ? இதற்கு ஒரு யுக்தி பண்ணினார்கள். குடும்ப சொத்தில் ஒருவன் தனக்குக் கிடைக்கும் பாகத்தைத் தனக்குப் பத்துப் பிள்ளைகளிருந்தாலும் அவர்களுக்குச் சம்பந்தமில்லாமலும் அவர்களனுமதி பெறாமலும் தன் இஷ்டப்படி முழுவதையும் செலவிடலாம். அப்படி அதை உதறிவிட்டு அவர்களை நடுத்தெருவில் நிறுத்தினால் அது அவர்கள் தலையெழுத்து என்று கமிட்டியார் வேதாந்தம் பேசுகிறார்கள். குடும்ப சொத்தை தன் இஷ்டம்போல் விநியோகம் பண்ணலாம் என்ற உரிமை 'தாயாபாகம்' என்ற சட்டமுறையை அனுஸரிக்கும் வங்காள மாகாணம் ஒன்றில் மட்டும் தான் வெகுகாலமாய் வழங்கி வருகிறது. இந்தியாவிலுள்ள பாக்கி ஸமஸ்தப் பிரதேசங்களிலும் அமுலிலிருக்கிற 'மிதாக்ஷர'ச் சட்டப்படி ஒருவன் குடும்ப சொத்தாய் அடையும் சொத்தில் (தான் சுயேச்சையாய்த் தன் படிப்பையும் ஸாமர்த்தியத்தையுங் கொண்டு சம்பாதித்ததில் அல்ல) அவனுக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகள் பிறந்த மாத்திரத்திலேயே பங்காளிகளாகக் கருதப்படுகிறார்கள். தவிர, அண்ணன் தம்பிகளோ, சிற்றப்பன் மக்கள் பெரியப்பன் மக்களோ ஓரே அவிபக்த குடும்பமாக இருந்து வந்தால், அதில் ஒருவன் பிள்ளை இல்லாமல் இறந்தால் அவன் சொத்து வீதம் அந்தக் குடும்பத்திலுள்ள அடுத்த ஆண் வாரிசுகளுக்குள் வீதாசாரமாக வருக்கப்பட்டு

வருகிறது. இந்தச் சட்டம்தான் அநாதியாக விளங்குகிற ஹிந்து கூட்டுக் குடும்பம் (Hindu joint family) என்ற பெரிய கட்டிடத்திற் கல்திவாரமாயிருக்கிறது. பிறந்த மாத்திரத்தில் தகப்பன் சொத்தில் பிள்ளைகளுக்கு வீதம் உண்டு என்ற சட்டத்தை மாற்றிவிட்டால் ஹிந்து கூட்டுக் குடும்பம் சிதறிவிடுமல்லவா? அந்த மகத்தான காரியத்தைச் செய்வதே நம் கமிட்டியாரின் ஒரு முக்கிய நோக்கம். காரணம் என்ன தெரியுமா? அவிபக்த குடும்பங்கள் நாளடைவிலே காலத்தின் விளைவாலும் நாகரிக வளர்ச்சியாலும் குறைந்துகொண்டுவந்துவிட்டனவாம். ஆகையால் அவைகளை அடியோடு ஒழிப்பதே நலமாம்! எப்படியிருக்கிறது யோசனை? சோம்பேறிகள் அண்ணன் தம்பி சோறு போடுவான் என்று தாம் ஒரு வேலையும் செய்யாமல் பொழுதுபோக்குவதற்கு இந்தப் பொது சொத்து உரிமை முக்கியக் காரணம் என்று கமிட்டியார் கண்டுபிடித்திருக்கிறார்களாம். ஆகையால் குடும்ப சொத்தில் காலணக்கூட எதிர்பார்க்க முடியாது என்று முடிந்து விட்டால் பிள்ளைகள் ஒவ்வொருவனும் அக்கறையாகப் படித்துப் பிழைப்புக்கு வழி தேடிக்கொள்வானும். ஒருவன் தன் உழைப்பாலும் புத்திசாலித்தனத்தாலும் சொத்துச் சேர்த்தால் அதைக் கொண்டு அண்ணன் தம்பிகளையும் மற்ற உறவினர்களையும் அவன் போஷிக்கக் கடமைப்பட்டவன் என்று எதிர்பார்ப்பது அநியாயமாம்.

இந்த விபரீத புத்தியின் பயனைக் கமிட்டியார் செய்திருக்கும் பிரேரபணைகள் ஹிந்து கூட்டுக் குடும்பத்தை அழிப்பதோடு நிற்கமாட்டா. ஒவ்வொருகுடும்பத்தின் சொத்தும் சின்னபின்னமாவதற்கு இதுதான் வழி. பெண்களுக்கு வீதம் கொடுத்தால் தகப்பன் செத்தவுடன் மாப்பிள்ளை பாகத்திற்கு வந்துவிடுவான். சொத்தைப் பிரித்துக் கொடுக்க இஷ்டப்படாத வரையில் பிள்ளைகள் பெண் வீதத்தின் கிரயத்தைக் கொடுக்கத் தயாராயிருக்கவேண்டும். வெகு குடும்பங்கள் முதலற்ற குடும்பங்களாகவே இருப்பதால் கடன் வாங்கியோ சொத்தின் ஒரு பங்கைப் படுமோசமான விலைக்கு விற்றோ தான் மாப்பிள்ளை நக்ஷத்திரய்யனை திருப்தி செய்து வழியனுப்பலாம். குடும்பத்தின் கதி என்ன ஆகும், அண்ணன் தம்பிகளுக்கும் அக்காள் தங்கைகளுக்கும் உள்ள நட்பு எப்படியாகும் என்று யோசித்துப் பாருங்கள். இந்தியாவில் விவசாயத் தொழில் க்ஷீணமடைந்து வருவதற்கு ஸ்தாவர சொத்துப் பல சில்லரையாகப் பிரிவுபட்டு வருவது (fragmentation of holdings) முக்கியக் காரணம் என்று பொருளாதார சாஸ்திர ஆராய்ச்சியாளர் முறையிடுகிறார்கள். இந்தப் பிரிவினையை இன்னும் ஜாஸ்தி பண்ணுமல்லவா பெண்களுக்கு சொத்தில் வீதம்கொடுக்கும் ஏற்பாடு? தாயாதியை விட வேறு சத்துருக் கிடையாது என்று உலக வழக்கு. சொத்தில் பங்கு வீதம் கேட்பவனே தாயாதி. தாயாதிக் காய்ச்சல் கொண்டாடும் அண்ணன் தம்பிகளுக்குள் இருக்கும் அசட்டுச் சண்டைகளால் நமது கிராமாந்தர வாழ்வு அழிந்து வந்தது போதாதென்று பெண்களும் தாயாதிச் சண்டையில் சேர ஏற்பாடு செய்திருக்கிறார்கள் போலும் கமிட்டியார். இதனால் பெண்களுக்கு நல்லது செய்வதாக எண்ணுகிறார்களே, அதைப் போன்ற அசட்டுத்தனம் வேறு கிடையாது. நமது ஸமூஹத்தில் பெரும்பாலான குடும்பங்களும் சொற்பச் சொத்துள்ள குடும்பங்களே. அவைகளில் பெண் விஷயமாகச் செலவு செய்யப்படும் பொருள், விஞ்சின சொத்தில் பிள்ளைகளுக்குக் கிடைக்கும் வீதத்தைவிட ஜாஸ்தியாகவே இருக்கிறது. அப்படி இருந்தும் தங்கை தமக்கைகளிடம் உள்ள அன்பினாலும் குடும்ப கௌரவத்தை உத்தேசித்தும் தகப்பன் இறந்த குடும்பங்களில் கூடப் பிள்ளைகள் தங்கள் அந்தஸ்துக்கு மீறிச் செலவு செய்து நல்ல வரன்தேடி அக்காள் தங்கைகளை மணம் செய்வித்து வைப்பதும் அவர்களுக்கு உசிதமான காலங்களில் சீர்

வகைகள் செய்வதும் எல்லோரும் அறிந்த விஷயம். இது இப்படி இருக்கப் பெண்ணுக்குச் சொத்துரிமை, வீதம் என்றெல்லாம் பேசஆரம்பித்தால், கலியாணம் கார்த்திகை என்பார்களே இவ்விதச் சுபகருமாக்கள் மூலமாய் ஒரு பெண்ணுக்காக ரூ. 5000 சந்தோஷமாகச் செலவு பண்ணப்பட்டு வரும் குடும்பங்களில் அந்தப் பெண்ணுக்கு வீதம் வகுத்தால் ரூ. 2000 கூடத் தேறுமல் போகலாம். அதைக் கொடுத்து விட்டால் அண்ணன் தம்பிகள் அப்புறம் திரும்பிப் பார்க்க மாட்டார்கள். பெண்ணின் கதியோ பெண்ணை வைத்துக்கொண்டு விவாஹம் நடத்தவேண்டுமே என்று கவலையுறும் தாயின் கதியோ என்ன ஆகும்? பிள்ளையைப் போல் பெண்ணும் தன் வயிற்றில் பிறந்தவ ளல்லவா, தகப்பன் அவளுக்கும் சொத்துக் கொடுக்க விரும்புவது இயல்பு தானே என்று கேட்கிறார்கள் கமிட்டியார். அப்படி இயல்பானால், 'உயில்' பண்ணிச் சொத்தில் தன் வீதம் பூராவையும் வேணுமானாலும் பெண்ணுக்கு எழுதி வைக்கப் பூரண உரிமை தகப்பனுக்கு இருக்கும் இக்காலத்திலும், இம்மாதிரி 'உயில்'கள் ஸகஜமாகச் செய்யப் படுகின்றனவா என்பது கவனிக்கத் தகுந்தது. நூற்றில் இரண்டு குடும்பத்தில் கூட தகப்பன் 'உயில்' மூலம் பெண்களுக்குக் குடும்ப சொத்தில் தன் வீதத்தையோ தன் சுயார்ஜிதம் பூராவையுமோ கொடுப்பதில்லை என்பது எல்லோரும் அறிந்த விஷயம். காரணம், தகப்பனுக்குப் பெண்ணிடம் அன்பில்லை என்பதல்ல; பூரண அன்பும் அதன் மூலமாகவும் உலக அனுபவத்தின் பயனாகவும் அடைந்த அறிவும் சேர்ந்து, பெண்ணுக்கு வீதம் என்று கால்காசை ஒதுக்கி வைத்துக் 'கிருகச் சித்திரம்' பண்ணுவதைவிட அவளுடைய க்ஷேமத்தைத் தேடும் வகையில் முழுப் பொறுப்பையும் தன் பிள்ளைகளிடம் விட்டு விடுவதே பெண்ணுக்கு சுகமும் சந்தோஷமும் உண்டாவதற்குத் தகுந்த வழி, என்று அவனுக்கு போதிக்கின்றன.

இதுபோலவே, குடும்பம் என்றால் தான் தன் பெண்டாட்டி தன் குழந்தைகள் (அதுவும் மனுவர்காத குழந்தைகள் தான்) என்ற மேல் நாட்டுப் பழக்கத்துக்கு மாறாக நம் தேசத்தில் அண்ணன் தம்பிகள், வயதான தாய் தகப்பன், தாய்தகப்பனில்லாத அண்ணன் தம்பி அக்காள் தங்கை குழந்தைகள் இவர்களெல்லோரையும் போஷிப்பது உடம்பு வலியும் ஐசுவரியமும் சம்பாதிக்கும் திறமையும் உள்ளவர்கள் அக்குடும்பத்தில் யார் இருக்கிறார்களோ அவர்கள் எல்லோருடைய பொதுக் கடமை என்ற மகத்தானகொள்கை நம்ஸமூகத்தைவெகுகாலமாக ரக்ஷித்து வருகிறது. இதனாலேயே பஞ்சகாலத்திலும் கூழோ கஞ்சியோ கிடைக்கும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருந்து வந்தது. குடும்பத்தாரோடு மட்டும் நில்லாமல், இந்த உதார நோக்கம் தர்மசிந்தனையை வளர்த்து ஊரில் ஒருவன் பட்டினி கிடந்தானானால் மற்றவருக்குச் சோறு உள்ளே போகாமல் துன்புறுத்தி வந்தது. பசியினால் அநாதைகள் செத்து நடுத்தெருவில் விறைத்துக் கிடப்பது மேல் நாட்டு நாகரிகத்தில் மோகங் கொண்டவர்கள் ஆதிக்கம் அடைந்திருக்கும் இந்தக் காலத்திலே தான் நம் நாட்டில் பார்க்க நேரிட்டிருக்கிறது. இவ்விதக் கஷ்டங்கள் ஸமூகத்தை வாட்டக்கூடாதென்பதற்காக ருஷ்யாவில் பொது உடைமைக் கொள்கையைக் கையாளுகிறார்கள். இங்கிலாந்து முதலிய தேசங்களில் வயோதிகர்களுக்கும் வியாதிக்காரர்களுக்கும் தாய்தகப்பன் இல்லாதவர்க்கும் ஸர்க்கார் படியளக்கவேணும் என்றெல்லாம் ஏற்பாடு தடபுடலாய் நடக்கிறது. அப்படிப் பட்ட நிர்ப்பந்தங்கள் எதற்காகச் செய்ய வேண்டி வந்தது அத்தேசங்களில்? உதார மனப்பான்மையும் சுயநலம் கருதாது உலகம் க்ஷேமமடைந்தால்தான் ஒவ்வொருவனும் சுகமாயிருக்கலாம் என்ற நம்பிக்கையும் அந்த ஜனங்களிடையேவளர்க்கப்படாததுதான்காரணம். நமது சாஸ்திரங்களும் ஸ்மிருதிகளும் இந்த தர்மசிந்தனையை நம் ஸமூகத்தில்

விருத்தி பண்ணினதற்கு முக்கிய உதவியாக இருந்துவந்திருக்கின்றன. இவைகளின் கட்டுப்பாடுகளைத் தகர்ப்பது ஸமூகத்தைச் சீர்குலைப்பதோடு இல்லாமல் உலகத்திற்கே நல்வழி காட்டியாயிருக்கும் ஆசாரத்தை நாசமாக்குவதாக அல்லவா ஆகும் ?

சீர்திருத்தக்காரர்கள் இந்த விடத்தில் குறுக்கிடுகிறார்கள். "சாஸ்திரம், சாஸ்திரம் என்கிறீர்களே, சாஸ்திரமென்றால் ஒரு முகமாய்ப் பேசவேண்டாமா ? யாக்ஞவல்க்ய ஸ்மிருதியை விக்ஞானேசுவரர் ஒருவிதமாக அர்த்தம் பண்ணிவிட்டார். அதே ஸ்மிருதியை ஜீமூதவாஹனர் இன்னொரு விதமாக அர்த்தம் பண்ணிப் பலவிதத்திலும் மாறுபாடான தாயாபாக விதிகளைக் கற்பித்து விட்டார். இவர்கள் இருவர் சொல்லுவதும் ததத்துவமாக இருக்க முடியாது. ஒன்று சரி இன்னொன்று தப்பு என்று முடிந்தால் எது சரி எது தப்பு என்று நாம் கண்டோமா? அப்படித் தீர்மானிக்க முடியாத வரையில் சௌகரியத்துக்கு எது ஒத்திருக்கிறதோ அதை நாம் பின்பற்றுவதற்கு ஏன் தயங்க வேண்டும் ?" என்று சமர்த்தாய்ப் பேசுகிறார்கள். இவர்களை ஒரு கேள்வி கேட்போம். பிரஸ்தானத்ரயம் என்ற பிரும்ம ஸூத்திரம், பகவத்கீதை, உபநிஷத்துக்கள் இவைதான் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்ற மூன்று வேதாந்தங்களுக்கும் அடிப்படையான ஆதாரம். இந்தப் பொதுவான கிரந்தங்களை ஒவ்வொரு ஆசாரியரும் ஒவ்வொரு தினுசாய் அர்த்தம் பண்ணியிருப்பதால், இவர்கள் எல்லோரும் உண்மையைக் கண்டுபிடித்தவர்கள் என்பது ஒப்புக்கொள்ள முடியாத விஷயம், இவர்கள் வாதங்களில் எது சரி எது தப்பு என்று நாம் கண்டுபிடிக்க முடியாது, ஆகையால் அதைப்பற்றி அனாவசியமாய்ச்சிரமப்படாமல் அவன் அவன் புத்திக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதை அனுஸரிக்க வேண்டியது என்று யுக்தி வாதம் சொன்னால் என்ன நேரிடும் ? ஆயிரம் மனிதர்களுக்குள் ஆயிரம் மதபேதங்களல்லவா உண்டாகும் ? மேல்நாடுகளில்கூட இவ்விதம் மத விஷயங்களில் தன்தலையாட்டம் உதவாது, கட்டுப்பாடு ஸமூக அமைதிக்கே இன்றியமையாதது என்று நம்புகிறார்கள். ஆகையால் அத்வைதியாய்ப் பிறந்தவன் 'சங்கரர் காட்டிய வழி எனக்குப் போதும்' என்றும், அவ்விதமே மற்ற ஆசாரியர்களின் சிஷ்யர்களும் குரு உபதேசமே தங்களுக்குச் சான்று என்றும் அனுஸரித்து வருகிறார்கள் நாளதுவரையில். ஹிண்டு கமிட்டியார் இதெல்லாம் முழு முட்டாள்தனம் என்று எண்ணலாம். ஆயினும் இந்த மனப்பான்மையுள்ள ஜன ஸமூகத்தில், ஸ்மிருதிக்காரர்களிடையேயும் வியாக்கியானக்காரர்களிடையேயும் மதபேதமிருப்பதால், தலைமுறை தலைமுறையாய் ஒரு ஸ்மிருதியையோ நிபந்தத்தையோ பின்பற்றி வந்தவர்கள் இப்பொழுது அதில் அசௌகரியம் இருப்பதாக எண்ணினால் அதைப் புறக்கணித்து மனம்போன போக்காய்ப் போகலாம் என்று பிரசாரம் பண்ணுவது கண்ணியமா ?

"வேதாந்தம் எப்படிப் போனாலென்ன, காசா பணமா? ஸ்மிருதி, சட்டம் இதெல்லாம் வேறு சமாச்சாரம். சொத்துரிமையல்லவாபாதிக்கப்படுகிறது? சொத்துக் கொடுக்கும் விஷயத்தில் அவனவன் தன் அன்பிற்குப் பாத்திரமாயிருப்பவர்களுக்குக் கொடுக்க எவ்விதத் தடையையும் அனுமதிக்கலாமா ?" என்கிறார்கள். இந்த மனப்பான்மை நம் ஸமூகத்தின் தர்மத்திற்கும் நாகரிகத்திற்கும் முற்றிலும் முரணானது. தாய் தகப்பன் ஈமக்கடன்களையும் முன்னோர் நற்கதி அடையச் செய்யவேண்டிய சடங்குகளையும் ஒருவன் சரிவரச் செய்யவென்றே அவனுக்குக் குடும்ப சொத்தில் பாத்தியம் அளிக்கிறது சாஸ்திரம். எள்ளும் தண்ணீரும் இறைப்பவன் இருந்தால்தான் கரையேறலாம் என்பது மூட நம்பிக்கையாயிருக்கலாம். ஆனால் அதைத் துறந்தவர் ஹிந்து ஸமூகத்தைச் சார்ந்தவர் என்று எப்படிச் சொல்லிக்கொள்ள முடியும்? கூழுக்கும் ஆசை

மீசைக்கும் ஆசையா? பித்ரு காரியங்கள் நம் மதத்திற்கு அடிப்படையென்று ஒப்புக்கொள்ளுபவர் அவைகளை அனுஸரித்த சொத்துரிமைகளை மாற்ற எப்படித் துணிவர்?

இந்தவிடத்தில்தான் நம் சீர்திருத்தக்காரர்கள் பிரும்மாஸ்திரத்தைத் தொடுக்கிறார்கள். "மதம் மதம் என்கிறீர்களே, மதம் இந்தக்காலத்தில் பிழைத்திருக்க வேணுமானால் நம் ஸமூகத்தினுள்ள ஆயிரக்கணக்கான பிளவுகள் நிவர்த்திக்கப்படவேண்டும். ஹிந்துக்கள் 30 கோடி பேருக்கும் ஒரே சட்டம் அமைப்பதே ஹிந்து ஸமூகத்தின் ஒற்றுமையை உண்டாக்குவதற்கு முக்கிய ஸாதனம்" என்று உத்கோஷிக்கிறார்கள். தொன்னைக்கு நெய் ஆதாரம் என்ற குதர்க்கம்போல் இருக்கிறதல்லவா? அதிருக்கட்டும். இவர்கள் பிரேரேபணைகள் ஹிந்து ஸமூகத்திற்கு ஒரே சட்டம் தந்துவிடுமா என்று பார்ப்போம். Sir William Jones, John D. Mayne என்ற சட்ட நிபுணர்கள் இது முடியாத காரியம் என்று எடுத்துரைத்திருக்கிறார்கள். ஏன், கமிட்டியாரே அலிய ஸந்தானம், மருமக்கத்தாயம் என்ற ஸம்பிரதாயங்களும் இவை போன்ற மற்றத் தனி ஸம்பிரதாயங்களும் இருந்துவரும் கோஷ்டிகள் 'ஹிந்து கோடு' செய்யும் கட்டுப்பாடுகளுக்கு உட்படாமல், பழைய சட்டங்களையே பின்பற்றி நிற்கட்டும் என்று இவைகளை ஒதுக்கி யிருக்கிறார்கள். தவிர, பூஸ்திதியைப் பற்றியவரையில் 'ஹிந்து கோடு' யாதொரு விதமான மாறுதலையும் செய்ய முடியாது. ஏனெனில் தற்கால அரசாங்க முறைப்படி இந்த விஷயத்தில் மாறுபாடுகள் செய்ய மாகாணங்களுக்கு உரிமையே ஒழிய மத்திய ஸர்க்காருக்கு அதிகாரம் இல்லை. ஆகவே கமிட்டியார் தாங்கள் வாலிழந்தது போல் மாகாணங்களும் வாலிழுக்கச் சம்மதிக்க வேணுமே என்று ஏங்குகிறார்கள். மாகாணங்களுக்கு வால் அவசியம்தான் என்று தோன்றுகிறது என்று வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுது, "ஒரு ஸமூகத்திற்கு ஒரு சட்டம்" என்ற கமிட்டியின் கூற்று என்ன ஆகிறது?

உள்ளபடி ஒரு ஸமூகம் — அதுவும் 30 கோடி ஜனம் நிறைந்த ஸமூகம் — அதற்கு ஒரு சட்டம் என்பது ஸாத்தியமா அல்லது அவசியமா? இது அவசியமில்லை; ஸாத்தியமும் படாது; 'கோடு' செய்து கொண்ட ஒவ்வொரு தேசத்திலும் பெரிய அநர்த்தங்கள் விளைந்திருக்கின்றன என்பதை ஜெரல்டு ஹேர்ட் என்பவர் "சுதந்திர மனிதன்" என்ற தன் கிரந்தத்தில் விவரித்துள்ளார்*. சட்ட பூர்வமாக ஒற்

---

*" This fact, that when there are rational constitutions or even written ones, these documents never account for the actual behaviour, initiatives and inhibitions of a society, has been brought out in a study of the Icelandic constitution, when through a homogeneous society and an isolated environment for a short while a stabilised state (stabilised between the individual and the community) was established. It has been found that the constitution gives little idea of the actual mores. The real law was the rule of conduct which accepted, unanalysed good taste imposed, and of course imposed without law court or fine. The sagas show that real rule of life working, and the histories confirm that this was so. We see then that of many of the laws of the constitution, much that they forbade was simply a dead letter and much that they allowed the current morality would not permit. Had, then, these Icelanders suddenly found themselves, by loss of their unwritten and indeed unspoken code, wholly dependant on their constitution, they would have found it impossible to preserve their moral standard of life. That is what is befalling all of us acutely individualised moderns." (*Footnote on page 52 of Gerald Heard's 'Man the Master'*)

றுமை வருவதா யிருந்தால் ஹிந்துக்கள் ஜாடாவும் முகம்மதியராகி விடவேண்டியது என்று ஒரு சட்டம் பிறப்பித்து விடலாமே! அப்பொழுது ஹிந்து ஸமூகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே ஒற்றுமை ஏற்பட்டுவிடும், பாகிஸ்தான் முதலிய பிரஸ்தாபங்கள் அழிந்துவிடும்! இது கேலிக் கூத்தல்லவா? ஹிந்து ஸமூகத்துக்கு நவீன யாக்ஞவல்கயர்களும் மனுக்களும் ஒற்றுமை தேட வேண்டிய அவசியமேயில்லை. பழக்க வழக்கங்களில் பதினாயிரம் வித்தியாஸம் இருந்தாலும் தர்மத்தில் நம்பிக்கை என்ற ஒரு பெரிய ஸம்பந்தம் இந்த ஸமூகத்தை வெகு காலமாய் ஒன்று சேர்த்து உஜ்ஜீவிக்கச் செய்திருக்கிறது. தர்மத்தைக் குலைத்தால் ஒற்றுமை நாசமாகும். ஹிந்து மதம், ஒரு கர்த்தா, ஒரு புஸ்தகம் இவைகளை ஆதாரமாகக்கொண்ட மற்ற மதங்களைப் போன்றதல்ல. இது கேவலம் தத்துவ விசாரமோ, கடவுள் வழிபாடோ இவைகளை மட்டுமே போதிக்காமல், வாழ்நாளை நடத்துவதற்கு வழிகாட்டியாக நின்று நம்பிக்கை, அனுஷ்டானம், வைதிகம் லௌகிகம் எல்லாவற்றையும் ஸமரஸப் படுத்தி அதிகாரி பேதத்தை அனுஸரித்து ஸமூகத்தையே அமைத்திருக்கிறது. ஆகையால் மதம் வேறு, பழக்க வழக்கங்கள் வேறு என்று வாதிப்பவர்கள் ஹிந்து மதத்தின் மர்மத்தையே அறியாதவர் என்று விளங்கும். இவர்களைப் பின் தொடர்ந்து நம் தர்மத்தைக் கெடுத்துக் கொண்டால் பொட்டையனைப் பின்பற்றின பொட்டையர் கதிதான் ஆகும். இந்த 'ஹிந்து கோடு' நமக்கு வேண்டாம். சாஸ்திரத்தில் நம்பிக்கையில்லாதவர் எக்கேடு கெட்டோ போகட்டும். தாங்கள் கெட்டது மல்லாமல் பிறரைக் கெடுப்பதற்கு அவர்கள் செய்யும் சூழ்ச்சிக்கு மட்டும் நாம் சற்றும் இடம் தரக்கூடாது.

குடும்ப ரக்ஷகன்

எல்லா ஊர்களிலும், மருந்து கடை, மளிகை, ஷாப்புகளில் கிடைக்கும்.

அன்னதான பலன்

[நா. கனகராஜையர்]

கும்மி யடியுங்கள் கும்மி யடியுங்கள்
குதித்துக் கும்மி யடியுங்களே—தினம்
துதித்துக் கும்மி யடியுங்களே.

தம்மை மறந்தன்ன தானம் வழங்கினோர்
தாங்கிய கீர்த்தி தழைக்கவெனக்—கும்மி

அம்மையு மப்பனு மாகிய வாண்டவன்
அன்னபி ஷேகம் விரும்பு கின்றான்
இம்மையி லேழையர்க் கன்ன மிடுவதை
யேற்ற முடையதென நினைப்பான். 1

எத்தனை கோயில் மனித னெடுப்பினும்
ஈடு மெடுப்பு மிலா விறைவன்
அத்தனை கோயிலின் மிக்கதா மென்றுதான்
ஆக்கிய கோயிலி னுள்ளிருப்பான். 2

உலகமே யாலய மொவ்வோ ருயிருமே
உத்தம வாலய மென்று கொளும்
அலகிலா வாற்றல் படைத்த பரம்பொருட்கு
அன்ன மிடுவ தெளிதிலையே. 3

அட்ட குலாசல மன்ன மெனவைத்தும்
அவனி முழுதும் காட்டி டினும்
அட்ட வுருவ முடைய பொருளுக்கோர்
அன்ன நிவேதன மாகுவதோ? 4

ஆயினு மன்ன நிவேதனம் செய்யவும்
அபிஷேகம் செய்யவும் எண்ணுபவர்
நாயக னல்லருள் கொள்ளத் துணிந்தொரு
நல்ல வழியைப் பிடிப்பதுண்டே. 5

மலையி னுருவுள தெய்வமே யாயினும்
வாழைக்கனி தேங்காய் தும்பை மலர்
இலைதளிர் தண்புனல் காட்டி நிவேதனம்
யாவும் தருதல் எளிதலவோ. 6

எங்கும் நிறைந்த வொருவனைப் பூசனை
எவ்வுயி ருள்ளும் புரிவதற்கே
பொங்கும் கருணையால் அன்னவன் வைத்ததோர்
புண்ணிய மார்க்கம் அறிமின்களோ. 7

பசியொடு வந்தவர் யாவரே யாயினும்
பகையொடு நண்பு முறவு முறை
நிசியொடு நண்பகல் யாவும் நினைவற
நேர்மையி னுண்டி யுதவுவதே. 8

உண்டியை வேண்டிய தக்கவர்க் கீயும்
உதவி உயிர்தரு பேருதவி
கண்டிலம் வேறினை யென்னவே பண்டைய
காவிய கர்த்தர் உரைத்தனரே. 9

பொன்னும் மணியும் பொருந்தக்கொடுப்பினும்
போது மெனுமொழி காண்பரிதே
இன்னும் பெரிய பொருளொதை யீயினும்
யாவரும் திருப்தி யடைவதில்லை. 10

உண்ண விருந்தவர் உள்ள மகிழவே
உண்டி கொடுப்பதில் உள்ளசுகம்
எண்ண லரிய பிறவகைத் தானங்கள்
யாவிலு மில்லை யிதுவுறுதி. 11

நெல்லின் மலிந்து வளங்கள் பொலிந்து
நிரம்பிய நந்திரு நாட்டினிலே
நெல்லின் விளைவு தரும்பெரும் புண்ணியம்
நேயமோ டன்ன மிடுவதன்றோ. 12

சாதி குலங்களைப் பார்ப்பதுண்டோ பசி
தங்கும் வயிற்றை நிரப்புமவர்
நீதி நெறிகள் நினைப்பதுண்டோ வென்றும்
நித்திய தானநலந் தெளிவோர். 13

அன்பு நிறைந்த பரஞ்சோதி முன்போர்
அதிதியை நாடி யவர்விருப்பால்
இன்பு நிரம்பச் சிசுவிருந் திட்டதும்
எங்கும் பரவிய வுண்மை யன்றோ. 14

இளையான் குடிப்பழி மாறர் மழையிருள்
எகி முளைநெல் லெடுத்தளமே
களையாமல் வீட்டுமரம் விறகாக்கியே
காட்டி புண்ணியம் கேட்டதுண்டே. 15

திருவிய லூரினில் தந்தை திதியிலே
சேர்ந்த புலையன் பசி போக்கியே
அருமையாய்க் கங்கை யழைத்து நீராடிய
'ஐயாவாள்' கீர்த்தி யறிந்ததுண்டே. 16

அன்ன தானத்திலே தன்னிக ரற்றவர்
ஆயிரம் கோடி பணம் மதியார்
அன்னதானத்தையே நாளெல்லாம் செய்தவர்
ஆனந்த மூர்த்தி யடிபுகுந்தார். 17

போற்றத் தருவது பாடத் தருவது
புண்ணிய மூர்த்தியவர் புகழே
சாற்றத் தருவது நாடெலாம் கேட்கவே
தானதரும மகிமை யன்றோ. 18

சோழ வளநாட்டில் தேப்பெருமாள் நல்லூர்
தோன்றிய வெண்ணுயிரர் குலத்தில்
எழமை பூண்டுயர் அசுவத்த சாஸ்திரி
என்னுமோ ரந்தணர் முன்பிருந்தார். 19

வேதத்தை யோதியே நூல்கள் பயின்றனர்
வேதம் விதித்த நிலை தவறார்
பாதத்தை நாடியே நாரண மூர்த்தியின்
பற்று விடாமல் இருந்தனரே. 20

சுப்பிரமணியர் அன்னம்மா ளென்னவே
சொல்லும் இருவர் பிறந்ததன்பின்
ஒப்பிலாக் கீர்த்தி புனையவே தானத்தின்
உத்தம சிலர் பிறந்தனரே. 21

நாம ரூபத்தைக் கடந்தவன் றன்னையே
நாளும் நினைத்த மனமுடையார்
ராமசாமிப் பெயர் பூண்டன ராயினும்
நாடறி நாமம் சிவனென்பதே. 22

பாப்பணி பூண்ட பரசிவ பக்தியும்
பாம்பிற் படுத்தவன் பக்தியுமே
யாப்புற வுள்ள மனமுடையா ரவர்
எய்திய கீர்த்தி யளப்பரிதே. 23

உஞ்ச விருத்தியே தந்தை யெடுத்ததும்
ஊரிலே யுள்ளதோர் கோயிலிலே
வஞ்ச மிலாத பஜனைகள் செய்தனர்
வாழ்ந்ததுங் கண்டு வளர்ந்தனரே. 24

உரிய பருவத்துப நயனம் பெற்றார்
ஓதினர் வேதம் முறைப்படியே
அரிய குணங்களுக் காகர மாயவோர்
அன்பினுருவை மணந்தனரே. 25

ஒழுக்கம் நிறைந்த சிவகாமி யென்றவவ்
வுத்தமி நற்றுணை பூண்டதனுல்
இழுக்க மிலாமலே யில்லற வாழ்வில்
இருந்தனர் பற்பல நாளிவரே. 26

திருபுவனத்துள செம்மைச் சிவத்தினைத்
தேடி வணங்கும் வழக்கமுடன்
ஒருபொழு தாயினும் வீண்பொழு தின்றியே
உத்தம வாழ்வு நடத்தினரே. 27

தந்தையு மன்புத் தமையனுந் தம்மைத்
தனித்துப் பிரிந்தே சிவம்புகவே
தந்தையும் தாயும் தமையனு மெல்லாம்
சதாசிவ மென்றே துணிந்தனரே. 28

திருபுவனத்துள்ள செல்வர் சிலர்சிலர்
சிவன்பணி பூணுக வென்றிவரை
அருமையின் வேண்டவே வேதனம் பெற்றனர்
ஆங்குச் சிலநாள் இருந்தனரே. 29

ஆயினுமுள்ள மவன்பணி பூண்பதற்
காலய வேதனம் கொள்வதனைத்
தீயினுந் தீதென வெண்ணியதாலிவர்
சிந்தனை நொந்து பிரிந்தனரே. 30

தேப்பெருமாள் நல்லூர் சென்று புகுந்தனர்
தேப்பெருமாளின் திருவிழவில்
கோப்புள வீட்டையும் பூமியையும் விற்றுக்
கொண்ட பொருளினு லன்னமிட்டார். 31

எம்பெருமான் பணி பூண்பதே வாழ்வினில்
எங்குந் திரிந்து சிவதருமம்
அம்பொ னிலாதவர் செய்ய வியல்வதை
ஆருமறியவே வாழ்வுறலாம். 32

என்று துணிந்தனர் காவிரிப் பட்டினம்
எய்தினர் நம்பன் திருவிழவில்
நன்று துணிந்தனர் அன்னம் வழங்கினர்
நல்லவர் நற்பொருள் தந்திடவே. 33

அன்ன காலத்திலே அன்னதானத்திலே
ஆன்ற புகழினர் நன்னிலத்தின்
பொன்னின் மலியுங் கயத்தூர்ப் புகழ்பெறு
புண்ணியர் சீனிவாசைய ரென்பர். 34

அந்த மறையவர் செய்த தருமத்துக்
கானதுணையாய் இவரிருந்தார்
மந்தமதி யெமன் செய்தகொடுமையால்
மற்றப் பெரியோர் மறைந்தனரே. 35

தஞ்சை நகரை யடுத்துள தெய்வத்
தலங்களி லன்று முதலிவரே
நெஞ்சை யுருக்கும் திருப்பணி தாங்கி
நிறைபுகழ் பூண்டு விளங்கினரே. 36

ஆண்டுக ளைம்பதாய் எம்பெருமானமர்
ஆலயந் தோறும் விழாக்களிலே
ஈண்டு மனித்தர் பசித்துய ராற்றிய
எற்றமுடையா ரிவரலவோ. 37

கும்பா பிஷேகங்கள் எங்கு நிகழினும்
கூடிய மக்களுக்கு அன்னமிடும்
செம்பாக மானதிருப்பணி உண்மையில்
தேப்பெருமானூர்ச் சிவனுரிமை. 38

பன்னிரண் டாண்டுக்கொரு முறையே வரும்
பாவனமான மகாமகத்தில்
முன்னொரு நான்குமுறையிவர் போனகம்
முற்றுமளித்தனர் பற்பலர்க்கே. 39

கும்ப கோணத்திலே லக்ஷதீபம் பெறக்
கோயிலமைந்த புதுமையினில்
கும்பகோணத்தவர் போற்றி மகிழவே
கொட்டினுர் அன்னமலை யிவரே. 40

உண்டி யுதவியே பற்பல மக்கள்
உணர்விற் புகுந்த விவர்தமது
பண்டி நிறையவே தானப்பொருளிலே
பட்டவுமியையும் தொட்டதில்லை. 41

அரிசிதருகனி பால்தயிர் நீயவண்
ஆகுமுறையில் அனுப்புகவே
உருசி யுளவின்ன காய்கறி போக்குவ
துன்பணி யென்ன விவருரைப்பார். 42

என்ன வுரைப்பினும் எவ்வளவாயினும்
ஏனென்று கேளா தளித்தவரே
முன்னமிருந்த திருவினு மிக்கு
முழுப்புகழ் மேவி விளங்கினரே. 43

கேட்ட வளவிற் குறையினுஞ் சொன்ன
கெடுமறந்தே யவைவந்திடினும்
போட்ட படியே திருப்பிவிடுவது
புண்ணிய வானிவர் செய்கை யென்பார். 44

ஆதலின் யாவரும் இன்னவர் கேட்டவை
அவ்வப்போதே வரப்போக்கிடுவோர்
காதலின் வந்து வணங்கி வாய்பொத்தியே
காத்திருப்பார் பலசெல்வர்களே. 45

இன்னவர் இன்னவை ஈயத்தகுமென
எங்ஙன மோவிவர் முன்னறிந்தே
அன்னவர் அன்னபொருளை யுதவவே
ஆணையிட்டே பெறுவா ரளந்தே. 46

ஆயிரமாயிர மக்கள் பசித்துயர்
ஆற்றவே யெய்திய பண்டங்களின்
ஆயிரமாயிர மீறிவளர் கணக்கு
ஆரு மறியார் இவர் குறியார். 47

உடுத்தும் உடையோ முழநான்கே யாகும்
உடலெங்குந் தோன்றிய முண்டுகளால்
அடுத்தவர் பார்க்க விகாரமே தோற்றினும்
ஆனந்தக் காட்சி நிரம்பி நின்றார். 48

எத்தனையோ மக்கள் உண்டு மனமகிழ்ந்
தேப்பம் விடவே யுணவிடுவோர்
அத்தனை மக்களும் உண்டதன் பின்பிவர்
ஐயமெடுத்தே சிறிதுண்ணுவார். 49

தான நலம்பெற வந்த பொருள்களில்
தன்வயிற்றுப்பசி போக்குதற்கே
மானம் பெரிதௌ வின்னவர் கொஞ்சமும்
வாங்கும் வழக்கம் இலாதவரே. 50

உடலுற முண்டுகள் மாறி மறையவே
உடலுயிர் நோயின் மருத்துவனைத்
திடமுற நம்பியே புள்ளிருக்கு வேளூர்ச்
செல்வன் வயித்திய நாதனையே 51

நேர்ந்து சிறுபொருள் சேர்த்தனர் அங்கது
நேரி லவனுக்குற வமைத்தார்
தேர்ந்து பலப்பல வூரிலுஞ் சென்று
சிறந்த தருமங்கள் செய்துவந்தார். 52

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளருள்
தம்மை மறந்த பெரியவருள்
தனத்தினைத் தேடாதுதான தருமத்தின்
தண்மை நிறைந்த மனத்தருளே. 53

ஒப்புயர் வற்றவர் இன்னவரென்ப
துலக மறிந்துள வுண்மையன்றோ
திப்பிய வாழ்வினில் நிற்கும் இவர்குணம்
செந்தமிழ் நாடு மலிந்துளதே. 54

மூப்பும் வளர்ந்து தளர்ந்து மனநிலை
முற்றிலு முன்போ லமைந்திருக்க
யாப்புறச் சங்கராசாரிய மடத்தில்
எண்பத்தாறுண்டு மிருந்தனரே. 55

முதுமை புகுந்து மனத்தினி ளமையால்
முன்போல் தருமநெறி நிலைத்த
பொதுமை தெளிந்த பெருங்குணச் செல்வரைப்
போற்றிப் புகழாத மக்களுண்டோ. 56

எங்குந் தருமத்தின் மெய்ப்புக ழோங்கி
யிலங்க வறுமைப் பெருநிலையில்
பொங்கு மகிழ்ச்சியால் வாழ்ந்திருந்தாரெனப்
புண்ணியர் சீர்த்தி வளர்ந்துளதே. 57

அறஞ்செய வேண்டுவோர் செல்வமிலாதும்
அமலனருளால் அறஞ்செயலாம்
புறஞ்சுவர் பூசுவோர் செல்வ மிருந்துமே
புண்ணிய மார்க்க மறிவதில்லை. 58

ஐம்பது காசுந்தங்கையி லில்லாமலே
அன்னம் பல்லாயிர மக்களுக்கே
ஐம்பது நல்லாண்டின் மேலுமளித்தவர்
அன்பு நெறிசிவ நல்குவதே. 59

திரிபுவனங்களின் வாழுயிர் போற்றும்
சிவனையே நெஞ்சில் நினைந்தவராய்
திருபுவனத்திலே முத்தியடைந்தனர்
தேப்பெருமாள் நல்லூர் வாழ்சிவனே. 60

எண்ணும் எழுத்தும்

[வே. நாராயணன்]

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது கொன்றை வேந்தன். எண் என்றால் கணித நூலும், எழுத்து என்றால் எழுத்ததிகாரம் முதலிய ஐந்து அதிகாரங்களையுடைய இலக்கண நூலும் குறிக்கப்பட்டது என்பர் பழைய உரையாசிரியர். கணிதமும் இலக்கணமும் இல்லையானால் ஒருவன் அறிவாளியாகக் கருதப்படமாட்டான். இலக்கண அறிவு இல்லையானால் நூல்களிலுள்ள கருத்துக்களை நன்றாகப் புரிந்துகொள்ள முடியாது. இன்ன "இன்ன சொற்களுக்கு இன்ன இன்ன பொருள். இந்தச் சொற்றொடரில் இன்ன அணி அமைந்துள்ளது. ஆதலால் இதற்குப் பொருள் இவ்வாறு கொள்ளவேண்டும். இந்தச் சொல்லமைதியும் எழுத்தமைதியும் பொருளை மயக்கமுறக் காரணமின்றித் தெளிவாக அறிவுறுத்துகின்றன. இந்தச் செய்யுள் இன்ன யாப்பிலே அமைந்துள்ளது" என்றெல்லாம் நாம் அறிந்துகொள்வதற்கு இலக்கண உதவி தேவை, இன்றியமையாதது.

அது போலவே, உலகத்திலே வாழ்க்கைக்குரிய பண்டங்களை வாங்குவதற்குக் கூட கணிதம் பயன்படுவதாகின்றது. கணிதம் என்றால் வெறும் கூட்டல் கழித்தல் பெருக்கல் வகுத்தல் கணக்குகளை மட்டும் குறிப்பதாகக் கொள்ளக் கூடாது. ஆகாயத்திலுள்ள கோள்களையும் நக்ஷத்திரங்களையும் சந்திர சூரியர்களின் கதியையும் ஆராய்ந்து அறிந்து அவற்றை வாழ்க்கையிற் பயன்படுத்திக் கொள்வதும் ஜ்யோதிஷ சாஸ்திரமாகிய கணித நூற் பிரிவினாலேயே கைக்கூடும். நவீன மேனாட்டு விஞ்ஞான நூல்கள் அனைத்தையும் கணிதம் என்னும் சொல்லாலேயே குறிப்பிடலாம். அரசியல், சுகாதாரம், பொருளாதாரம் முதலியவற்றிலே கூட கணிதம் ஊடுருவிக்கொண்டுள்ளது. வாக்குரிமை யளிப்பதற்கு நேர்மையான வழி என்ன என்று கண்டுபிடிப்பது கணித நூலின் உதவியைக் கொண்டேயாகும். ஜனசங்கிகை முதலியவற்றால் கணித சாஸ்திரங்களாலுமே, சுகாதார விதிகளும் வாழ்க்கைத் திட்டங்களும் அமைக்கப்படுகின்றன. நாட்டின் செல்வ நிலை, பணம் கொடுக்கல், வாங்கல், பாங்கிகள், வரித் திட்டங்கள், நாணயச் செலாவணி இவை யெல்லாம் கணித சாஸ்திரங்களையே நம்பியிருக்கின்றன. விஞ்ஞான ஆராய்ச்சியாளருக்குப் பலதுறைகளிலும் உதவுவது கணித சாஸ்திரமே.

ஆகவே, கணித நூலறிவு இல்லையென்றால் உலக வியவகாரமே நடைபெறாது. அவ்வியவகாரம் இனிமையாக நடைபெற வேண்டுமென்றால் இலக்கியங்களால் மானிடர்க்கு உண்டாகும் அபூர்வ சுகங்களை அளிக்கும் சங்கீத சாஹித்தியங்களுக்கும் கவிதைகளுக்கும் உயிர் நாடியான இலக்கண அறிவு இன்றியமையாதது. இது பற்றியே, 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்ற முதுமொழி எழுந்தது.

இம் முதுமொழியிலே ஒரு சிறந்த கருத்து அமைந்திருப்பதை இலக்கண உதவிகொண்டு நாம் அறிகின்றோம். 'கண்' என்னும் உவமையின் நயம் அறிந்து இன்புறத் தக்கது. ஒற்றைக் கண்ணனுக்கு நேரான பார்வை இராது; எந்த வஸ்துவையும் நாம் காண்பது போலத் தெளிவாக அவனாற் காண இயலாது. அதனாலேயே நாம் 'இரு கண்கள்' என்று கூறாமலே 'கண்' என்கிறோம். 'என் கண்முன் நில்லாதே' 'கண்ணாற் கண்டேன்' முதலிய சொற்பிரயோகங்களிலும் இவ்வுண்மை காணப்படுகின்றது. ஆகையால் 'எண்' மட்டுமோ

'எழுத்து' மட்டுமோ ஒருவனை அறிவுக் கண்ணுடையனுக்காது என்னும் கருத்து இம்முதுமொழியிலே பொதிந்துள்ளது. வெறுமனே கவிதைகளிலே மட்டும் கவனஞ் செலுத்தி, உலக வியவகாரங்களுக்கு அவசியமான கணிதப் பயிற்சி சிறிதுமின்றி இருப்பவனைப் பித்தன் என்கிறோம். வெறுமனே உலக வாழ்க்கையிலே மட்டும் ஈடுபட்டு, அது ஒழுங்காக நடைபெறுதற்குரிய மேனாட்டு விஞ்ஞான நூல்களையும் சோதிடம் முதலியவற்றையும் கற்று உலகாயதனுய்த் திரிபவனை நவரஸங்களையும் அனுபவிக்கத் தெரியாத மடையன் என்றே கவிஞர்கள் கருதுகிறார்கள். இருவகை அறிவும் படைத்தவனே கண்படைத்த மானிடன் ஆவான்.

இதே கருத்து திருக்குறளிலும் அமைந்துள்ளது.

எண்ணென்ப வேனை எழுத்(து) என்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

என்பது கல்வியதிகாரத்து இரண்டாஞ் செய்யுள். உயிர் வாழ்க்கையை விரும்புவோர் அனைவரும் எண்ணையும் எழுத்தையும் கற்றல் வேண்டும். அவையே அவனுக்குக் கண்ணாகி உலக வாழ்க்கையை ஒளியுடையதாகக் காட்டுகின்றது. இந்தக் கண்களை யுடையவர்களே கண்ணுடையவர்; எண்ணறிவும் எழுத்தறிவும் இல்லாதவன் ஊனக்கண்களை யுடையவனுயினும் பிறவிக் குருடனே யாவான். பிறவிக்குருடனுக்கு, கண்கள் ஸ்தானத்தில் முகத்தில் இரண்டு புண்கள் இருக்குமன்றோ? எண்ணையும் எழுத்தையும் கல்லாதவர் முகத்து இரண்டு புண்ணுடைய பிறவிக் குருடர்களோடு ஒப்பாவர்.

ஆனால் எண்ணறிவும் எழுத்தறிவும் கல்வியாற் பெற்றால் மட்டும் போதாது; பிறவிக் குருடு நீங்கிப் பார்வை பெற்றால் மட்டும் போதுமா? கண்களைக் கொண்டு காட்சி யின்பங்களை நுகராதிருந்தால் கண் பெற்றதாற் பயனுண்டோ? அதுபோலவே, சகல அறிவுத் துறைகளையும் தம்முள் அடக்கிக் கொண்டுள்ளவையான எண்ணையும் எழுத்தையும் கசடறக் கற்றபின், அக் கல்வி யறிவினால் அறிந்துகொண்டவாறு நிற்கவேண்டும். இக்கருத்தைப் புலப்படுத்தவே,

> கற்கக் கசடறக் கற்பவை, கற்றபின்
> நிற்க அதற்குத் தக

என்ற குறள் ஒழுக்கத்தைக் கூறும் அதிகாரத்தில் வைக்கப்படாமல், 'கல்வி' அதிகாரத்தின் முதற் செய்யுளாக அமைக்கப்பட்டுள்ளது.

நல்ல வாழ்க்கை வாழவேண்டும். உயிர் வர்க்கத்தைச் சேர்ந்தவன் என்பதை பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மிருகங்களுக்கும் மானிடர்க்கும் வித்தியாசம் என்ன? கல்வியறிவும் அவ்வறிவின்படி நடத்தலுமே யன்றோ? மிருகங்களைக் குருட்டுயிர் என்னலாம். நாமும் பிறவியாற் குருட்டுயிர்களே. குருவினிடம் சென்று இப்பிறவிக் குருட்டைப் போக்கிக் கொள்ளவேண்டும். குருவை இறைவனுகவே கொள்ளவேண்டும். 'எழுத்தறிவித்தவன் இறைவ'னுகும். எண்ணறிவித்தவனும் இறைவனே. ஆக்கவும் காக்கவும் அழிக்கவும் வல்ல இறைவனை யன்றி, வேறு யாரால் பிறவிக்குருடு நீங்கும். இறைவனருள் குருமுகமாகப் பாய்கின்றது. அவ்வறிவு நமக்குள்ள அறிவீனமாகிய குருட்டை நீக்கிவிடுகின்றது. அறிவுக் கண்ணைத் திறந்து பார்க்கிறோம். இறைவனே பற்பல சாதுக்களின் வடிவுகொண்டு நல்வழி காட்டுபவர்களாகி ஆசரித்துக் காட்டுகிறான். இதுபற்றி இறைவனுக்கு 'ஸந்த:' (ஸாதுக்கள்) என்னும் பெயர் ஒன்று ஆயிரம் பெயர்களுள் ஒன்றாகக் காணப்படுகின்றது. குருவும் ஆசார்யனுமான இறைவனால் குருடு நீங்கி நல்வழிப் படுத்தப்பெற்று, கசடக் கற்ற கல்விக்குத் தக்கவாறு தைரியமாய் நடப்பவரே கண்ணுடைய மக்களாவார்கள்.

கடவுளின் அருள்

[ஜயலக்ஷ்மீ - ஆர். ஸ்ரீனிவாசன்]

"அம்மா! மணி எவ்வளவு?" என்றுள் சமையல்காரி காமாக்ஷி சமையல் அறையில் லட்டுபிடித்த வண்ணம்.

கூடத்தில் ஊஞ்சலில் அமர்ந்திருந்த வீட்டு யஜமானி குட்டியம்மாள் "ஒன்றடித்துப் பத்து நிமிஷமாச்சு" என்று சுவரில் மாட்டியிருந்த கடியாரத்தைப் பார்த்துச் சொன்னுள்.

"அதான் கேட்டேன். பன்னிரெண்டரைக்கே ரயில் வந்துவிட்டிருக்க வேண்டுமே. இன்னும் மோட்டார் வரக்காணுமேன்னு, சமையல் எல்லாம் ஆறி அவலாய் போறதே........" என்றுள் காமாக்ஷி.

"இதோ வந்துவோ. குழந்தையும் கையுமா வராளோ இல்லையோ. சத்தே நாழிதான் ஆகும்........" என்று குட்டியம்மாள் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே வாசல்புறம் மோட்டார் வந்து நின்றது. குட்டியம்மாளும் வீதிப்புறம் எழுந்து சென்றுள். காமாக்ஷியும் கையைக்கூட அலம்பிக்கொள்ளாமல் கூடத்திற்கு ஓடிவந்தாள்."

குழந்தை பிரேமா மோட்டாரிலிருந்து இறங்கியவள் ஒரே ஓட்டமாக ஓடிவந்து, "மாமீ, நான் வந்துட்டேன் இதோ" என்று முகத்தில் ஆனந்தத் தாண்டவமாடக் காமாக்ஷியை கட்டிக்கொண்டாள். தான் மடி என்பதையும் மறந்து, குழந்தையை வாஞ்சையுடன் கட்டித் தழுவி முத்தமிட்டு "வந்துட்டையாடா, கண்ணூ. நீ வராமே பண்டிகை நிறக்குமோ" என்று கொஞ்சினுள் காமாக்ஷி.

காரிலிருந்து குழந்தையும் கையுமாய் இறங்கின சுமார் இருபத்திரண்டு வயது பெண், பிரேமாவின் தாயார், "அடிக் கழுதை, மாமி மடியோ என்னமோ? தொட்டுவிட்டாயே" என்று தன் பெண்ணை அதட்டியவண்ணம் குட்டியம்மாளிடம் கைக்குழந்தையை கொடுத்துவிட்டு ஊஞ்சலில் வந்து அமர்ந்தாள்.

"என் கண்ணுட்டி தொட்டால் தேவலேம்மா. இன்னுமொருதடவை குளித்துவிட்டால் போறது, என்ன பிரமாதம். வாடா, கண்ணு குளிப்பாட்டறேன். எத்தனை நாழியாகி விட்டது, பாவம், பசிக்குமே" என்று மறுபடியும் குழந்தையைத் தழுவி முத்தமிட்டாள்.

குட்டியம்மாள் தன் பேரக்குழந்தையைச் சீராட்டிக்கொண்டே, "ஏண்டீ லலிதா! மாப்பிள்ளை வரலே?" என்று வினவினுள்.

"அவாளுக்கு சேர்ந்தாப்போல் பத்து நாள் 'சர்க்யூட்' இருக்காம். இந்த கவர்ன்மெண்ட் உத்தியோஸ்தாளுக்கு லீவாவது ஒண்ணுவது. சதா உழைக்க வேண்டியதுதான்." பண்டிகைக்கு நானும் ஊரிலே இருக்கமாட்டேன். அப்பாவும் நாலு கடிதம் எழுதி போட்டாச்சு, பாவம். நீ குழந்தைகளுடன் (சேவகன்) ராமைய்யாவைத் துணைக்கு அழைத்துக்கொண்டு போயூட்டு வா" என்றூர். அதான் நான்மாத்திரம் புறப்பட்டு வந்தேன். அப்பா எங்கேம்மா?" என்றுள் லலிதா.

"அப்பாவா? அடுத்தாத்து மாமா காரிலே கோர்ட்டுக்கு போனுர்" என்றுள் குட்டியம்மாள்.

அதற்குள் காமாக்ஷி, "லலிதாம்மா, டிரங்கு திறவுகோலைக் கொஞ்சம் தரேளா? சட்டை, பாவாடை எடுத்துக்கறேன் குழந்தைக்கு குளிப்பாட்ட........" என்றுள். லலிதா திறவுகோல் கொடுத்ததும், அப்பொழுதுதான் காரிலிருந்து ராமைய்யா கொணர்ந்து வைத்துவிட்டுப் போன பெட்டியைத் திறந்து காமாக்ஷி பிரேமாவிற்கு மடிச்சட்டை பாவாடை, 'டவல்' எல்லாம் எடுத்துக்கொண்டாள்.

குட்டியம்மாள் "வாடி, மினுமினுக்கி. (அவள் பேத்தியை செல்லமாக இந்தப் பெயரிட்டு அழைப்பது வழக்கம்) அப்புறம்; நான் குளிப்பாட்டுகிறேன். மாமி முதலில் குளித்துவிட்டால்தானே மடியுடன் சமையலைத் தொட்டுப் பரிமாற முடியும்" என்று பேத்தியை அன்புடன் அழைத்தாள்.

ஆனால் குழந்தை பிரேமா, "ஊ கூம், நான் மாட்டேன், போ. மாமிகிட்டே தான் குளிப்பேன். ஹேமா எங்கே மாமி?" என்று காமாக்ஷியின் கையை இறுகப் பிடித்துக்கொண்டாள். குழந்தையின் அன்பென்ற மதுவுண்டு, 'அவள் பள்ளிக்கூடம் போயிருக்காம்மா. நாலு மணிக்குள் வந்துவிடுவாள்" என்றவாறு காமாக்ஷி சாவிக்கொத்தை லலிதாவிடம் திருப்பிக் கொடுத்துவிட்டுப் பிரேமாவை ஸ்நான அறைக்கு அழைத்துச் சென்றாள்.

* * *

ஸ்ரீமான் கனகசபாபதி ஐயர் சென்னையில் ஹைகோர்ட் ஜட்ஜ். அவர் மனைவிதான் குட்டியம்மாள். அவர்களுடைய ஏகபுத்திரி லலிதாவின் கணவர் ஒரு ஐ. சி. எஸ். அவர் சேலம் ஜில்லாவில் சப்கலெக்டராக இருந்தார். ஐயர் தன் ஒரே பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஒவ்வொரு தீபாவளி பண்டிகைக்கும் அழைப்பது வழக்கம். அதே போல் இந்தத் தடவையும் அழைக்கவே, சப் கலெக்டருக்கு வேலை மிகுதியால் வரச் சரிப்படாததால், மனைவி, குழந்தைகளை மாத்திரம் மாமனாரகத்திற்கு அனுப்பித் தந்தார்.

காமாக்ஷியம்மாள் தற்சமயம் ஒன்றரை வருட காலமாக ஜட்ஜ் அகத்தில் சொற்ப சம்பளத்திற்குச் சமையல்வேலை பார்த்துவந்தாள். அவள் கணவன் சுப்பிரமணியன் சென்னை ஜயலக்ஷ்மீ பாங்கியில் குமாஸ்தா உத்தியோகத்திலிருந்தான். இரண்டு வருடத்திற்கு முன்பு அவன் வேலையாக இருந்த பாங்கில் மேலதிகாரியொருவன் பெருத்த மோசடியொன்றை செய்து விட்டு, அந்தப் பழியை அநியாயமாக சுப்பிரமணியன் மீது சமத்தியதோடு அவனை முதலாளிக்குக் காட்டிக் கொடுத்துவிட்டான். முதலாளி அதை நம்பி சுப்பிரமணியனை வேலையிலிருந்தும் விலக்கியதோடில்லாமல் அவன் பாங்கிக்கு 2000 ரூபா அபராதப் பணமும் கட்டவேண்டுமென்று கட்டளையிட்டார். சுப்பிரமணியன் மானி, பரம யோக்கியன். இந்தப் பெருத்த அவமானத்தை தாளாமல் தன் வீட்டுச் சாமான் வகையராவையும், மனைவி மீதிருந்த நகைநட்டுகளையும் விற்று அபராதப் பணம் செலுத்திவிட்டு, ஒருநாள் இரவு யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் எவ்விடத்திற்கோ காணுமல் ஓடிப் போய்விட்டான்.

ஏழை காமாக்ஷி என்ன செய்வாள்! பாவம்! திக்குத் திசையின்றி அலைந்து திரிந்து கடைசியில் சொற்ப சம்பளத்தில் ஜட்ஜ் வீட்டில் சமையல் வேலைக்கு அமர்ந்தாள். ஓழிவு நேரத்தில் அப்பளம் வடகம் முதலியன இட்டு, விற்று மானமாக பிழைக்கலானுள். ஜட்ஜ் மனைவி குட்டியம்மாள் காமாக்ஷியின் மீதும் அவள் குழந்தையின்மீதும் இரக்கம் கொண்டு தங்கள் பங்களாவின் 'ஔட் ஹௌஸில்' ஒரு அறையை அவர்களுக்காக ஒழித்துக் கொடுத்தாள்.

காமாக்ஷி தங்கமான பெண், அமரிக்கையாக இருப்பாள். போன வருடம் லலிதா பிரசவத்திற்காக வந்தபொழுது குழந்தை பிரேமா காமாக்ஷியிடம் நன்ருக ஒட்டிக்கொண்டு விட்டாள். பிரேமாவும் காமாக்ஷியின் பெண் ஹேமாவும் ஏறக்குறைய ஒரே வயதினர். லலிதா பிரசவித்திருந்தபொழுது குட்டியம்மாளுக்குப் பெண்ணிற்குப் பிள்ளைப்பேறு செய்வதற்கே கையாலாகவில்லை, பாவம். மேலும் அவள் ஒரு ஸ்தூல சரீரி, காமாக்ஷிதான் ஜடுதியில் சமைத்து மூடி வைத்துவிட்டு விழுப்புதொட்டுக் கொண்டு பிரேமாவைக் குளிப்பாட்டி, தலை பின்னி, பூ சூட்டி, சாப்பிடவைத்து, சகலமானதும் செய்வாள். ஒரொரு நாள் பிரேமா, ஹேமா இருவரையும் நிலாவில் உட்கார்த்தி சாதம் பிசைந்து கையில் தமாஷாகப் போடுவாள். ஒழிவு

நேரத்தில் குழந்தைகளிருவரையும் அருகில் அமர்த்திக்கொண்டு கதை சொல்லுவாள். சின்னச் சின்ன பாப்பா பாட்டுகள் (nursery songs) சொல்லிக் கொடுப்பாள். கோவிலுக்கு அழைத்துச் செல்வாள். விளையாட்டுக் காட்டுவாள். இவ்வாறாகப் பிரேமா காமாக்ஷியிடத்தில் ரொம்ப ஒட்டிக்கொண்டு விட்டாள். லலிதா புக்ககம் செல்லும்பொழுது பிரேமா தன் தாத்தா பாட்டியைவிட்டு பிரிவதைவிடக் காமாக்ஷி மாமியையும் ஹேமாவையும் விட்டுப் பிரிய மனமின்றி தேம்பித் தேம்பி அழுது தீர்த்தாள். காமாக்ஷிக்கும் கன்றைவிட்டுப் பிரியமாட்டாத பசுவைப்போல் துயரம் மென்னியைப் பிடித்தமுத்த, கண்களிலிருந்தும் கண்ணீர் உடைப்பெடுத்துப் பெருகிற்று.

இன்று அந்த அன்பர்களிரண்டு பெயரும் திரும்பவும் கூடினவர்களாய் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். லலிதாவும் குட்டியம்மாளும், சாப்பிட்டானதும் சற்றுப் பாய்மீது படுத்து, இளைப்பாறலானார்கள். குழந்தை பிரேமாவிற்கோ பொழுது போகவில்லை. எடுத்தாள் ஓட்டம் காமாக்ஷி மாமி அகத்திற்கு. காமாக்ஷி மாமி அப்பளம் இட்டுக்கொண்டே பிரேமாவுடன் வார்த்தையாடிக் கொண்டிருந்தாள். பிரேமா தன் தம்பியின் விளையாட்டைப் பற்றியும், தன் (கின்டர் கார்டன்) பிருந்தாவன பள்ளிக்கூடக் கூட்டாளிகளைப் பற்றியும் பலவிதமாகத் தன் கொஞ்சும் மொழிகளில் பெருமையடித்துக் கொண்டிருந்தாள்.

* * * *

மாலைப்பொழுது பள்ளிக்கூடம் விட்டதும் குழந்தை ஹேமா வீடு திரும்பியவள் பிரேமாவின் வரவை அறிந்து ஆனந்தக் களிப்புடன் பரபரவென்று கைகால் அலம்பிக்கொண்டு, தாயார் அடுப்பண்டை மூடி வைத்திருந்த காப்பியை எடுத்து மடக் மடக் என்று இரண்டே விழுங்கில் அருந்திவிட்டு ஜட்ஜ் பங்களாவை நோக்கி ஓடி வந்தாள்.

ஜட்ஜ் அவர்கள் கோர்ட்டிலிருந்து அகத்திற்குத் திரும்புகையில் அப்படியே டௌனிற்குச் சென்று அருமைப் பேர்த்திக்கு நிரம்பப் பட்டாசும், மத்தாப்பும் வாங்கி வந்து குழந்தையிடம் கொடுத்துவிட்டுக் காப்பி டிபன் சாப்பிடுவதற்காக உள்ளே சென்றார். அன்றைக்கு முந்திய நாளே குட்டியம்மாள் டௌனிற்குச் சென்று ஜவுளி தினுசுகளை வாங்கிவந்துவிட்டிருந்தாள்.

அப்பொழுதுதான் தாத்தா கொடுத்துவிட்டுச் சென்ற பட்டாசு, மத்தாப்பு தினுசுகளைக் கூடத்தில் விரித்திருந்த ரத்தின கம்பளத்தின்மீது பரப்பிக்கொண்டு பிரேமா அகமகிழ்ந்துகொண்டிருந்தாள். பிரேமா ஹேமாவைக் கண்டவுடன், “ஹேமா, ஹேமா! ஓடி வாயேன்! இதோ பார்! தாத்தா எனக்கு எத்தனை பட்டாசு வாங்கி வந்திருக்கார்! பூவாணம், விஷ்ணு சக்கிரம், பாம்பு வாணம், ஏரோப்ளேன் வாணம் எல்லாம் இருக்கே! நாளைக்கு நாம்பள் ரெண்டு பேருமாகச் சேர்ந்துண்டு விடலாமா?” என்று பெரும் மகிழ்ச்சியுடன் கைதட்டினள்.

ஹேமா ஆச்சரியத்துடன் கண்களை அகல விழித்து, பிரேமாவின் பட்டாசு, மத்தாப்புகளை விழுங்கி விடுபவள்போல் நோக்கினள்.

பிரேமா, “இவ்வளவு மாத்திரம் தானுன்னு நினைச்சயோ? எங்க பாட்டி நாளைக்கு நான் கட்டிக்கொள்வதற்கென்று ஜரிகைப் பாவாடை ‘சில்க்’ சட்டை எல்லாம் தச்சு வச்சுருக்காளே....ஏ....ஏ. உனக்கும் மாமி தச்சு வச்சுருக்காளோ?” என்று அழகாக ஒரு புறம் தலையை சாய்த்துப் பெருமையுடன் மொழிந்தாள்.

அக்கணமே ஹேமாவின் பாந்த முகம் சுண்டைக்காயளவு சுருங்கிற்று. கம்மிய குரலில் “நேக்கு அம்மா ஒண்ணும் தைக்கலையே. நாங்கள் ஏழைன்னு!” என்றாள்.

“மாமிக்குத்தான் பாட்டி சம்பளம் தாராளே?”

“அம்மூட்டேண்டு சம்பளம் வீட்டு செலவிற்கேபோறாதுங்காளே அம்மா.”

“போறாட்டா இன்னும் கொஞ்சம் குடுன்னு பாட்டியைக் கேட்டா தரா. எங்க

பாட்டியுண்டைதான் பெட்டியில் நிறைய பணம் இருக்கே."

"சரி அம்மாவைக் கேட்டுபார்க்கிறேன்."

பட்டாசையெல்லாம் கொண்டுபோய் உங்கம்மாவண்டை கொடுத்துவிட்டு வா. விளையாடலாம். ஐயே, அம்பி பாப் பாவை நான் இன்னும் பார்க்கவே இல் லேயே" என்று கண்களில் துளிக்கும் கண்ணீரைப் பாவாடை நுனியால் துடைத்துக்கொண்டு அந்த பட்டாசு தினுசுகளைப் பார்க்கச் சகியாதவள்போல் முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டு லலிதாவின் அறைப்புறம் ஓடினாள் பேதை ஹேமா.

இதோ வந்துவிட்டேன் என்று பிரே மாவும் பரபரவென்று அட்டைபெட்டி யொன்றில் அவைகளை வாரி நிறைத்துக் கொண்டு ஹேமாவைப் பின் தொடர்ந் தாள்.

* * *

அன்றிரவு ஹேமா தாயாரின் அருகில் படுத்துக்கொண்டு, "அம்மா, அம்மா, எனக்கு நாளைக்குக் கட்டிக்கொள்ள புதுப் பாவாடை தைத்திருக்கேயா?" என்று மெதுவாகத்தாயாரைத் தழுவிக்கொண்டு கொஞ்சும் குரலில் கேட்டாள். தாயார் குழந்தையை அன்புடன் தடவிக் கொண்டே "என்னிடம் புதுசு வாங்கப் பணம் ஏதடி கண்ணு?" என்றாள் கம்மிய குரலில்.

"ஏன் உங்கிட்டை பணம் இல்லே? ஜட்ஜ் மாமிதான் உனக்கு மாசாமாசம் சம்பளம் தாராளே?"

"அது நம் சாப்பாட்டுச் செலவிற்கே போதாதேடி கண்ணு."

"ஜட்ஜ் மாமி பெட்டிக்குள் நிறைய நிறைய பணம் இருக்காமே. பிரேமா சொல்லறாளே."

"அவா சும்மா சும்மாப் நமக்கு பணம் தரமாட்டாமா. நாம் செய்கிற வேலைக் கேற்றாப்போல் தான் கூலி கொடுப்பா. நாளைக்குப் பார்ப்போம், தூங்குடா கண்ணு" என்று சேயை தேற்றினாள் தாய்.

"ஆனால் நாளைக்கு நான் எண்ணெய் தேச்சுக்கமாட்டேன் போ" என்று சிணுங்கிய வண்ணம் வேறுபுறம் புரண்டு படுத்துக்கொண்டாள் குழந்தை.

காமாக்ஷி குழந்தையைத் தழுவிக் கொண்டு "அப்படி சொல்லப்படாதம்மா கண்ணு. நீ சுவாமியை வேண்டிக்கொள். நிறைய பணம் தருவார். அடுத்த தீபா வளிக்கு உனக்கு ஜோக்காய் பாவாடை சட்டை எல்லாம் வாங்கித் தருவேனும். நாம் ஜம்முனு பண்டிகை கொண்டாட லாமாம்" என்று பலவிதமாகத் தேறுதல் மொழிகள் சொல்லிக்கொண்டே கண் அயர்ந்தாள் அந்த கஷ்ட ஜீவி.

ஹேமாவிற்கோ லேசில் தூக்கம் வர வில்லே. "சுவாமி ஏன் நம்மை மாத்திரம் ஏழையாவச்சிருக்கார்? மிச்சவாளுக்கெல் லாம் நிறைய பணம் தாராரே? ஆனக்கே அம்மா சொல்றபடி தினம் சுவாமியை வேண்டிண்டால் நமக்கும் நிறையப் பணம் தருவாராக்கோம். நான் இன்னிக்கே பிடிச்சு தினம் சுவாமியை வேண்டிக்கப் போறேன். சுவாமீ, பகவானே! எங்கம் மாவுக்கு நிறைய பணம் தாயேன். அப்போ எங்கம்மா எனக்கு நிறைய புதுப்பாவாடை சட்டை எல்லாம் தைத் துத் தருவாள். சுவாமீ,பகவானே" என்று ஜபித்த வண்ணமே துயிலுற்றாள் பேதைக்குழந்தை.

* * *

காமாக்ஷி விடியற்காலே நான்கு மணிக் கெல்லாம் துயிலெழுந்து பல் தேய்த்து, வாசல்புறம் சாணித்தண்ணி தெளித்துக் கோலம் போட்டு, மங்களகரமாக செம் மண் பூசி, பிறகு ஜடுதியில் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு, குழந்தை குளித்த பிறகு சாப்பிடுவதற்காகச் சுக்கு வெல்லம் இடித்துவைத்து, கொஞ்சம் ரவா கேசரி யும் கிளறிவைத்தாள். ஏழை அகத்துப் பண்டிகை. குழந்தை ஹேமாவிற்கு ரவா கேசரிதான் பஞ்சபக்ஷ்ய பரமான்னம்! பிறகு ஜட்ஜ் வீட்டிற்கு ஓடிப்போய் பண் டிகை காரியத்தில் ஈடுபட்டாள் காமாக்ஷி.

* * *

ஏழு மணி சமயம் ஊரெங்கும் பட்பட் என்ற படாசு கொளுத்தும் சப்தமும்,

மத்தாப்பு கொளுத்தும் வாசனையும் தான். நம் நாட்டின் மகோன்னத பண்டிகையான தீபாவளிக் கொண்டாட்டத்தைத் தானும் பகிர்ந்துகொள்ளவேண்டிப் பகலவன் ஆகாயத்தில் பவனி வந்தான். நகரம் அனைத்தும் ஆனந்த கோலாகலத்தில் ஈடுபட்டிருக்க ஒரே ஒரு ஆத்மா மாத்திரம் துயரமேலீட்டால் துடித்துக் கொண்டிருந்தது.

அச்சமயம் காமாக்ஷி ஜட்ஜ் வீட்டுக் காரியத்தை முடித்துக்கொண்டு தன் அருமை குழந்தைக்கு ஆரத்தி சுற்றிக் கொட்டி எண்ணெய் ஸ்நானம் செய்விப்பதற்காக அவசர அவசரமாக வீடு வந்தாள்.

ஹேமா முகத்தை தூக்கிக்கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள். காமாக்ஷி மாக்கோலத்தின் மீதொரு பலகையைப் போட்டு, ஒரு தட்டில் ஆரத்தி கரைத்து வைத்தாள். பிறகு தாம்பாளமொன்றில் வெற்றிலைபாக்குப் குங்குமம் எல்லாம் எடுத்து வைத்துக்கொண்டே "சீக்கிரம் வாடா, கண்ணு. ஆரத்தி சுத்திக் கொட்டித் தலையில் இரண்டு கை எண்ணெய் வைக்கிறேன். நாழியாகிறது. மாமி அகத்திற்குச் சமைக்கப் போக வேண்டாமா நான்? இன்னொன்று சொல்ல மறந்தே விட்டேனே என்னையும் மாமி இன்னிக்குச் சாப்பிட அழைச்சிருக்காளே!" என்று அன்பொழுகக் குழந்தையை அழைத்தாள்.

"ஊகூம், நான் ஒன்னும் குளிக்கமாட்டேன் போ" என்று சிணுங்கினள் ஹேமா.

"ஏண்டா கண்ணு, என் மேல் என்ன கோபம்?" என்று காமாக்ஷி குழந்தையை அணுகித் தலைமயிரைக் கோதிவிட்டாள்.

"நீதான், புதுசு, பட்டாசு ஒன்னும் வாங்கித்தரலையே, நான் எதற்குக் குளிக்கணுமாம். மாட்டேன் போ" என்று பொருமினள் ஹேமா.

"சீ, பண்டிகையும் அதுவுமாய் அசடாட்டமா பிடிவாதம் பிடிக்கப்படாது. வா சீக்கிரம், எனக்கு நாழி ஆகிறது. அப்புறம் உங்கம்மா ஜட்ஜ் மாமியிடம் வசவு வாங்கிக்கொள்ளட்டுமென்று உனக்கு ஆசையா?" தாயாரின் இந்தப் பரிதாபம் ததும்பும் சொற்களைச் செவியுற்ற உடனே குழந்தையின் மென்மையான உள்ளம் மெழுகுபோல் கரைந்தது. "ஆனுக்கே எனக்கு அம்மா எண்ணெய் தேய்த்து மட்டும் குளிப்பாட்டு, புதுசில்லாமே ஆரத்தியும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம்" என்றாள் குழந்தை.

குழந்தை இவ்வளவுக்காவது இணங்கினளே என்று தாயாரும் அதற்குமேல் பேசாமல் மகிழ்வுடன் குழந்தையைக் குளிப்பாட்டுவதற்கு அழைத்துச் சென்றாள்.

* * *

குளித்த பிறகு குழந்தை ஹேமா ஆயிரம் ஒட்டுப்போட்ட கந்தல் பாவாடையையும், சட்டையையும் உடுத்து, சுவாமியின் மாடத்தின் முன்பு வந்து கைகூப்பி "சுவாமி! பகவானே! எங்கம்மாவிற்கும் நிறைய பணம் தந்து, எங்கம்மா எனக்குப் புதுப்பாவாடையும், நிறையப் பட்டாசும் வாங்கித்தரும்படி செய்யமாட்டாயா? சுவாமி! இனிமே நான் ரொம்ப ரொம்ப சமத்தாய்விடப் போறேனே........" என்று வாய்விட்டுச் சொன்னவாறு விழுந்து விழுந்து நமஸ்கரித்தாள். குழந்தையின் பிரார்த்தனையைச் செவியுற்ற காமாக்ஷி மனம் கலங்கினள்.

அதற்குள் வாசல்புறம் "அம்மா பார்ஸல்! காமாக்ஷியம்மாள் வீடு இது தானே?" என்று தபால்காரன் கூவினன்.

"நமக்கு யார் பார்ஸல் அனுப்பக் கிடக்கு. ஒருகால் அவர்........இரு........ சேச்சே........அவர் இருக்காது" என்று க்ஷணத்திற்குள் பலவாறு எண்ணியவாறு காமாக்ஷி வாசல்புறம் ஓடினள். தபால்காரன் அவள் கையில் இரண்டு சீட்டைக் கொடுத்துக் கையெழுத்து வாங்கிக்கொண்டு அவளிடம் நீண்டதொரு இன்ஷ்யூர் கவரையும், பெருத்த பார்சல் ஒன்றையும் கொடுத்துவிட்டுச் சென்றான்.

காமாக்ஷி நடுங்கும் கையில் அந்தக் கவரை உடைத்துப் பார்த்தாள். என்ன ஆச்சரியம்! அதில் ஐந்து பத்து ரூபாய் நோட்டுகளும், ஒரு கடிதமும் இருந்தன. அதில் அவள் கணவன் கையெழுத்தைக் கண்டாள். புதையலைக் கண்டெடுத்தப் பரம ஏழைக்குக்கூட அச்சமயம் அவளுக்குண்டானவளவு ஆனந்த மேற்பட்டிராது! கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது :—

"என் அருமைக் கண்மணி காமாக்ஷிக்குக் கொள்ளை கொள்ளை........ம் ....ம்,

உன் புண்ணிய விசேஷத்தால் எனக்குத் தற்சமயம் பெங்களூர் கவர்ன்மென்ட் எலக்ட்ரிக் பேக்டரியில் மாதம் 150ரூபா சம்பளத்திலொரு உத்தியோகம் கிடைத்திருக்கிறது. கையில் கொஞ்சம் பணம் சேர்ந்தபிறகு உனக்கு என் இருப்பிடத்தைத் தெரிவித்து, உன்னையும் இங்கே அழைத்து வரலாமென்றிருந்தேன். நான் என்னமோ என் நண்பன் கிட்டுவின்மூலம் ரகசியமாக உன் இருப்பிடத்தையும், மற்றும் நம் குழந்தையின் க்ஷேம சமாசாரத்தையும் அவ்வப்பொழுது கடிதம் மூலம் கேட்டறிந்துகொள்கிறேன். தீபாவளிக்காக உனக்கும் குழந்தைக்கும் பெங்களூர் filature silkல் புடவை, பாவாடை, சட்டை துணி எல்லாம் பார்ஸல் செய்தனுப்பி இருக்கிறேன். மற்றப்படி பண்டிகை செலவிற்காக இத்துடன் ஐம்பது ரூபாய்கள் அனுப்பி இருக்கிறேன். ஹேமாவிற்கு நிரம்பப் பட்டாசு வாங்கிக் கொடு. குழந்தை என்னை நினைத்துகொள்கிறாளா? அடுத்த வாரம் லீவ் எடுத்துக்கொண்டு பட்டணம்வந்து உங்களை அழைத்து வரலாமென்றிருக்கிறேன். கங்கா ஸ்நான சமயத்திற்குச் சரியாக பார்ஸல் உங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்பி இருக்கிறேன். இருவருக்கும் ஆசீர்வாதமும், அன்பும்...........

இப்படிக்கு - அன்பன் :
சுப்பிரமணியன்

காமாக்ஷி கடிதத்தைப் படித்து முடித்து, வியப்பும், சந்தோஷமும் கலந்த குரலில் "கண்ணே! உன் வேண்டுகோளிற்கு மனமிரங்கி இதோ கடவுள் உனக்கு புதுசு அனுப்பிவிட்டார். இத்துடன் கூட உனக்கு உன் அப்பாவும் கிடைத்து விட்டாரே" என்று பூரிப்புடன் அருகில் நிற்கும் ஹேமாவின் கையில் பார்ஸலைக் கொடுத்தாள்.

கும்பகோணம் அத்வைத ஸபா பண்டிதராயிருந்த
காலஞ்சென்ற மஹாமஹோபாத்யாய, சாஸ்திர ரத்னாகர, மஹோபதேசக,
பிரும்மஸ்ரீ - யக்ஞேஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் இயற்றிய

ஸம்ஸ்கிருத கீர்த்தனை

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]

கீர்த்தனை 14

ராகம் ஆனந்த பைரவி] [தாளம் ஆதி

ஸாஹித்யம்

பல்லவி

மாதவோ மாதவயோர் பேதம் ஜஹி.

அனுபல்லவி

*காதேதர நீர நிகர ஸச்சாயம்
நிர்மல ஸ்படிகாபம் வாச்ரய வஸ்து.

சரணம்

அம்புஜ லோசனம் அம்புஜ சேகரம்
பன்னக சயனம் பன்னக பூஷணம்
*ஸம்ப்ருத மதனம் ஸம்ஹ்ருத மதனம்
யக்ஞாதி ஸ்வரூபம் யக்ஞேச ரூபம்.

தாத்பர்யம்

விஷ்ணு பரமசிவன் இவ்விருவர்களுடன் வித்யாசம் பாராட்ட வேண்டாம். ஆழம் காணாத ஜலராசியான ஸமுத்திரத்திற்கு ஒப்பான நிறமுடைய வனையானாலும், சுத்த ஸ்படிகம்போல் பிரகாசிப்பவனையானாலும், சரணமடைகுக. (அவ்விதமே) அம்புஜமென்ற தாமரைபோன்ற கண்ணுடையவனை யானாலும் அம்புஜன் என்ற சந்திரனை அலங்காரமாய்க் கொண்டவனையானாலும் சரணமடையலாம். (அவ்விதமே) பாம்பில் படுத்தவனையாவது பாம்பைப் பூண்டவனையாவது ஆச்ரயிக்கலாம். (அவ்விதமே) மன்மதனை வளர்த்தவனை யாவது மன்மதனைத் தவிர்த்தவனையாவது உபாஸிக்கலாம். (அவ்விதமே) யக்ஞ ரூபமானவனையாவது யக்ஞேச்வர ரூபமானவனையாவது பஜிக்கலாம். (இருவருக்கும் அபேதத்தை உணர்ந்துகொள்.)

குறிப்பு :—*இந்த இடங்களில் சாஹித்யம் மாற்றி எழுதப்பட்டிருக்கிறது.—ய. ம.

பல்லவி

பாஆ நிபபம கமபம மாஅபமாஅப மககா கரி ஸாஅரிஸாஅரி
மாஆத அவோஒ மஅஅஅ ஆஅஆஅ தஅஅ வஅ யொஒஒ

கரி ஸாஅநி நீ ஸககம பாஆ
ஒஓர் பேவ தம்ம் ஜஅஅஅ ஹிஇ ஈஇ

பாதப பாதப
ஹிஇஇ ஹிஇஇ

அனுபல்லவி

ஸாஆ ஸாஆ பநிநீ ஸ்ா ஸ்ா ரீக்ரி ஸா ஸநி ஸநிநீ ஸா ஸா
காஆ தேவ தஅர நீ ரஅ நீஇஇ கஅ ரஅ ஸஅஅச் சா யம்

நிஸ நிஸரீ ஸாஸா ஸநிதா (நி)பா பாபா கம பாதப
நிஇ இஇஇர் மஅலஅ ஸ்ப அஅ டிஇ காபம் வஅ ஆஅஅ

மாபம கரி கம கமபா பாஆ
ஆஅஅச் ரய வஅ அஅஅஸ் துஉஉஉ

பாதப பாதப
துஉஉ உஉஉ

சரணம்

ஸகாரிஸாஸநி பநிநீ ஸா ஸா காஆ மா மா கமபா மா மா
அம்ம் புஉஜஅ லோஒஒ சஅ நம் அம்ம்ம் புஉஜஅ சேஎவ கஅ ரஅம்

பாஆ நிபபம காகா மப மா மாஅப மாஅப மாஅப மாஅபு
பன்ன்ன் நஅகஅ சஅயஅ னம் ம்ம் பன் ன்ன் ன்ன் ன்ன்ன்

மககா கரி ஸா ரிரிஸா ஸா ஸா
நஅஅ கஅ பூஊ உஉஊ ஷ ணம்

பாஆ பாபா பநிநிஸ ஸா ஆ ரீக்ரி ஸாஸநி பநிநிஸ ஸா ஆ
ஸம் ப்ருஉதஅ·மஅதஅ நம் ம்ம் ஸம்ம்ம் ஹ்ருதஅ மஅதஅ நம் ம்ம்

நிஸ நிஸரீ ஸாஸா ஸநிதா (நி)பா பாபா சம பாதப மாபம
யஅ அஅஅக் ஞாதிஇ ஸ்வஅஅ ஆ ரூபம்ம் யஅ அஅஅக் ஞேஎஎ

கரி ரிக ரிகமா பா ஆ
சஅ ரூஉ உஉஊ பம் ம்ம்

பாதப பாதப
ம்ம்ம் ம்ம்ம்

கவிதையும் கற்பனையும்

[வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி]

கவிஞன் என்றால் தலையில் ஒரு முண்டாசும், அடர்ந்து சுருண்டு வளர்ந்த மீசையும், உருட்டி விழித்த கண்களும் இல்லாமல் போனால் பயனில்லை. தலைமயிர்களோடு ஒத்து வளர்ந்து தொங்கும் வெண்மையான தாடியும் மெல்லிய பட்டு ஜிப்பாவுமாவது இருக்க வேண்டும். ஒன்றுமில்லாமல் நம்மைப்போல் இருப்பவனை கவிஞன் என்றால் எவ்விதம் நம்புவது ?

கவிஞன் ஒரு தனி சிருஷ்டி. வேஷத்தைப் போலவே மனப் போக்கிலும் பித்தன் என்றே கூறிவிடலாம். 'ஷேக்ஸ்பியரை நான் தெருத் தெருவாய் காலால் உதைத்துத் தள்ளினேன். அவன் புகழ் பரவிற்று' என்றெல்லாம் கூற இலேசான பயித்தியம் பிடித்தால் கூடப் போதாது.

அந்தி வேளையில் ஆற்று நடுவிலே படகில் ஏறி மலர்ந்து ஆகாயத்தைப் பார்க்கத் தொடங்கினால் நள்ளிரவில்கூட தன் நினைவு வாராது. அவன் மனம் அறிவற்ற இந்நக்ஷத்திரங்களோடு கொஞ்சிக் குலாவி இன்புறச் சலியாது. நதியின் ஓசை காதல் கீதம் பாடி அவன் உள்ளத்தைத் தாலாட்டும். மோனத்தில், சொல்லியும் தொலையாத பேச்சுக்கள். தனிமையில் உலகமனைத்தோடும்கூடிக் குலாவுதல்.

வண்டு என்பதோர் புழு வகை. அத்தோடு கவிஞனுக்குத் தீராத ரகசியம். அதைக் கண்டுவிட்டால் சொற்றொடர் அவன் உள்ளத்திலிருந்து குமுறிக் கிளம்பிவிடும். உடன்பிறந்த அண்ணன் தம்பியோடு உறவாட்டமில்லை. அன்னை தந்தையோடு அன்பு பாராட்டுவதுமில்லை. முகிலும் மின்னலும் அவனுடைய சுற்றத்தார்; மலையும் காடும் அவனுடையதாய் தந்தை. அதில் அரித்தோடும் ஓடை அவன் உடன்பிறந்தாள்.

இவ்வித நோக்கம் வருவது இயல்பிற்குப் புறம்பானது. அதற்கேற்றவாறு அவன் வேஷமும் அமைந்துவிடும். அவன் கண்பார்வையும், பாவனையும் தனி வழியேதான் செல்லும். இவ்வியல்பைப் பயித்தியம் என்று கூறிவிட்டால் பெரிய தவறு ஒன்றுமில்லை.

ஆனால் இப்பித்தம் தனக்குப் பிடிக்க வேண்டும் என்று அடயோகம் செய்யாதார் இல்லை என்றே கூறலாம். சங்கீதம் என்றால் என்ன ? என்று வினவும் இனத்தார் ஆயிரம் உண்டு. ஆகிலும் அவர் பிறர் பாட்டையே வெறுப்பார். தனிமையில் பாடி இன்புறாமல் இரார். இது உண்மை. அவ்விதமே அட்டையில் வெள்ளைத் தாளைச் சொருகி எதிரில் வைத்துக்கொண்டு, கையில் பேனாவை ஏந்தி, மைக்கூண்டில் அடிக்கு ஐம்பது தடவை தோய்த்துக்கொண்டு, என்ன எழுதுவது என்று தோன்றாமல் திகைத்துக் கவிதையிடம் காதல் பிச்சை கேட்காதாரும் உலகில் இல்லை. இது ஒரு பரிதாபமான காட்சி.

கவிதையின்பால் மோகமோ கட்டிலடங்கவில்லை. கவிதைக் கன்னியோ விண்ணுலகில் வீற்றிருந்துகொண்டு விண்ணோர்களையே நாடித் திரிகிறாள். பாதாளத்தில் நின்று பரிதபிக்கும் இவனைக் கண்கொண்டும் பாராள். பாவம் என்ன செய்வான் ? அவன் தன் ஆசையை நிறைவேற்றக் கவிதையை எழுதித்தானே ஆகவேண்டும். கவிதையினிடம் பலாத்காரம் செய்கிறான். 'காலைப்பொழுது, கதிரவன் உதித்தான்; புள்ளினங்கள் துள்ளின ; காகங்கள் கரைந்தன ; அந்தி வேளை ; ஆதித்தன் சாய்ந்தான் ; கொக்குகள் கொக்கரித்தன' என்றெல்லாம் வர்ணிக்கத் தொடங்கி விடுகிறான். பத்திரிகாசிரியர்களில் சிலர் கவிதையோடு இக் கவிஞன் புரிந்த கேளியைக் கண்டு மனம்

தாளாமல் பத்திரிகையில் விளம்பரம் செய்துவிடுகிறுர். உலகம் முழுவதும் பரவி விடுகிறது.

எல்லோருக்கும் அதைப் புகழ்வதற்கே கவிஞன் அதிகாரம் அளித்திருக்கிறுன். குறை கூறிவிட்டால் காரியம் கெட்டு விடும். கம்பர் போன்ற மகா கவிகளுக்கு வசைமாரி கொட்டத் தொடங்கிவிடும். அவர்பேரில் உண்மையில் தவறில்லை. இக்கவிதையை அவர் எழுதப் படாத பாடம் பட்டிருப்பார். அவர் முயற்சிக் கேற்ற பலன் அளிக்கவேண்டியது வாச கர்களின் கடமை.

இவ்விதம் கவிதையோடு விடாதண்ட மாகப் போராடும் பிடிவாதக்காரர் களுக்கு ஏற்றவாறு சில நூலாசிரியர்கள் கவிதையை அடைய மார்க்கம் காட்டி யிருக்கிறுர்கள்.

'கவிஞன் ஆவதற்கு ஒரு வலிய அழ கிய அரண்மனை வேண்டும். அதைச் சுற்றிலும் பூஞ்சோலை. இடை இடையே தாமரை அல்லது அல்லிப் பொய்கைகள். அவைகளுக்கு மரகதத்தால் கட்டிய படிக்கட்டு. ஓரங்களில் தங்கத்தாலான கரைகள். வைடூரியத்தை உருக்கி வார்த் ததுபோல் தெள்ளிய நீர். இடையில் வனப்பு வாய்ந்த அன்னங்கள். இல்லா விடில் வைரத்தால் ஆன உடம்பும், பவ ழத்தால் ஆன மூக்கும், காலும், படைத்த செயற்கை ஹம்ஸங்கள். தோட்டத்தில் ஆங்காங்கு கொடியால் ஆன வீடுகள். அதற்குள்ளே இளநங்கைகள். அவ்வப் பொழுது அவர்களுடைய இனிய நாட்டி யம். இத்துடன் போதுமா? குயில்கள் வேறு வேண்டும். இல்லாவிடில் பிடித் தாவது வைக்கவேண்டும். மயில், மைன முதலிய எல்லாவிதப் புள்ளினங்களும் இருந்தே தீர வேண்டும். அதிகமாய்க் கூற வேண்டாம். மனக் கற்பனை அனைத் தும் அங்கு உருவெடுக்க வேண்டும். அதனிடையே உலவுகிறவனை கவிதை தானுகவே வந்து தழுவிக்கொள்வாள்' என்றெல்லாம் விவரித்திருக்கிறுர்கள்.

கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிப்பது என்று கூறுவார்கள். அதற்கு ஏறக்குறைய சமமான உபாயம் தான் இது. கவிதையைப் பெறுவதற்கு இச் சிறந்த மார்க்கத்தை நம் நாட்டு மேதாவிகளும்கூட உபதேசிக்கப் பின் வாங்கவில்லை. இராஜசேகரன் என்பவர் ஒரு சிறந்த புலவரும்கூட. அவரே தம் நூலில் மிகவும் விஸ்தாரமாய் விளக்கி யுள்ளார்.

கவிதை என்ன கடைச் சரக்கா பணத்தைக் கொடுத்து வாங்க. அழகிய மாடியும் அதில் பளபளவென்ற கண் ணடி அலமாரிகளும் அதற்குள் தங்க வொளி வீசும் புத்தகங்களும் இருப் பதை நாம் எத்தனை இடத்தில் காண வில்லை. அதனிடையே பழகும் மனிதர் களிடம் அப்புத்தகங்களால் ஏற்பட வேண்டிய பயனைத் தவிர மற்றதெல்லா வற்றையும் காணலாம். வெள்ளை உடை யும் பொன்போன்ற உடலுமிருந்தால் உள்ளத்தின் தெளிவு இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடில்லை. உழுது பழுது பார்த்துக் காவேரிநீரைப் பாய்ச்சிய வய லில் நெல்லுடன் முள் செடியும் புல் பூண்டும் முளைக்கவில்லையா? உள்ளம் தெளியத் தோட்டமும் துரவும் என்ன உதவி புரியும்? தெளிந்த உள்ளத்திற்கு அவைகள் இன்பத்தை அள்ளி வீசும். தெளிந்த உள்ளத்தில்தான் இன்பக் கனவுகள்போன்ற கற்பனைகளும் உதய மாகும். கற்பனை கலந்த உலகப் பொருள் களே இன்பமூட்டும் காவ்யங்கள் ஆகின் றன.

கற்பனைத் திறன் ஒவ்வொருவனுக்கும் பிறவிச் சொத்து. அதைப் பயன்படுத்திக் கொள்வதே சாமார்த்தியம். தக்க வழி யில் கையாண்டால் அது கவிதையின் உயிர் நிலையாகும். கதிரவன் கரங்கள் பட்ட செவ்வானம் போல், உலகப் பொருள் கவிஞனின் கற்பனை பட்ட வுடன் மெருகும், மேன்மையும் அடைந்து விண்ணுலகிற் கேற்றதாகின்றது. வெறுக்கத்தக்க பொருளும் கவிஞன் கையாளுவதால் நவரசங்களில் ஒன்றுகி விடும். பன்றி சேற்றில் புரண்டு உறுமிக் கொண்டிருக்கும் காட்சி மனதை வெறுக் கச் செய்யும். ஆனுல் கற்பனைத் திறம் படைத்தவன் வர்ணித்தால் அல்லது

எழுதிவிட்டால் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிடும். கற்பனை இல்லாவிட்டால் காவ்யம் உருவாகாது. உருவாகிலும் நகைக்க இடமாகும்.

இந்தக் கற்பனைக்கு ப்ரதிபை என்று மற்றொரு பெயர். இதன் திறமை கட்டிலடங்காது. மதங்கொண்ட யானையைக் கூடக் கட்டிப் பிடித்துவிடலாம். கவிஞனின் யதேச்சாதிகாரத்தை நாம் கேட்பது அல்லது நினைப்பதுகூட இயலாத காரியம். மரத்தைப் பேச வைப்பான். மனிதனை மரமாக்குவான். அவன் எதிரில் எதுவும் பொருட்டல்ல. இங்கு ஒரு சிறு நிகழ்ச்சியை உதாரணமாகக் காட்டாமல் விருப்பதற்கில்லை.

அரசனாக இருந்து கஞ்சனாகவும் இருந்துவிட்டால் வித்வான்களின் துன்பத்திற்குக் கேட்கவே வேண்டாம். ஆகிலும் என்ன செய்வது? சில சமயம் வயிற்றின் கொடுமை தாளாமல் அரசன் குணத்தைப் பரீக்ஷிக்க நேர்ந்துவிடுகிறது. ஒரு புலவன் கஞ்சனாகிய அரசனை அடைய நேர்ந்துவிட்டது. மனதைத் திடம் செய்துகொண்டு வேந்தனைப் புகழ்ந்து பாடத் துவக்கினான். அரசன் பணம் கொடுக்க அஞ்சி, புகழ் பாடலை நிறுத்துமாறு கட்டளை இட்டான். புலவனுக்குக் கோபம் வந்துவிட்டது. 'அரசே மரங்களையும் மலைகளையும் நாங்கள் புகழ்ந்து பாடுவது என்ன பயனை வேண்டி. அது எங்கள் இயல்பு' என்று சொல்லி வெளி ஏறிவிட்டான்.

அரசன் எதிரிகளைவென்று பல துன்பங்களுக்கு ஆளாகி நாடு தேடினான். கவிஞனோ சில சொற்களைச் சேர்க்கிறான். அதன் மதிப்பு உலகனைத்தையுமே அடக்கிவிடுகிறது. நம் நாட்டில் சர்வ மான்யம் வழங்கியதெல்லாம் கவிதைக் கல்லவா? இவ்விதக் கவிதையும் அதற்கேற்ற கற்பனையும் வாய்ந்தவனுடைய இறுமாப்பிற்குக் கேட்கவும் வேண்டுமோ?

உலகப்பொருள்கள் கண்ணாடியில் போல் காவ்யத்தில் ப்ரதிபலித்தால் காவ்யமாகிவிடுமா? கற்பனை சேர்ந்தாலே அதற்கு மணமுண்டாகும். பாலைவனம் போன்ற இவ்வுலகில் இடைவிடாது அலைந்து திரியும் நமக்கு, புலவனின் கற்பனை நதியே தாகம் தணித்து களைப்பை ஆற்றுகிறது. அமிருதத்திற் கொப்பாயிருந்துகொண்டு நம்மை இங்கிருந்தவாறே பேரின்பத்தைப் பருகச் செய்கிறது.

இந்தக் கற்பனை சக்தி இருந்துவிட்டால் நாம் முன்குறித்த சாதனங்கள் தக்க பலன்களை அளிக்கும். அவைகள் கற்பனைத் திறனைத் தூண்டி வளரச் செய்யும். பல நாடுகளை நோக்குவதும் இயற்கையின் வனப்பில் மோகம் கொள்வதும் ப்ரதிபையின் ஊக்கத்தைப் பெருக்கும். பலவித இலக்கியங்களையும் இலக்கணங்களையும் பயில்வது ப்ரதிபையைத் தளிர்க்கச் செய்யும். இவ்விதம் வளரும் கற்பனை மேல்நோக்கி வளர்ந்து நாளடைவில் விண்ணோர் இன்பத்தைத் தாவிப் பிடித்து நமக்களித்துவிடும். அதுபற்றியே நாம் என்றும் அதில் தெவிட்டாத சுவையைக் காண்கிறோம்.

பரமன் நமது ஐம்புலன்களையும் வெளி நோக்குடையவைகளாகவே படைத்துவிட்டான். என்றைக்காகிலும், எப்பொழுதாகிலும் சற்று உள்ளே நோக்குமாயின் நமக்கு எவ்வளவோ நன்மையுண்டு. இயற்கையிலேயே அக்குணம் அவைகளுக்கில்லை. அவைகள் காண்பதெல்லாம் வரண்ட பூமி. அதில் சுற்றித் திரிந்து அவைகள் துவண்டுகிடக்கின்றன. நாமும் அவைகளைப் பின்பற்றினால் நம் கதியும் அதுவே. கவிஞன் இதை உணர்ந்து புலன்களைப் புறக்கணித்து மனோதர்மமாகிற கற்பனையை வளர்க்கிறான். இம் மனோதர்மத்தில் முழுகியவனுக்குச் சுகம் துக்கம் என்றிரண்டில்லை. சுகம் ஒன்றுதான். அது வேறுலகம். அங்கு நம் உலகம்போல் ஆறு சுவைகள் அல்ல, ஒன்பதுண்டு. அங்கிருப்போர் ஒவ்வொருவரும் பல்லாயிரம் ப்ரம்மாண்டத்தைப் படைக்கத் திறன்கொண்டவர்கள். அவ்வுலகில் என்றும் வசந்தகாலம். இரவும் பகலும் பட்டுப்போல் வெண்ணிலவு. கதிரவன் கொடுமை இல்லை. இது மனோதர்மத்தின் செயல்.

இங்கு நாம் சற்று யோசிக்கவேண்டும். மனோதர்மத்தின் திறன் இத்தனையானால் ஆத்ம சக்தி அல்லது ஆத்ம தர்மத்தின் திறமை எவ்வளவு இருக்கவேண்டும். நவீன இலக்கிய ஆசிரியர்களை அண்டி உபதேசம் பெற்ற நமக்கு ஆத்ம சக்திக்கும் கவிதைக்கும் உள்ள தொடர்பு இப்பொழுது அற்றுப்போனதுகூட புலப்படவில்லை. மனோ தர்மம் அற்பமானது. நம் முயற்சியால் வளர்த்துவிடலாம். ஊரார் அனைவரையும் மயங்கவும் செய்விக்கலாம். ஆத்ம சக்தி அவ்விதமன்று. அதை அடையும் வழி அரிது. அதை அடைந்தபேர்கள் உண்டு. ஆனால் அடையும் வழியை நமக்கு விளங்குமாறு கூறியவர்கள் இல்லை.

மனோதர்மத்தைத் தேடித் தோன்றிய வாறு கெட்டவழியில் அள்ளி இறைப்பவர்கள் இந்நாளில்போல் எந்நாளும் இருக்கவில்லை. பொய் சொல்வதையும் திருடுவதையும் இன்னும் இழிய தொழில்களையும்கூட உயர்ந்ததுபோல் நூல்களில் மனோ தர்மத்தால் சித்திரித்துக் காட்டுகிறார்கள். அதிலிருக்கும் தீமைகளை கற்பனைசக்தியால் மூடிவிடுகிறார்கள். மக்களும் மதிமயங்கி ஏமாறுகிறார்கள். அநீதியாய்ச் செய்யும் போரிற்குக்கூடக் கற்பனையை உபயோகித்து ப்ரசாரம் செய்து மக்களை இசையச் செய்வதை நாம் இந்நாளில் காணவில்லையா ?

இவ்விதம் மனோதர்மம் கொண்டவரை கவி என்பதால் அச்சொல்லிற்கே இழிவைத் தேடுகிறோம். கவியென்றால் எல்லோருடைய பார்வைக்கும் அப்பால் பார்ப்பவன் என்று பொருள். மனோ தர்மம் படைத்தவனும் ஐம்புலன்களுக்கு அப்பால் இருக்கும் பொருளைத்தான் காண்கிறான். ஆகிலும் ஆத்ம சக்தி காணும்பொருள் அதற்கும் மேலே இருக்கிறது. மனோ தர்மம் வெறும் ஆகாயக்கோட்டை. மணலில் குழித்த கிணறு. ஆத்ம சக்தியோ உண்மையானது, என்றும் அழிவற்றது. மேலும் புலன்கள் பொருள்களை மாறாக உணர்வதுபோல்தான் மனதும் உணருகிறது. ஆனால் மனம் ஆத்மாவினிடம் மற்ற இந்திரியங்களைவிட அருகில் இருப்பதால் ஆத்மாவின் ஒளி சிறிது அதில் படிகிறது. அதனால் அதன் ஏமாற்றத்தில்கூட இன்பத் துளிகள் காணப்படுகின்றன.

ஆத்ம சக்தி எங்கும் காண்பது ஆத்மாவைத்தான். அதுவே பொருள்களின் உண்மை உருவமும். அது உலகத்தோர் புலன்களுக்குப் புறம்பானது. அதைக் காண்பவனே கவி. இச்சொல் அவனுக்கே தகும்.

ஞானிகளின் கவிதையில் மனோதர்மம் இடம்பெறுமலிருக்கலாம். ஆகிலும் தெவிட்டாத ஆனந்தம் அரித்தோடிக் கொண்டிருக்கும். விவேகானந்தரும் சதாசிவப்ரம்மமும் சங்கரரும் எழுதிய கவிதைகள் இவ்விதமானவைகளே. இன்று காந்தியடிகள் பாடும் கவிதையும் இந்த ரகம்தான். அவரவர்கள் ஆத்ம ஞானத்திற்கு ஏற்றவாறு அவர்களிடம் கவித்தன்மை ஏற்படுகிறது.

நம் நாட்டில் கவிஞன் என்ற சொல்லால் 'எல்லாம் அறிந்தவன்' என்றே பொருள் கருதி வந்தோம். 'அவன் கவிஞன். வேதாந்தம் அவனுக்குத் தெரியாது. அவன் சொல்லை வேதாந்தத்தின் உண்மையைக் கூறுவதாக ஏற்க வேண்டாம், பூகோளம், சரித்திரம் முதலியன அவனுக்குத் தெரியாதவை. ஆகவே அவன் தவறாகக் கூறலாம்' என்ற வாதம் நம் நாட்டாரிடம் ஏற்படவில்லை. எல்லாம் அறிந்த பின்பே அவன் கவி என்ற சொல்லிற்கு உரியவனாவான். அதனாலேயே உபனிஷத்துக்கள் கவி என்று பெயரிட்டுக் கடவுளை அழைக்கின்றன.

ஒருவன் உண்மையில் கவியாகி மனோ தர்மம் படைத்தவனாகவும் இருந்துவிட்டால் அது பொன் மலர்க்கு மணம் வாய்த்ததுபோல்தான். அதை நாம் கொண்டாடுகிறோம். வால்மீகி, கம்பன் போன்றவர்கள் அத்தகைய கவிதையும் கற்பனையும் ஒன்றுசேர்ந்தவர்கள். அவர்களை நாம் தலையால் வணங்கிப் போற்றுகிறோம்.

மற்றொரு விஷயம். கவிஞர்கள் நமக்குக் களிப்பூட்டும் கருவிகளை உண்டாக்கிக் கொடுப்பதற்குமட்டும் வந்தவரல்லர் என்பதை நாம் நம் நினைவிலிருந்து அகற்றுவது சரியல்ல. உயர்ந்த உண்மைகளைக் கண்டறிந்து நமக்கு உபதேசிக்கவே வந்தார்கள். உபதேசத்தை முறட்டு வழியில் செய்தால் நம் மனது தாளாது. வாகைப்பூவினும் மெல்லியது நம் உள்ளம். அது துவண்டுவிடுகிறது. அதற்கு ஊக்கமளிக்க பல ரசமான விஷயங்களைக் கலந்து தத்வத்தை அதற்கிடையே செலுத்திவிடுகிறார்கள். குழந்தைகளுக்கு மருந்தை வெல்லத்தில் புதைத்துக் கொடுப்பதுபோல் ஆத்ம ஞானத்தை மனோதர்மத்தில் பொதிந்து கொடுக்கிறார்கள்.

ஆத்ம சக்தி இல்லாத கவிஞன் கற்பில்லா கன்னிக்கும் மணமில்லா மலருக்கும் ஒப்பானவன். ஆத்ம சக்தியே கவிதை. மனோதர்மம் இல்லாவிடினும் அதற்குப் பழுதில்லை. மணமிருப்பதாலேயே மலரைச் சூடுகிறோம். மணமற்ற மலரை திரும்பியும் பாரோம். வெறும் மனோ தர்மம் ஏமாற்றம். அதை நம்புவதால் பயனில்லை. ஆத்ம சக்தி வாய்ந்த கவிஞனே நம்மைக் கடைத்தேற்றுவான்.

———



அம்பலம் ஏறுமா?

[கு. வி. இராதாகிருஷ்ண சாஸ்திரி, எம். ஏ., எல். ஐ. எம்.]

எந்த விஷயத்தையும் ஒருவரோ அல்லது சிலரோ நன்கு ஆலோசித்துத் திருத்தி இனி குற்றங் குறைகள் இல்லை என்று தீர்மானம் செய்யும் வரையில் பகிரங்கபடுத்துவதில்லை. இவ்வாறு முன் கூட்டிப் பரிசீலனை செய்வதை "அறையில் ஆடுவது" என்று கூறுகிறோம். பிறகு மற்றைய பொதுஜனங்களும் அறியுமாறு விளக்கிக் கூறப் புகும்பொழுது "அம்பலத்திற்கு வருகிறது" என்று சொல்லுவோம்.

பற்பல திட்டங்களும் பிரசங்கங்களும் விளம்பரப் படுத்தப்படுகின்றன. தீர ஆலோசித்துப் பிறகு விளம்பரத்திற்குக் கொண்டு வரபட்டவைகள் தானா என்பது சந்தேகம். ஆனால் துணிந்து இவ்வாறு கூற யாரும் முன்வருவதில்லை. ஏனென்றால் இத்திட்டங்கள் எல்லாம் செல்வாக்கு மிக்கவர்களால் சமர்ப்பிக்கப்படுகின்றன. அவர்கள் பெருந்துணை பெற்றவர்கள். இவ்வித நிலையில் நன்கு பரிசீலனை செய்யப்படாத விஷயங்களும் பிரசாரத்திற்கு வந்துவிடலாம். ஆனால் காரியத்தில் சித்தி ஏற்படாதபொழுது மறுபடியும் அறைக்கே திருப்பி அனுப்பப்படும் நிலை கட்டாயம் ஒருநாள் வரும்.

அவ்வாறின்றி செல்வாக்கற்றவர் தனிமையில் ஆராய்ந்து உண்மை என்று தெளிந்தவைகளைப் பொது நலனை உத்தேசித்து வெளியிட முன் வந்தால் அதைக் கேட்பதற்கு ஆள் தேடும் நிலையில் நம் நாடு இருக்கிறது. அப்பொழுது "ஏழை சொல் அம்பலம் ஏறுமா?" என்று சொன்னவனுடைய அனுபவத்தை மெச்சத் தோன்றுகிறது.

இவ்விதத் தனி மனிதருக்குத் தான் உண்மைகள் பலவற்றை அறியும் சந்தர்ப்பங்கள் கிட்டுகின்றன. ஜனங்கள் பல மனப்பான்மை கொண்டவர்கள். செல்வாக்குள்ளவர்கள் முன்னிலையில் ஒத்துமையாக இருப்பதுபோல் காண்கிறவர்கள். உண்மையில் ஒத்துமை அற்றவர்களே என்று புலனாகும்.

ஒரு சாரார் புத்தி புகட்டுவார்கள். "பேச்சு, பேச்சு என்று எப்பொழுதும் பேசியே காலத்தைக் கழிப்பதில் பலனில்லை. காரியத்தைச் செய்" என்பார்கள் மற்றொரு கூட்டத்தினர். "பிரசாரம், பிரசாரம் என்று ஏன் காலவிரயம் செய்கிறீர்கள்? எங்கேயாவது சின்ன அளவில் உங்கள் திட்டத்தைத் தொடங்கி வேலை செய்யுங்கள். எல்லோரும் உதவிக்கு வருவார்கள். பலாப்பழத்திற்கு ஈக்களைப் பிடித்தா விடுவார்கள்?" என்று அங்கலாய்ப்புடன் ஹிதோபதேசம் செய்வார்கள். சிலர் ஒரு ஆராய்ச்சியை செய்து போதிப்பார்கள். இம் மனிதரின் நன்மைக்கென்றே அழ அழச் சொல்லுவார்கள். அவர்கள் கூறுவதாவது :—

"காங்கிரஸ் மகாசபை 50 வருடங்களுக்குமேல் பிரசாரம் செய்து வருகிறது. உடல், பொருள், ஆவி இவைகளைத் தத்தம் செய்து உழைக்கும் ஊழியர்கள் நிறைந்தது. பெரிய, பெரிய தலைவர்கள் அதை நடத்துகிறார்கள். அவர்கள் செய்யக்கூடாத விஷயங்களை வேறு யார்தான் செய்யக்கூடும்? ஆகவே உங்கள் திட்டத்தை அவர்களிடம் ஒப்புவித்துவிட்டு உங்கள் காரியங்களைக் கவனியுங்கள். இராப்பகலாக விஷயங்களை ஆராய்ந்துவரும் அவர்கள் இதையும் ஆலோசிப்பார்கள். சீக்கிரம் இதைக் கவனிக்கவில்லை என்று குறை கூறக் கூடாது. அவர்களுக்கும் நேரம் வேண்டாமா! நாங்கள் சொல்லுகிறோமென்று வருத்தப்படாதீர்கள். ஊரைக் கட்டி மேய்க்கும் திட்டங்களை எல்லாம் அவர்களுக்கென்றே விட்டுவிட்டு, சுலபத்தில் பலன் கொடுக்கக்கூடிய ஒன்றிரண்டு

சிறிய விஷயங்களைக் கவனித்துப் பாடு படுங்கள். நல்ல லாபத்தை அடையலாம்.”

இவர்கள் இத்தனி மனிதரிடம் அபி மானம் உள்ளவர்கள். இவர்கள் மத்தி யில் உள்ள இத்தனி மனிதர் பெரும் தலைவர்கள் கூட்டத்தில் சேரமுடியாது என்ற சித்தாந்தத்தில் ஊறியவர்கள். தலைவர்கள் எல்லாம் எப்படியோ வந்து விட்டார்கள். இவர்களுக்கு மத்தியில் ஒருக்காலும் தோன்ற மாட்டார்கள் என்ற பிரமை. இவர்களைக் குற்றம் கூறக்கூடாது. உண்மை என்று நம்பி யதைத் தம் மனிதர் என்று சொன்னார் கள்.

பெரும்பாலரான மற்றொரு கூட்டத் தினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பெரும்பிரமையில் உழலுபவர்கள். நேர் மையாக நடக்கிறோமென்ற எண்ணத்தி லேயே தீவிரமாக எந்த விஷயத்திலும் பங்கெடுத்துக் கொள்ளாமல் சந்தர்ப்பங் களை நழுவவிடுபவர்கள். திக்தேவதை களையும் சூரிய சந்திரர்களையும் பொது வில் பெரியவர்கள் சாக்ஷிகளாக அழைப் பதுண்டு. இத்தேவதைகள் ஒருவர் கக்ஷிகளிலும் சேராமல் ஒரே காரியத் தைச் செய்துகொண்டு இருப்பதால் சாக்ஷிகளாகக் கூறப்பட்டார்கள். இவர் களைப்போலவே தாங்களும் நடுநிலைமை வகிப்பதாகப் பெரும்பாலோருக்குத் தற் பொழுது எண்ணம். ஆகவே இவர்கள் ஒரு கக்ஷியிலும் சேரமாட்டார்கள். தங் கள் நலனைப் பாதுகாத்துப் பெருக்கும் கைங்கர்யம் ஒன்றே இவர்களுக்கு ஏற் பட்டது என்ற எண்ணம். அத்துடன் இருந்துவிட்டால் பரவாயில்லை. ஆனால் இவர்கள் புதியபுதிய திட்டங்களை அலசிப் பார்ப்பார்கள். கட்டின வீட்டிற்கு பழுது சொல்லுவார்கள். “காரியத்தில் ஒன்றை யும் காணோம். பேசிப்பேசி காலத்தைக் கழிக்கிறார்கள்” என்று பிரசாரகர்களைக் குறை சொல்லுவார்கள். அமைதி யாக உங்கள் நன்மைக்காகவும் தானே திட்டங்கள் என்று திருப்பிக் கேட்ட தும் வார்த்தைகளை மழுப்ப ஆரம்பித்து விடுவார்கள். “ஆமாம். ஆனால் யோக்கி யர்கள் மிகக் குறைவு. சுயநலத்துக்கு உழைப்பவர்களே அதிகம். பணம் என்றவுடன் மதம், தேசம், தர்மம் எல் லாம் எங்கோ போய்விடும். இப்படிப் பட்ட மேதாவிகள் பெரும்பாலோர் இல் லாவிடில் வயிற்றுப் பிழைப்பின் தலையில் பழியைப்போட்டுவிட்டுக் குஷியாக விருந் திலும் களியாட்டங்களிலும் மூழ்கி நிற் கும் பெரும் படிப்பாளிகள் எத்தனைபேர் என்று சொல்லட்டுமா? ஊரெல்லாம் இவ் வாறு இருக்கும்பொழுது நீரும் நானும் என்று ஓரிருவர் தனித்திபங்க முடியுமா? அவர்களைப்போலவே நாமும் நம் காரியத் தைச் செய்துகொள்ள வேண்டி யிருக் கிறது. நாங்கள் சொல்லுகிறோம் என்று வருத்தப்படாதீர்கள். நம் தேசம் ஒன் றுக்கும் லாயக்கில்லை. ஒருவரையும் நம்ப முடியாது. பொறாமையும் சுயநலமும் தலைவிரித்தாடுகிறது. நமக்கு விமோச னம் இல்லை, நம் தலை எழுத்து. ஒரு சர்வாதிகாரி வந்து இவர்களை எல்லாம் கசக்கி வேலை வாங்கினால் என்னமோ! மீண்டும் பன்னிப் பன்னிச் சொல்லுகி றோமென்று எண்ணுதீர்கள். நீங்கள் நல்ல மனிதர்கள். சாமர்த்தியசாலிகள். நல்ல காரியத்திற்குப் பாடுபடுகிறீர்கள். ஆனால் என்ன பிரயோசனம்? நிறைய பணத் தைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள். அப்புறம் நீங்களும் தியாகம் செய்யலாம். தேசத்தொண்டு செய்யலாம். ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் எல்லாம் இவ்விதம் தான் செய்துவந்திருக்கிறார்கள். தனக்கு மிஞ்சி தர்மம் என்பதை மறக்காதீர்கள்.

இவர்கள் இவ்வளவு அக்கரையாகச் சொல்லுகிறார்களென்று நம்பி சிறிது பணம் சேகரித்து சிறிய அளவில் திட் டத்தை ஓரிடத்தில் ஆரம்பித்துவிட்டு மறுபடியும் இவர்களிடம் சென்றால் இதே உபதேசத்தைத்தான் மறுபடியும் செய் வார்கள். தாங்கள் உடனுழைக்க ஒரு போதும் தயாரில்லை. இவர்களைப் பொருட்படுத்தாமல் திட்டங்களை அமு லுக்குக் கொண்டுவந்து சிறிது ஜயம் பெற்றுவிட்டால் இவ் வுபதேசகர்கள் குறைகூறும் மனப்பான்மையுடன்தான் அதையும் பற்றிப் பேசுவார்கள். இவர் களை உத்ஸாகப்படுத்த கூட்டுறவுக்குக்

கொண்டுவர முயலுவது வீண் கால விரயமே.

ஆகவே நிர்மாணத் திட்டத்தை நடத்த முயலும் தனி மனிதன் உள்ளபடி கவனிக்கவேண்டிய விஷயங்களை ஆராய்வோம். பேச்சு எதற்கு? பேச்சிற்கும் காரியத்திற்கும் உள்ள சம்பந்தம் என்ன? பதற்றமில்லாமல் உண்மையைத் தேடினால் தெளிவு ஏற்படும். அப்பொழுது பேச்சும் காரியமும் பிரிக்கமுடியாதவைகள். பேச்சு காரியமாகும். காரியம் பேச்சாகவும் அமையும் என்ற உண்மைகள் விளங்கும். இத்தத்துவம் விளங்கினால் நிர்மாணத் திட்டங்கள் செய்ய முடியும்.

ஓரே ஒரு வகையினர்தான் பேச்சைப் பகிரங்கமாக உபயோகப்படுத்தாது உழைக்கலாம்; அவர்கள் கர்மயோகிகள். நிவர்த்தி மார்க்கத்தில் செல்லுகிறவர்கள். ஆன்ம ஞானத்தைப் பெற்றுப் பிறவித் துன்பத்தினின்றும் விடுபட முயலுகிறவர்கள். இவ்விதப் துறவிகளுக்குப்பேச்சு உள்ளத்திலேயே ஒடுங்கும். செய்கையும் ஒட்டுதலற்று அமையும். அவர்களுக்குத் திட்டங்கள் தேவை இல்லை. பிரசாரம் அவச்யம் இல்லை.

மற்றைய நல்லோர்கள் ப்ரவர்த்தி மார்க்கத்தில் ஈடுபடுகிறவர்கள். உலகம் பூராவும் தாம் என்று தேறி எல்லோரையும் முன்னுக்குக் கொண்டுவர உழைப்பதே தங்கள் கடமை என்று துணிந்தவர்கள். இந்தக் கர்மயோகிகள் ஒவ்வொரு செய்கையையும் நன்கு ஆராய்ந்து சமயசந்தர்ப்பங்களில் நேரக்கூடிய குற்றம் குறைகளையும் கவனித்துத் தக்கவாறு திட்டம் வகுப்பார்கள். தாங்கள் அதன் பிரகாரம் காரியாதிகளைச் செய்வார்கள். தங்களைப் போல் பிறரும் அனுஷ்டித்து கடைத்தேற வேண்டும் என்று கருணையுடன் விளக்கிக் கூற முற்படுவார்கள். யாவரும் இக்கைங்கர்யத்திலீடுபடத் தக்கவாறு சந்தர்ப்பங்களை அமைப்பார்கள். "நடந்த வரையில் நாராயணன் செயல்" என்று பதற்றமில்லாமல் காரியங்களைச் செய்வார்கள். இவர்கள் பேசுவது, செய்வது, நினைப்பது, வாளா இருப்பது முதலிய யாவும் ஒரே பெரும் காரியத்தின் பல வேறு நிலைகள் என்பதை அறிந்து விட்டால் பேச்சு வேறு காரியம் வேறு என்று கூறமாட்டோம்.

காரியம் என்பது என்ன?

ஒரு செய்கையின் விளைவு என்று கொள்ளலாம். ஒவ்வொரு செய்கையும் முதலில் மனத்திலே சமைக்கப்பெறும். பிறகு இந்திரியங்களினால் செய்யப்படும். இவவிதச் சமைப்பைச் சங்கல்பம் என்று சொல்லுகிறோம் இச்சங்கல்பங்கள் தெய்வீகமானவைகள். எவ்வளவுக்கெவ்வளவு மனது அழுக்கற்று விளங்குகிறதோ அவ்வளவுக்கவ்வளவு இச்சங்கல்பங்கள் நன்கு அமையும். அவைகளே காரியங்களாகத் தோற்றமளிக்கின்றன.

ஆகவே ஒவ்வொருவரும் மனத்தின் அழுக்குகளை அகற்றத் தவமிருக்க வேண்டும். தகாத பற்றுதல், கோபம், பேராசை, மயக்கம், கர்வம், பொறாமை முதலியவைகள் இந்த அழுக்குகள். இவைகள் அகல வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக மனத்தில் ஏற்பட்டு விட்டால் அவைகள் நீங்கிய மாதிரியே. படிப்படியாக நீங்குவதை இத்தபஸ்விகள் உணர்வார்கள். அகக்கண் திறக்கும். ஹ்ருதய ஆகாசத்தினின்றும் கிளம்பும் நாதம் உட்செவியில் பாயும். தெவிட்டாத இன்பம் சுரக்கும். அருள் வாக்கு பெற்று ஏனையோர்களுக்குக் கைங்கர்யம் என்ற பாவனையில் உபதேசங்கள் கிளம்பும். ஆண்டவன் கட்டளை என்று ஏற்றுப் பிரசாரம் செய்வார்கள். இதன் பலத்தால் தூய்மையுற்ற தொண்டர்கள் கூட்டம் பெருகும். சமூக நலனுக்கான பற்பல ஆக்கல் வேலைகள் உருப்பெறும். பொருள் முதலிய சௌகரியங்கள் தானகவே குவியும்.

இவ்விதப் பிரசாரகர்கள் பேசும் பேச்சுக்கள் காரியத்தின் அஸ்திவாரமாகும். இவைகளைக் கேட்டு ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற வகையில் இப்பெருங் கைங்கர்யத்தி லீடுபட வேண்டும். அதே சொற்களைநேர்மையுடன் மற்றையவர்கள் அறியும்படிப் பிரசாரம் செய்யவேண்டும். இவ்விதம் செய்யும் அனைவர்களும் இத்

ஏ. என். எஸ்.

உலகிலேயே மிகவும் கம்பீரமான வேலை

தொழில்களிலே நர்சிங் வேலைதான் மிகவும் மானிடத் தன்மையுள்ளது. புத்திசாலியான பெண்களுக்கு அதற்கு இயல்பான ஆகருஷணம் இருக்கிறது. மேலும் அதுதான் உண்மையான யுத்த வேலை. ஏ. என். எஸ்ஸின் வெண்மையான உடுப்புகளை அணிகிறவர்கள் தாங்களே யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் மனிதர்களை பராமரிக்கிறார்கள். வீட்டில் சோம்பேறியாய் இல்லாமல் பெண் வேலை செய்வதே நாகரீகமாயுள்ள இந்நாளில் நீங்கள் ஆஸ்பத்திரிகளில் நோயாளிகள் அனுபவிக்கும் கஷ்டங்களை இலகுவாக்கிக் கொண்டுவரும் இந்த நேர்த்தியான பெண்களின் கூட்டத்தில் இருக்கவேண்டும். ஏ. என். எஸ்ஸில் பெரும் முதல்தரமான டிரெயினிங் யுத்தத்திற்கு பிறகு வாழ்க்கைக்கு உதவக்கூடிய மதிப்பில்லாத யோக்கியதாம்சங்களைக் கொடுக்கிறது. உங்களுக்கு வேறு யோஜனைகள் இருந்தாலும், இந்த வைத்திய அனுபவம் உங்கள் ஆயுள் பூராவிற்கும் நீங்கள் பெண்ணாய் செய்யும் தொழிலும், சமூக சேவையிலும் உதவியாய் இருக்கும். இந்த சந்தர்ப்பத்தை கைப்பிடித்துக் கொள்ளுங்கள்!

தற்சமயம் ஏ. என். எஸ். சம்பளங்கள் அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக பொது சேவையின் புது சம்பளங்கள் இலவச இடவசதி, சாப்பாடு, வேலையாட்களுடன் கூட மாதம் ரூ. 135 முதல் 175 வரை அல்லது மாதம் ரூ. 203 முதல் 243 வரை.

வேலைக்கு பிரிட்டிஷ் பிரஜைகள் அல்லது இந்திய சமஸ்தான பிரஜையாயும் 17 முதல் 45 வயதுக்குள் இருக்கும் எந்த பெண்ணும் சேரலாம்.

முன் அனுபவம் தேவையில்லை. ஆனால் நர்சிங் அனுபவம் உள்ளவர்கள் வேலையில் உயர்ந்த கிரேடில் சேரலாம். நர்சுகள் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகிறார்கள். சாதாரணமாக அவர்களாகவே மேல் நாட்டுக்குப் போவதாக சொன்னாலொழிய எல்லோருக்கும் இந்தியாவிலேயே வேலைகள் கொடுக்கப்படும்.

பூரா விவரங்களுக்கு

நீங்கள் வசிக்கும் பிரதேசத்தில் உள்ள செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் லேடி சூபரின்டென்ட் அல்லது டைரக்டர் ஜெனரல் இந்திய மெடிகல் சர்விஸ், நியூடில்லிக்கு இன்றே எழுதுங்கள்.

ஏ. என். எஸ். நர்சுகள் லெக்சர் கேட்கிறார்கள்.

AAA 1198 TM

தொண்டர் கூட்டத்தில் கலந்து விடுவார்கள். அப்படிச் சேராது தனித்து நிற்பவர்கள் சில காலத்திற்கு இவைகளை வீண் பேச்சு என்று எண்ணி, "காரியம், காரியம்" என்று பிதற்றலாம். "பருவத்தாலன்றி பழா" என்று, அவர்களைக் குற்றம் கூறாது தொண்டர்கள் பிரசாரத்தில் ஈடுபட வேண்டும்.

தொண்டர்களின் காரியம் தான் என்ன? "எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்" என்றே பாடுபடுவது. அவ்வழிக் கின்றியமையாதது உண்மை ஞானம். இதைப் பெற்றவனே ஸ்வதந்திர புருஷன். இவன் "தன்கை தனக்குதவி" என்று பாடுபடுவான். இது ஸ்வதந்திரத்திற்கு முதல் துணை. பிறர்க்கென்றே தன்னலம் துறக்கத் துணிந்த தொண்டனுக்கு நஷ்டம் ஒன்றும் எப்பொழுதும் இல்லை. இது அவன் ஸ்வதந்திரத்தைக் காக்கும் இரண்டாவது துணை. இவ்விதம் வாழ்க்கையை நடத்து கையிலேயே சகல துன்பங்களுக்கும் காரணம் பிறவியே என்று தேர்ந்து இப்பிறவிக்குக் காரணமாகிய பற்றுதல் என்பதை நீக்கிக் கர்மயோகியாக வாழமுயலுவதே மூன்றாவது துணையாகும். இவ்வித ஆன்ம ஞானத்தைப் பெறுவதைத்தான் உண்மைக் கல்வி எனலாம். இதைச் சகலரும் அடைந்து கடைத்தேற உழைப்பதே தொண்டனின் தொண்டாகும்.

தற்காலம் நம் நாட்டில் செய்யப்பட வேண்டிய ஆக்கல் வேலைகள் இவ்விதம் தேறிய தொண்டனின் தலைமையில்தான் நடைபெற வேண்டும். இத்தலைவன் எவ்வளவு தூய்மைபெற்று விளங்குகிறானோ அவ்வளவுக்கு சுபிக்ஷம் பெருகும். மற்றைய நாடுகளிலும் இவ்விதம்தான் தலைவர்கள் தோன்றினார்களோ என்று கேட்கத் தேவை இல்லை. தலைவர்களின் தன்மைக்குகந்தவாறுதான் முன்னேற்றமும் அமையும் என்பது எங்கும் ஒரே நியதி. தலைவனையொட்டி ஒழுகுவது பின்பற்றும் தொண்டர்களின் கடமை. அவரவர்களின் முயற்சியினளவு ஆகும் பலன் என்று கூறி மேலே போவோம்.

கிராமங்கள்தான் நம் நாட்டின் உயிர் நாடிகள். கிராம ஜனங்கள் இவைகளின் ஜீவன். ஆகவே அவர்களின் ஸ்வதந்திரம் தேசத்தின் ஸ்வதந்திரம். கூடுமான அளவு மூவகையிலும் அவர்கள் ஸ்வதந்திரம் அடைய முயலவேண்டும். பொது உடைமைகளாகிய உணவு, உடை, உணர்வு, உவகை, உபதேசம் இவைகளை, "தன் கை தனக்குதவி" என்று உழைத்து பெறும்வகையில் அவர்களைத் தயார்செய்வதற்கே நிர்மாண திட்டம். ஆன்ம ஞானத்தையும் அவர்கள் படிப்படியாகப் பெறும் வகையில் உழைக்கவேண்டும்.

இந்நிலையை யடைய அவர்களுக்கு உபதேசம் செய்யும் ஆசாரியன் ஒரு தலைவன். அவனுக்கொரு பெருந்தலைவன் இருந்து வழிகாட்டுவான். 'இவ்வாறு ஒரு தொண்டர் படையை நிறுவி தேசம் பூராவும் உழைக்க ஏற்பாடு செய்வது என்பதே ஒரு நிர்மாண திட்டம்' இதற்கு இடம், பொருள், ஏவல்களைத்தேட ஒரு விரிவான திட்டம் வகுப்பது ஓர் பெருந்தொண்டு. இக் கைங்கர்யத்தில் முதல் படி பெருந் தொண்டனாகிய தலைவன் தன் திட்டத்தில் தீவிரமான நம்பிக்கையைத் தான் பெற்று நிற்பதே.

இந்த சுய நம்பிக்கை வரும்வரையில் ஆலோசித்து ஆலோசித்து ஒரு திட்டத்தைத் தன்னுள் தெளிவதே அரையில் ஆடுவது என்று சொல்லப்படும் முதல் படி. பிறகு பலரும் சேர்ந்துழைத்து பலனடையும்பொருட்டுவிளம்பரப்படுத்த முன்வருவது பிரசாரமாகும். இந்நிலையில்தான் அம்பலத்திற்கு வருகிறது என்றழைக்கிறோம்.

இவ்வாறு சமர்ப்பிக்கப்படுவது ஒரு குற்றங் குறையற்ற திட்டம் என்று சொல்லத் தேவையில்லை. இதைப் பலரும் பிரசாரம் செய்யும்படி செய்வதற்கே பேச்சு அவசியம். இதன் இடையிலேயே சிறுகச் சிறுக இடம் பொருள் ஏவல்கள் தேடப்படும். அவைகளையடையும் மார்க்கங்களையும் தலைவன் சகாக்களுக்கு உபதேசிப்பதே காரியத்தில் முதல்படி. இதுதான் பிரசாரத்தின்

இரகசியம். இப்பிரசாரத்தினல் பயன் பெற்றவர்கள் இக்கூட்டத்தில் சேர்ந்து விடுகிறார்கள். அவர்கள் தாங்களே செய்கையில் சமயத்திற்கு உகந்த வழியில் ஈடுபடுபவர்கள். செய்து காட்டு என்று கூறமாட்டார்கள். செய்து காட்டுவது என்பது செய்ய முயலுபவர்களுக்கே ஒழிய, பார்த்து " சபாஷ் " என்று புகழ் உரை கொடுப்பவர்களுக்கில்லை.

சிலருக்குப் பல இன்னல்கள் இருக்கலாம். சுயநலம் குறுக்கிடவே இன்னும் பக்குவம் பெறாமலிருப்பார்கள். அவர்கள்கூட விஷயங்களை அறிந்திருப்பார்கள். இயன்ற அளவு தியாகம் செய்ய முன் வருவது இவர்கள் கடமை. சிறு செயல்கள், பொருளுதவி சொல்லுதவி இவைகள் மூலம் இவர்கள் இத்திட்டத்தை நடத்த உதவலாம். அவ்விதம் பகிரங்கமாக ஆக்கல் வேலையில் அபிமானம் காட்டுவதுகூட தர்ம சங்கடத்தில் சிலரை ஆழ்த்தும். உண்மை தர்மம் இன்னது என்று அறிய எல்லோருக்கும் ஆற்றல் ஒரே அளவில் இல்லாததால் இவ்வித சங்கடங்கள். அவர்கள் செய்யக்கூடியது மௌனமாக அம்பலம் ஏறியது அமோகமாகப் பெருகட்டும் என்று மனதார வாழ்த்துவதே. உள்ளூர இவ்வித எண்ணம் சுரக்கும்பக்ஷத்தில் இந்த நிர்மாண திட்டத்தைப் பகிரங்கத்தில் அழிக்கமுயலவே அவர்கள் ஏவப்பட்டாலும் அவர்கள் உண்மையில் தேசத்தொண்டர்களே. பீஷ்மர், துரோணர் முதலியவர்கள் இவ்வர்க்கத்தில் இருந்து பாண்டவர்களின் க்ஷேமத்தைப் பெருக்கி இருக்கிறார்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது.

இவ்விதம் நன்கு ஆராய்ந்து பார்த்தால், நிர்மாணத் திட்டங்கள் என்பவைகள் சுயநம்பிக்கையை வளர்க்கும் ஆக்கல் வேலைகள் என்பது விளங்கும். குடிசைத் தொழில்கள், ஆவசியக் கல்வி, உணவு உற்பத்தி, சமூகச் சீரமைப்பு, ஒற்றுமையுடன் வாழ வழிக்கோலுவது முதலிய யாவும் நிர்மாண திட்டங்களே. பெருவாரியாக இக் கைங்கர்யம் பெருகச் சொல்லும் யோசனைகளும் திட்டங்களே.

இவ்வாறு பிரசாரத்திற்குக் கொண்டு வரும் ஒரு திட்டம் தான் போதனை செய்து தொண்டை நடத்த உதவும். தொண்டர் படையைத் தலைவரிடமிருந்து பாமரர் வரையிலும் பிணைக்கும் வகையில் அமைப்பது (linked leadership for mass contact.)

ஜனங்களுக்கு இன்றிமையாதவனும் ஆபத்தில் உதவி நன்மதிப்பைப் பெறச் சக்திவாய்ந்தவனும் ஆகிய வைத்தியன் இப் பாமரர் தொடர்புக்கு மிக உகந்தவன். அவனுக்குத் துணையாக போதனை செய்யும் ஆசாரியன் சேர்ந்தால் பலன் பன்மடங்கு பெருகும். பாமரர்களுக்கு அவசர காலத்தில் செய்யப்பட வேண்டிய தாத்காலிக சிகித்சைகளை யறிந்த ஆசார்யனாக இருந்துவிட்டால், தொண்டு மிக்க சுலபத்தில் நிறைவேறும். கிராமங்கள் தோறும் சிறிய அளவில் இக்கைங்கர்யத்தை நிறைவேற்ற உதவும் ஆவசியகக் கல்வியைப் போதிக்கும் சிறிய ஆசிரியனே கிடைக்கக் கூடியவன் என்று தேறியே வைத்திய வாத்தியார் என்று இத்தொண்டனைத் தயார் செய்து, பெருந் தேர்ச்சி பெற்ற தலைவர் வரையிலும் தொடர்பு ஏற்படும் வகையில் எவ்வாறு அமைக்கலாம் என்பதே எனது பல வருட ஆராய்ச்சி. இதைப் பலவிதங்களிலும் அலசிப் பார்த்துத் தற்பொழுது தீவிரமான நம்பிக்கையின்பேரில் அரையிலாடுவதை முடித்து உங்களுக்குச் சமர்ப்பிக்கலானேன்.

திட்டங்களின் விவரங்கள் படிப்படியாக விளக்கப்படும். அவை அம்பலம் ஏறுமா ?

மண் குதிரை

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]

ஜீர்ணச்ருதி :—என்ன, ஸுச்ருதி! உம்மைப் பார்த்தால் இன்று ஒரு மாதிரி யாயிருக்கு?

ஸுச்ருதி :—ஆமாம் வரட்சிக் கால மல்லவா இது. என்ன ஓடியாடிச் சம்பா தித்தாலும் வயிற்றுக்குக் காணவில்லை. உம்மைப்போல் இரண்டு பிள்ளைகள் சம் பாதித்துச் சாப்பாடு போட்டால் நானும் எண்பது வயதில் எள்ளுருண்டைபோல் குதிப்பேன்.

ஜீ :—ஓய்! "சதாயு : புருஷ:" என்று சொல்லியிருக்கு. நான் இன்னும் இரு பது வருஷம் இருந்து நல்ல ஸங்கீதம் கேட்க வேணும். அதற்குள் என் பேரில் கண்ணை வைத்துவிடாதேயும். அதிருக்கட்டும். உம் ஜரிகை அங்க வஸ்திரம் எங்கே? அது இல்லாததனால் தான் முகம் சோபை யிழந்ததுபோல் காணப்படுகிறது. அந்த விசிறி மடிப் பைக் கழுத்தைச் சுற்றிப் போட்டுக் கொண்டால் உமக்கு 25 வயதுதான் மதிக்கலாம். அந்தக் காலத்தில் வித் வான்கள் சாதராவைப் போர்த்திக் கொண்டு வெளியில் புறப்படுவார்கள். இந்தக் காலத்திற்கு விசிறிமடிப்பு ஜரிகை அங்க வஸ்திரம் அவ்வித அடையாள மாய் வழங்கி வருகிறது. அது இல்லா மல் நீர் ஒருநாளும் வெளியே வரதில்லையே. இன்றைக்கு ஏன் அதைக் காணோம்? சற்றுமுன் வரட்சி என்றீரே, அங்கவஸ்திரத்தை அடகு வைத்துச் சாமான் வாங்கிவிட்டீரோ?

ஸு :—செட்! புத்தி கெட்ட கிழமே! என்ன வரட்சியானாலும் தம்பூராவை யும் விசிறி மடிப்பு அங்கவஸ்திரத்தை யும் ஒரு பாடகனும் அடகு வைக்கமாட் டான். என் அங்கவஸ்திரத்தை நான் நேற்று மனதார தானம் செய்துவிட் டேன்.

ஜீ :—இனி இந்த ஸங்கீதத் தொழில் வேண்டாமென்றா?

ஸு :—அப்படி நினைக்கும்படி தான் இருக்கு. கையில் எது இருந்தாலும் கொடுத்திருப்பேன். அந்த ஸமயத்திற்கு அதுதான் அகப்பட்டது.

ஜீ :—யாராவது ரொம்பப் பெரிய வித்வானோ?

ஸு :—வித்வான்களில் என்னைவிடப் பெரியவன் என்று ஒருவனையும் தான் நான் ஒத்துக்கொள்வதில்லையே.

ஜீ :—பின்னே யாரோ?

ஸு :—"எந்தரோ மஹானுபாவுலு. அந்தரிகி வந்தனமு" என்று தியாகையர் ஏன் பாடினார்?

ஜீ :—புரியவில்லை.

ஸு :—எங்களை யெல்லாம்விட அதிக பக்தியோடும் சரியான முறையோடும் பரமேச்வரனைப் பூர்வ ஜன்மத்தில் ஆரா தித்த ஒரு புண்ணியவான்.

ஜீ :—ஆஹா. அப்படியா? கேட்ப தற்கே எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறது.

ஸு :—நாங்கள் எல்லாம் கடுப்பான கிணற்றுத் தண்ணீரை எடுத்து அபிஷே கம் பண்ணினோம். அவன் குடம் குட மாய்த் தேன் அபிஷேகம் பண்ணின பாக்கியவான்.

ஜீ :—(கண்ணில் ஜலம் ததும்ப) ஹா ஹா ஹா! என் அப்பனே ஜகதீசா!!

ஸு :—நாங்கள் எல்லோரும் பாடுகி றோம். அவன் கானம் பண்ணுகிறான்.

ஜீ :—சிவன்வாள் கானம் பண்ணினர் என்றும் மற்றவர்கள் பாடினார்கள் என் றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். கானம் பண்ணுகிற மற்றொருவரும் இருக்கிறாரா?

ஸு :—அவரை நேற்றுக் கண்டேன்.

ஜீ:—எந்த தேசமோ?

ஸா:—வடதேசம்.

ஜீ:—ஸங்கீதமே தொழிலோ?

ஸா:—பரதேசி.

ஜீ:—பிரும்ஹானந்தப் பரதேசி என்று ஒரு மஹான் இருந்தார். அவரைப் போலவோ?

ஸா:—இவன் பிச்சைக்காரன்.

ஜீ:—ஓஹோ? இரண்டுநாள் முன் எங்கள் தெருவுக்கும் ஒரு பிச்சைக்காரன் தன்னுடன் ஒரு சிறு பெண்ணையும் அழைத்துக்கொண்டு வந்தான். அவன்தானோ?

ஸா:—ஆமாம்.

ஜீ:—திவ்ய சாரீரம். வீதி பூராவாக அமிர்தப் பிரவாகம் ஓடுகிறது, அவன் வாயைத் திறந்தால். மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு வந்தான். ஏதோ தேவலோகத்திலேயிருந்து குதித்தவனைப்போல் தோன்றியது. எல்லோரும் சாப்பிட்டுவிட்டுக் களைப்பாறுகிற சமயம். ஆனால் இந்த த்வனி காதில் விழுந்ததும் குழந்தைகள் பொம்மனாட்டிகள் ஒருவர் பாக்கியில்லாமல் வீட்டு வாசல்களிலும் ஜன்னல்களிலும் வந்து குவிந்துவிட்டார்கள். வீட்டுக்கு வீடு அவனை வருந்தி அழைத்தார்கள். அரிசியும், வேஷ்டியும், பணமும் கொடுக்காதவர்களில்லை. ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய புல்லாங்குழல் கோகுலத்தைப் பரவசப்படுத்தியதுபோல், அவன் புகுந்த தெருவெல்லாம் ஒரு தெய்விக உணர்ச்சியால் குதித்தெழுந்தது. அவனை நான் பல பாட்டுக்கள் பாடச்சொல்லி அரிசி, வஸ்திரம், பணம், எல்லாம் கொடுத்தேன். பகவானுக்குப் பூர்வ ஜன்மத்தில் குடம் குடமாய் தேன் அபிஷேகம் செய்த புண்ணியவான்தான் அவன். அந்த சாரீரத்தின் இனிப்பு வருணிக்க முடியாது. அவன் ச்ருதியோடு சரிபார்க்கும் த்வனி கொடுத்தால் போதும். ஒரே ஆனந்த பரவசம்தான். ஆஹா! இப்போ நினைத்தாலும் மயிர்க்கூச்சல் அரைகிறது. அவனை அப்புறம் காணோம். மாயமாய் மறைந்து போய்விட்டான்.

ஸா:—நேற்று எங்கள் தெருவுக்கு வந்தான். அந்தச் சிறு பெண்ணுக்கும் குளிர்ந்த இனிய குரல். இருவரும் சேர்ந்து தேனில் சர்க்கரையும் திராக்ஷையும் கலந்ததுபோல் பாடிக்கொண்டு வந்தார்கள். அந்த ஆனந்த பரவசத்தில் இன்ன பாஷையில் இன்ன ராகத்தில் பாடினுன் என்பதுகூட எனக்குக் கவனிக்கத் தோன்றவில்லை. இன்னது செய்வதென்றும் புரியவில்லை. மேல்அங்கவஸ்திரத்தை எடுத்து அவன் பேரில் விசிறிவிட்டு அப்படியே அரை மணி நேரம் ஸ்தம்பித்து நின்றுகொண்டிருந்தேன்.

ஜீ:—நம் ஸங்கீத வித்வான்களில் ஒருவருக்காவது அந்த சாரீரமில்லையே! இதுவும் ஒரு சாபக்கேடா?

ஸா:—ஒன்று பார்த்திருக்கிறீரா? வடதேசத்து ஸங்கீத வித்வான்களெல்லாம் இனிமையான சாரீரமுடையவர்களாயிருக்கிறார்கள். சாரீரம் ஸுகமில்லாத ஒருவனாவது வடதேசத்தில் பாடகன் என்று வெளிக்கிளம்புவதில்லை. நம் தேசத்தில் அந்த வரைமுறை கிடையாது.

ஜீ:—நீர் சொல்லுவது வாஸ்தவம் தான். ஆனால் அது ஏன் அப்படி?

ஸா:—ஏன் என்றால் ஸுகபாவத்தையும் உள்ளப் பூரிப்பையும் பிரதானமாய்க்கொண்டது வடக்கத்திய ஸங்கீதம். ஞானபாகத்தை முக்கியமாய்க் கொண்டது நம் ஸங்கீதம், அதாவது, இன்று நடவடிக்கையில் இருக்கும் நம் ஸங்கீதம். ஸங்கீதத்தின் ஜீவ தத்துவம் ச்ருதி ஸுகமும், பரமாத்மாவிடம் சித்தத்தை லயிக்கச் செய்யும் பக்திப் பரவசமும். இவ்விரண்டு அம்சங்களையும் கொஞ்சம் கொஞ்சமாய் நம் வித்வான்கள் மறந்து திறமை, பாண்டித்யம், அதிசயச் செயல்கள், தீவ்ர புத்தி முதலிய அம்சங்களை அப்பியஸித்துப் பிரகடனம் செய்து வருகிறார்கள். இவர்களின் ஸங்கீதப் பயிற்சி முறையில், ஆரம்பத்தில் இனிமையுடைய சாரீரம்கூட நாளடைவில் குட்டிச் சுவராய்ப் போய்விடுகிறது. சாரீரம் இருக்கிறதென்று நம்பி வாய்ப்பாட்டை

அப்பியாசம் செய்யத் துவக்கினவர்கள் மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினவனின் கதிக்கு உள்ளாகிறார்கள். கிழவியின் சிங்காரமும் சாரீரம் இழந்தவர்களின் பாட்டும் ஒரேமாதிரிதான். நம் ஜனங்களும் ச்ரோத்திரஸுகம், மனதை உருக்கும் பாவரஸம் என்ற ஸங்கீத அந்தரங்க குணங்களை முன்னணியில் வைத்துக்கொள்ளாமல், உருட்டல் பெரட்டல், உயரம் தாண்டல், இடஞ்சல்களில் சமாளித்துக்கொள்ளல், கம்பியில் நடத்தல், மூச்சடக்கி ஆயாஸப்படுதல், மற்றும் பற்பல விந்தைகளைக் காட்டுதல் முதலிய ஸங்கீதப் பெரும் முயற்சிகளையே ஸங்கீதத்திற்கு முற்றுப் புள்ளிகளாய் அங்கீகரித்துத் தங்கள் பிரசம்ஸைகளை நிறுவி வருகிறார்கள். இது நமது துர்பாக்கியத்தினால்தான். உத்திர தேசத்தவர்களின் சாரீர இனிமையும் வலுவும் தக்ஷிண தேசத்தில் எந்தநாளிலும் அதிக ஸுலபமில்லை என்றாலும் இரண்டொரு தலைமுறைக்கு முன்னால் இவ்வளவு மோசமில்லை.

ஜீ:—அப்போதுகூடப் பட்டணம் ஸுப்பிரமணிய ஐயர், கோனேரி ராஜபுரம் வைத்தினாதய்யர், கோயம்பத்தூர் ராகவய்யர் முதலான பிரபல வித்துவான்களுக்குச் சாரீர வஸதி கிடையாதென்றும் கட்டைத் தொண்டையை ஸாதக பலத்தால் சௌகரியப்படுத்திக் கொண்டு சிரமப்பட்டுப் பாடிவந்தார்கள் என்றும் சொல்லுகிறார்களே.

ஸு:—"சொல்லுகிறார்களே" என்று ஏன் பேசுகிறீர்? நீர் என்னசொல்லுகிறீர்?

ஜீ:—நான் வைத்தினாதய்யர் பாட்டு மட்டும்தான் கேட்டிருக்கிறேன். மற்ற இருவர்களை நான் பார்த்ததே கிடையாது. பார்க்கவோ, கேட்கவோ நேரவில்லை.

ஸு:—எனக்கும் அவர்களைத் தெரியாது. நாம் இருவரும் கேட்டது வைத்தினாதய்யர் பாட்டுத்தான். அவர் சாரீரத்தைப்பற்றி என்ன சொல்லுகிறீர். "அவன் சொன்னான்", "இவன் சொன்னான்" என்ற பேச்சைத் தள்ளிவிடும். இந்தமாதிரி விஷயங்களில் அபிப்பிராயம் கொடுக்கக்கூடிய யோக்கியதையுடையவர்கள் மிகச் சிலரே. ஆனால் அவர்கள் பேச்சுக்கு இடம்கொடாமல் இதரர்களே கோலாஹலம் செய்து விந்தை விந்தையான கொள்கைகளை ஸ்தாபனம் செய்துகொண்டு வருகிறார்கள். ஆகையால் நமக்குள் பேசிக்கொள்வோம். வைத்தினாதய்யர், சாரீரமில்லாமல் கச்சேரி பண்ணினவர்களில் ஒருவரா? என் கேள்விக்கு நேராகப் பதில் சொல்லும்.

ஜீ:—அவர் சாரீரத்திற்கு இடஞ்சல் சிலசமயம் ஏற்படுவதுண்டு. அதனால் அவர் முழுத்திறமையையும் காண்பிக்க முடியாமல் சிரமப்பட நேர்ந்திருக்கிறது. இடஞ்சல் சரீர தர்மம். சிலருக்குத் தொண்டை அடிக்கடி கட்டிக்கொள்கிறது. சிலருக்கு எவ்வித அபத்தியம் செய்தாலும் சாரீரத்தின் கணிப்புக் கெட்டுப்போவதில்லை. வைத்தினாதய்யர் சாரீரம் இடஞ்சல்களால் பாதிக்கப்படும் தன்மையுடையதே ஒழிய, நல்ல சாரீரம் இல்லை என்று ஒருநாளும் சொல்லமுடியாது. சாரீரம் ஒத்தக் கொண்டுவிட்டால் அதற்கு இணை கிடையாது. அந்தக் கம்மல் சாரீரத்தில் ஒரு இரட்டை த்வனி காதுக்கு இனிமையாயிருக்கும்.

ஸு:—"கம்மல் காதுக்கு அழகு". கம்மலும், கணிப்பும், அழுத்தமும், கம்பீரமும், உள்ள அவர் சாரீரம் இணையற்ற ரீதியில் ச்ருதி லயமுள்ளதாயும், மேக கர்ஜனைபோன்ற விவரமான, காத்திரமான, துரிதகாலப் பேச்சுக்களுடையதாயும், கமகஜாதிகளுக்கு இயல்பாய் உறைவிடமாயும் இருந்ததுடன் அவருடைய அபாரமான ஞானப்பெருக்கிற்கு உயரிய கரைக்கட்டாகவுமிருந்தது நாம் எல்லோரும் அநுபவித்தறிந்த விஷயமே. நல்ல ஜாத்ய சாரீரங்களை இருவகையாய்ப் பிரிக்கலாம். ஒன்று ஓங்கார சாரீரம். மற்றொன்று ரீங்கார சாரீரம். வைத்தினாதய்யருடைய சாரீரம் ஓங்கார சாரீரத்திற்கு முதல்தரமான உதாஹரணம். பூச்சி ஐயங்கார் சாரீரம் ரீங்கார சாரீரத்திற்கு ஒரு முக்கியமான உதாஹரணம். நான்கு வேதங்களின் ஸாராம்சம் ஓங்

7, கௌன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு ஆபீஸ் :—"நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்"
362, சைனபஜார் ரோட், எஸ்ப்ளனேட்.

சப் ஆபீஸ்கள்: பெங்களூர் & மதுரை

NIJ-11.

காரம் என்பதுபோல் ஸகல சாரீர குணங்களும் உறையுமிடம் ஓங்கார சாரீரம். காம்பீர்யத்தையும் ரக்தியையும் அடிப்படையாகக் கொண்டது. வைத்தினதைய்யர் சாரீரம் கச்சேரிக்கென்றே அமையப்பெற்றது என்பதற்கு, அவர் நாலு, நாலரைக்கட்டை ச்ருதியில் பாடிக்கொண் டிருந்ததே தகுந்த அத்தாக்ஷி. அடுத்த தலைமுறையில் ஜாத்ய சாரீர பேரருள்பெற்றவர் புஷ்பவனம் ஐயர். ரக்தி பிரதானமாயுள்ள இவருடைய சாரீரப்பெருமைகளைப்பற்றி ஏற்கனவே விஸ்தாரமாய்ப் பிரஸ்தாபித்திருக்கிறோம். (1938 நவம்பர் 20, டிஸம்பர் 4, பாரதமணி இதழ்களைப் பார்க்கவும்). இம்மூவர்களும் பாடிக்கொண்டிருந்தவரையில் அவர்களுடைய சாரீரம் ஏழரைநாட்டு சனீச்வரனின் வசப்பட்ட நளமஹாராஜனின் கதிக்கு உள்ளாகாமல் உடன்பிறந்த மேனியுடன் பி ர கா சி த் து வந்தது. இயற்கைச் சாரீரமும் செயற்கைப் பயிற்சியும் கரைகடந்த அ ள வி ல் ஒருங்கே சேர்ந்திருந்த காலத்தில் நாம் ஸங்கீதம் கேட்டு அனுபவித்த ஆனந்தத்திற்கும், தற்காலத்தில் கேட்டு அனுபவிக்கும் ஆனந்தத்திற்கும், பத்து வருஷங்களுக்கு முன்னால் விருந்து உண்டு களித்ததற்கும் இப்போது ரேஷன் காலத்தில் சாப்பிட்டு வயிறு வளர்க்கிறதற்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது.

ஜீ:—அப்போது இரண்டரை அணுவுக்கு ஜகதீசய்யர் ஹோட்டலில் சாப்பிட்ட சாப்பாடு மறுபடி இந்த ஜன்மத்தில் சாப்பிடப் போகிறோமா என்றுதானிருக்கிறது.

ஸ:—மற்றொரு விஷயம். அந்தக் காலத்தில் வித்வத் கோஷ்டிக்குத் தனி மதிப்பு இருந்தது. நாடகமேடையில் அருமையான சாரீர ஸம்பத்தும் உயர்ந்த ஸங்கீத ஞானமுமுள்ள நடிகர்களும், மிகச் சிலாக்கியமான யோக்யதை யுடைய பாடகிகளும் தங்கள் தங்களுக்குரிய ரஸ் தாக்களில் ஸஞ்சாரம் செய்துகொண்டு ஜனங்களின் மதிப்பையும் ஆதரவையும் பெற்றுவந்தார்களே ஒழிய, ஸங்கீத வித்வத் பிரமுகர்களுக்குப் போட்டியாய்க் கச்சேரி மேடையில் ஆக்கிரமிப்பு ஏற்படவில்லை. தற்காலம் கச்சேரி வித்வான்களில் கிர்குலேயாத இயற்கைச் சாரீர ஸம்பத்துடையவர்கள் குறைந்துவிட்டபடியால், சாரீரத்தையே முக்கிய பெருமையாகக்கொண்ட நடிகர்களும் பாடகிகளும் இவர்களுக்குச் சமமாகவும் மேலாகவும் பொது மக்களின் பேராதரவைப் பெறக் கூடியவர்களாகி விட்டார்கள் என்பது என் அபிப்பிராயம்.

ஜீ:—உண்மையே. திருமருகல் நடேசன் வாசித்தவிட்ட காம்போதி, கானடா அடாணா, கேதார கௌளை,சகானா ராகங்களைப் புதுக்குடி சாமினதைய்யர் பாட ஆரம்பித்தால் இது மேலா அது மேலா என்று சொல்லத் தெரியாது. அப்படி யோக்யதை உள்ளவர்கள் நாடக கோஷ்டிகளில் இருந்தார்கள். ஆனால் வைத்தினதய்யர் எங்கே? சாமினதைய்யர் எங்கே? கச்சேரி ஸங்கீதத்திற்கும் நாடகமேடை ஸங்கீதத்திற்கும் தனி வரம்புதான் இருந்தது.

ஸ:—தாத்காலிகக் கலப்படங்களுக்கெல்லாம் காரணம், ஸங்கீதத்திற்கு இன்றியமையாத அடிப் ப டை யா ன "கர்ணானந்தம்" என்ற தத்துவத்தை முதல் இலக்காக வைத்துக்கொள்ளாமல் வித்துவத்துவப் பெருமையைக் காயகர்கள் போற்றி வருவதேயாகும். தனித்தனி அவயவ அமைப்புகள் குற்றமற்றவைகளாயினும், ஸர்வாங்கபூஷணங்கள் தளர்ந்திருப்பினும் இளம் நங்கைகளுக்கு "லாவண்யம்" என்ற வருணிக்க முடியாத எழில் செல்வமே வசீகரத்திற்குக் காரணமாகிறது அல்லவா? அதுபோல் ஸங்கீதத்திற்குச் சாரீர அமைப்பு ஒரு தெய்வ ஸம்பத்து.

ஜீ:—மஹா வைத்தினதைய்யர் காலம் முதல் நாளது வரை சாரீர ஸம்பத்து படிப்படியாக இறங்கு முகமாய்த்தான் தெரிகிறது. ஆனால் சக்கிரம் சுழன்று கொண்டிருப்பதால் மறைந்தது திரும்பும் காலமும் ஒன்றுவரும்.

ஸ:—நாம் ஈசுவரனை மறந்திருக்கும் வரையில் எங்கே திரும்பப் போகிறது?

தாக்ஷிண்யம்

["குகப்ரியை"]

"தாக்ஷிண்யம், இதென்ன வார்த்தை? தமிழா? ஸம்ஸ்க்ருதமா? அல்லது கலவையா?" என்று கேட்கிறாள் சுந்தரி. அவளுக்கு என்ன பதில் சொல்வது? எனக்கோ விஷயம் தெரியாது. என்ன பாஷை என்று ஆராய்ச்சி செய்வது யார்? அவள் மனதிற்குள் நான் ஏதோ மகா மேதாவி என்று எண்ணம். உண்மையில் தெரியாது என்று சொன்னாலும் நம்பமாட்டார்கள். ஏதாவது ஒரு பதில் சொல்லித் தான் தீர வேணும். சொல்லாம லிருந்துவிட்டால் கர்வம் என்பார்கள். என்ன செய்வது? தாக்ஷிண்யந் தான். இன்னொரு முறை அவளைச் சந்திப்பதற்குள் உங்களுக்கு இதைப்பற்றி ஏதாவது தெரியுமானால் சொல்லுங்கள்.

எங்கள் சங்கத்திலே, 3-30க்கு மீட்டிங். பரபரவென்று எழுந்து தலை வாரி புதுப் புடவையை மடிப்புக் கலையாமல் உடுத்துக்கொண்டு கிளம்ப வேண்டியது தான். சரியான சமயம், எங்கிருந்தோ வந்து முளைக்கிறாள் கோமதி. அவளுக்கு ஏதாவது இனம் தெரியுமா? அதுதானே கிடையாது.

ரொம்ப சாவகாசமாக சர்வ சாதாரணமான குரலில் "ஏன் அம்மாமி! மைசூர் ஜார்ஜெட்மாஷ்ருப் பெண்ணுக்கு வாங்கினீர்களே. அது எங்கே விற்கிறது? எங்கள் ஓர்ப்படியின் தம்பி சுப்பு இருக்கிறானே இல்லையோ? அவனுடைய ஒன்றுவிட்ட அத்தாமன்னிக்கு அவசரமாய் வேணுமாம். எனக்கோ வீட்டில் அசாத்ய வேலை. ஓய்ச்சல் ஒழிச்சல் கிடையாது. இந்தப் பஞ்ச காலத்திலே ஒன்றரையணைக் கொடுத்து கவர் எழுதி இருக்கிறாள். இதையாவது செய்ய வேண்டாமா? என்ன பண்ணுகிறது தாக்ஷிண்யந் தான்."

எனக்கோ உள்ளுக்குள்ளே பரபரப்பு. நேரமோ ஆகிறது. அவளோ உட்கார்ந்து விட்டாள். "ஓகோ! அதுவா? விலாசம் இதிலேதான் குறித்து வைத்தேன். பார்க்கிறேன்" என்று தேடத் தொடங்கினேன்.

"நீங்கள் எங்கேயோ புறப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கு. இந்தச் சமயத்திலே வந்து தொந்தரவு செய்கிறேன்" என்று சொல்லிக்கொண்டாளே ஒழிய எழுந்திருந்தபாடில்லை.

"தேட வேண்டாம் மாமி. அது கிடக்கட்டும் எங்கே போகப் போகிறீர்கள்? (நல்ல சுப சகுனம்) கிளப்புக்கா, சபாவுக்கா? எங்காத்துக்கும் மூன்று 'ஓசி' டிக்கெட் வந்தது. கழுகுக்கு மூக்கிலே வியர்க்கும் என்பார்களே அது போல வந்து விடுகிறார் அவர் சினேகிதர். கொடுக்காமல் என்ன செய்கிறது. அதிலேயும் எங்ககத்திலே இவர் உண்டோ இல்லையோ, ரொம்ப தாக்ஷிண்யம்" இந்த ரீதியில் காலக்ஷேபம் நடந்து கொண்டே இருக்கும்.

"நாம் போகிற காரியம் உருப்பட்டாற் போலத்தான் என்று மனதில் சபித்துக் கொள்ளுவேன். கடியாரத்தைப் பார்ப்பேன், வாயிலைப் பார்ப்பேன். அவள் எழுந்தால்தானே. எப்படிக் கிளப்புகிறது? தாக்ஷிண்யந்தான். துடுக்கென்று நாழியாய்விட்டது என்று சொல்ல முடியுமா? அது எவ்வளவு அநாகரீகம்! மட்டு மரியாதையில்லாமல் எப்படிச் சொல்லுகிறது? கடைசியில் நல்ல வேளை ஒரு யுக்தி தோன்றுகிறது. "அப்பாடா" வென்று வெளிப்படையாய்ச் சொல்ல முடியாது. மனத்துக்குள் சொல்லலாம்.

"இன்று சங்கத்திலே பிரசங்கம் அற்புதமாயிருக்கும். ஒரே கொடேஷன்

லாக் கொட்டுவார் கபகபன்னு வருகிறீர்களா ?" என்று உபசாரம் ! அவள் கண்களைக் கொட்டையாய் விழித்து, "அப்படியா ? பிரசங்கம் என்றால் எனக்கு உயிராச்சே. இதற்கென்ன பிரமாதம். இதோ ஒரு நொடியில் வந்து விடுகிறேன். தலை இப்படியே நன்றாயிருக்கிறதா ? (கடிகாரம் 3½ அடிக்கும்.) புடவை இதுவே போதுமா ? இந்த ரவிக்கை இதற்கு "மாச்" ஆகிறதா ? என்ற கேள்விகள். நமக்கோ நாகரீகம் தெரியாது. எதிரில் நிற்பவளோ பூலோக ரம்பை. அவளுக்கு எல்லா நிறங்களும் ஒரே மாதிரிதான் பொருந்தும். நல்ல பத்தரை மாற்றுக் கறுப்பு, ஐந்தடி உயரம், இரண்டரை அடி அகலம். இதிலே "நவநாகரீகக் குறிப்புகள்" சொல்லியே ஆக வேண்டும்.

கடைசியில் இதற்கெல்லாம் மேலாக இன்னொரு வெடி குண்டு. கெஞ்சும் குரலில் "நீங்கள் வீட்டைப் பூட்டிக் கொண்டு வாருங்கள். இதோ ஒரு நொடி. கொல்லைக் கதவைப் போட்டு விட்டு, பால்காரனுக்குப் பாத்திரத்தை அடுத்தகத்தில் கொடுத்துவிட்டு வருகிறேன்" என்று மாயமாய் மறைந்து விடுவாள்.

நான் என் வேலைகளை முடித்து வீட்டைப் பூட்டிச் சாவியை அடுத்தகத்தில் கொடுத்துவிட்டுப் போவேன். அங்கே, கோமதியகத்தில் புறக்கடைக் கதவுக்கும் தாழ்ப்பாளுக்கும் "ஒத்துழையாமை" பலமாய் நடந்துகொண்டிருக்கும். இவள் அதோடு சத்தியாக்ரகம் செய்துகொண்டிருப்பாள்.

"நல்லவேளை. சரியான சமயத்தில் வந்துவிட்டீர்கள். தாழ்ப்பாளைக் கொஞ்சம் போடுங்கள். நெய் ஜாடியை உறியில் வைத்துவிட்டு வந்துவிடுகின்றேன்" என்பாள்.

எனக்கோ கோபம் கோபமாய் வரும், அலைபோலே. அந்தக் கோபத்தின் முழு வேகத்தையும் கதவின்பேரில் வைத்து மோதித் தாளிட்டு, ஒருவிதமாய்க் கிளம்புவோம்.

* * *

அங்கே போன இடத்திலே இவைகளையெல்லாம் தூக்கி அடித்துவிடும். அப்பொழுதுதான் பிரசங்கியார் நேரங் கழித்து வந்ததன் பொருட்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தொடங்குவார். பிரசங்கமோ அபாரமாயிருக்கும். அப்படியே மயங்கித் தூக்கமே வந்துவிடும்.

ஒன்று அரை கொஞ்சம் அழகான கட்டம் வரும்பொழுது அந்தக் கோமள மாமிக்கு எப்படித்தான் தெரியுமோ ? தன்னுடைய பெருமையைப் "பேச" ஆரம்பித்துவிடுவாள். அவர் ஏழு கட்டை சுருதியில் பேசினால் அம்மாமி எட்டுக் கட்டை. இந்த வைபவத்தில் எந்த விஷயத்தை எந்தக்காதினால் கேட்பது. தாக்ஷிண்யந்தான். நமக்குத்தான் தாக்ஷிண்யம். தலைவலிக்குத் தாக்ஷிண்யமேது ?

இவைகள் எப்படியாவது போகட்டும். என்றைக்காவது ஒருநாள் அகத்தில் ஒரு பக்ஷணமும் இராது. ஒரே ஒரு பிஸ்கட்டைக் குழந்தைக்குக் கொடுப்போமென்று எடுக்கிறது. சொல்லி வைத்தாற்போல, கையும் குழந்தையுமாய் வந்து நிற்பாள் எச்சுமு. என்ன செய்கிறது ? விண்டு கொடுத்தால் மரியாதையாயிருக்குமா ? என் குழந்தைக்கு ஜாடை காட்டிவிட்டு எச்சுமுவின் குழந்தைக்குக் கொடுப்பேன். சோதனைபோல நம்மகத்துக் குழந்தை வீறிடும். என்ன ? என்ன ? என்று கேள்விகள். குழந்தையோ இன்னும் பலமாக "என் பிஸ்கட்டு" என்று ஊளையிடும். அவள் இரண்டாக்கிக் கொடுக்கப் பார்ப்பாள். அந்தக் குழந்தை விடாது. பெரிய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதுபோல நம் குழந்தையை முறைத்துப் பார்க்கிறோம். ஆனால் அதற்கிருக்கும் பொல்லாத்தனம் சொல்லிமுடியாது. "ஏன் கொடுத்தாய், கொண்டா முழுசா" என்று அடம் பிடிக்கும்.

"அப்பொழுதே ஆளுக்குப் பாதியாய்க் கொடுத்திருக்கலாமே" என்பாள் அவள். என்ன பதில் சொல்லுவது ? அசட்டுச் சிரிப்பு சிரித்துவிட வேண்டியதுதான். இதற்குப் பெயர் தாக்ஷிண்

உன்னுடைய தற்காலமும் உன்னுடைய பிற்காலமும்

W.A.C. (I) நேவல் விங்கில் வேலை செயவது இந்திய பெண்களுக்கு, தங்களது தேசத்தின் பிற்காலத்தையும் அத்துடன் தங்களது பிற்காலத்தையும் நிருவுவதில் ஒரு முக்கியமான பொறுப்பை ஏற்று கொள்ளுவதற்கு சித்தப் படுத்திக்கொள்ள ஒரு அறிய சந்தர்ப்பத்தை அளிக்கிறது. இந்திய பெண்களிடம் முனனேற்றமடைந்து தேச சேவையில மற்றநாடடு பெண்கள் போல் முக்கிய பங் கெடுத்துக்கொள்ளவேண்டு மென்ற எண்ணம் வளர்ந்து வருகிறது. வியாபாரம் கைத்தொழில் இவைகளில் இந்தியா தீவிரமாக முன்னேறிவருகிறது. இது பெண் களுக்கு தேவையான சந்தர்ப்பத்தை அளிக்கிறது. நிலமை சமாதான மேற்ப்பட்டதும் சிவில் உத்தியோகங்களுக்கு அனேக நன்கு பயிற்சி பெற்ற ஆணும் பெண்ணும் தேவையாய் இருக்கும் என்பது நிச்சயம். நேவல் விங் பயிற்சியும் அதில் அக்கறையுள்ள புது தொழில்கள் செய்வதால் . அடையும் அனுபவமும் அனேக பெண் களுக்கு லாபகரமான சிவில் வாழ்க்கைக்கு தேவையான யோக்யதாம்சங்களை கொடுக்கிறது என்பது நிச்சயம்.

அனேக பெண்கள் ஏறகனவே சேர்ந்திருக்கிறார்கள். ஆனாலும் இன்னும் அனேகர் தேவையாய் இருக்கிறது. இந்தியாவின கியாதிவாய்ந்த பாரம்பரியத்துக்கு நீங்கள் அருகதையானவர்கள் என்பதை ருசுப்படுத்த இது ஒரு நலல சந்தர்ப்பம்.

பூரா விவரங்களுக்கும் எதாவது ஒரு ரெக்ரூட்டிங் ஆபீசு. அல்லது சமீபத்திலுள்ள W.A.C. (I) நேவல் விங் யூனிட் கமாண்டர் அல்லது துறைமுகப் பட்டிணத்திலுள்ள நேவல் ஆபீசருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

W.A.C. (I)

நேவல் விங்கில் சேருங்கள்

AAA14TM

தேயிலைத் தொழிலின் அபிவிருத்தி

[என். எஸ். நரஸிம்ஹம், எம். ஏ.]

“ சூடான தேத்தண்ணீரை அருந்துங்கள் ”, “தேத்தண்ணீர் பானம் உணர்ச்சியையும் ஊக்கத்தையும் கொடுக்கும்” இவ்விதமான விளம்பரங்களை நேயர்கள் பிரயாண காலங்களில் ரயில் வண்டியிலும், இன்னும் இதர இடங்களிலும் பார்த்து இருப்பார்கள். இவ்விளம்பரங்களை யார் பிரசுரம் செய்கிறார்கள்? இதற்கு எங்கிருந்து பணம் வருகின்றது? ஏன் தேத்தண்ணீரை அதிகமாகக் குடிக்கும்படி ஜனங்களைத் தூண்டவேண்டும்? இவ்விதமான கேள்விகள் நேயர்களுக்கு அடிக்கடி தோன்றி இருக்கும்.

இப்பிரச்னைகளை நன்கு தெரிந்து கொள்ள வேண்டுமானால், தேயிலைத் தொழிலின் உற்பத்தியையும், அது எப்பொழுது நம் தேசத்தில் ஏற்படுத்தப்பட்டது என்பதையும், அதன் அபிவிருத்தியையும் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். தேத்தண்ணீர் குடிக்கும் வழக்கம் நம் தென்னிந்தியாவில் இன்னும் அதிகமாகப் பரவவில்லை. ஆனால் தென்னிந்தியாவில் தேயிலை உற்பத்தியாகாமல் இல்லை. நம் தேசத்தில் தேயிலைத் தோட்டங்களின் மொத்த விஸ்தீரணம் (area) இப்பொழுது 832,000 ஏக்கர் என்று மதிப்பு இடுகின்

யமா? இல்லையா? நீங்களே சொல்லுங்கள்.

* * *

இது ஏதோ குழந்தைகள் விஷயம். போனால் போகட்டும். புதுப் புஸ்தகம் வாங்குகிறோம், சளை சளையாய் ரூபாயை எண்ணிக்கொடுத்து. பாதி படிப்பதற்குள் வந்துவிடுவார்கள்.

“அடாடா! நான் ரொம்பநாளாய்ப் படிக்கவேணுமென் றிருந்தேன். நீங்கள் வாங்கி யிருக்கிறீர்களா? நீங்கள் இராத்திரிக்குள் படித்துவிடுவீர்களா? நாளை காலையில் ராஜுவை அனுப்புகிறேன். கொஞ்சம் கொடுத்தனுப்புகிறீர்களா?” என்று நயமாகக் கேட்கிறார் ஒரு தோழி.

நமக்கோ இன்னது செய்கிறதென்று தெரிகிறதில்லை. “ஆகா! இதற்கென்ன பிரமாதம்” என்று வாய் சொல்லுகிறது. வடமொழியிலே பரிச்சயமில்லாவிட்டாலும்; “புஸ்தகம் வனிதா வித்தம் பரஹஸ்த கதம் கதம்” என்ற ச்லோகமும் தெரியும். தெரிந்து என்ன லாபம்? கௌரி படித்துக்கொண்டே படிப்பாள். பைண்ட் கையோடு வந்துவிடும். உரலையும் உலக்கையையும் அடையாளம் வைப்பாள் குமுதம். எச்சுமு எண்ணெய்க் கையோடு எடுத்துப் புரட்டுவாள். புஸ்தகம் ஒரு வேளை திரும்பிவந்தால் புது மேனியும் வண்ணமுமாய், ஒரு சுற்றுப்பருத்து கனிசமாய்க் கைக்கு வரும். சில பக்கங்களில் குழந்தைகள் பென்ஸிலால் கோடு கிழித்திருப்பார்கள்.

“ஐ ஆம் வெரி ஸாரி” குழந்தை கசக்கிவிட்டான் என்று ஒரு மன்னிப்பு. நாம் என்ன செய்யமுடியும்? ஒரு அசட்டுச் சிரிப்பு. “அதனாலென்ன? பரவாயில்லை” என்போம்.

அருமையான புஸ்தகம் வீணாகிவிட்டதே என்று கண்களில் கண்ணீர் துளிக்கும். இந்தமட்டும் புஸ்தகமாவது திரும்பி வந்ததே என்று இன்னொரு குரல் சொல்லும். தாக்ஷிண்யம் தன நாசம்.

இவைகளெல்லாம் எப்படியாவது தொலையட்டும். இவ்வளவு நேரம் இதையும் எப்படியோ படித்தீர்களே. அதுவும் இதேதான். ஏதோ எழுதிவிட்டாள். ஆசிரியரும் போட்டுவிட்டாரே, படித்து வைப்போம் என்ற தாக்ஷிண்யந் தானே.

றூர்கள். அவைகளில் சுமார் 161,000 ஏக்கர் நம் தென் தேசத்தில் இருக்கின்றது. வட இந்தியாவில் அஸாம் மாகாணத்தில்தான் தேயிலை உற்பத்தி மிகவும் அதிகம். பிரும்மபுத்திரா சமவெளிகளும், கச்சார், ஸில்கத் பிரதேசங்களும் டீ உற்பத்திக்குப் பேர்போனவைகள். இந்த இடங்களில் மாத்திரம் டீ தோட்டங்களின் விஸ்தீர்ணம் 439, 100 ஏக்கர்கள். வங்காள மாகாணத்தில் டீ உற்பத்தியாகும் பிரதேசங்கள் டார்ஜிலிங்கும்,டோ்ஸ–ம் (Dvoars) ஸமுத்திர மட்டத்திலிருந்து (sea level) சுமார் 6,500 அடிவரையில் டார்ஜிலிங் மலைகளில் டீ உற்பத்தி செய்யப்படுவதால், அந்த டீ மிகவும் உயர்தரமான ரகம் எனஎண்ணப்படுகின்றது. இந்த டீயின் விலை எல்லாவற்றையும்விட அதிகம். நம் மாகாணத்தில், தேயிலை நீலகிரி மலை சாரிலும், ஆனைமலையிலும், உற்பத்தியாகின்றது. இதைத் தவிர, திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களிலும் கொஞ்சம் டீ உற்பத்தி செய்யப்படுகின்றது.

டீ நமது தேசத்தில் புராதனமான தொழில் என்று சொல்லமுடியாது. இது ஏற்பட்டு சுமார் 100 வருஷங்கள் தான் ஆகின்றன. இந்தத் தொழிலை நம் தேசத்தில் ஸ்தாபனம் செய்தது ஆங்கிலேயர்கள்தான். ஆங்கிலேய வர்த்தகக் கம்பெனியார் முதலில் வியாபாரம் செய்ய ஆரம்பித்தபொழுது, அவர்கள் டீயை சைனு தேசத்திலிருந்து ஏற்றுமதி செய்து, டீ பானத்தை இங்கிலாந்திலும், மற்றுமுள்ள ஐரோப்பா தேசங்களிலும் பரவச் செய்தார்கள். அப்பொழுது, இங்கிலாந்தில் ஒரு பவுண்டு டீ ரூ. 80 விருந்து சுமார் ரூ. 130 வரையில் விற்றுக்கொண்டிருந்ததாகச் சொல்லுகிறூர்கள். டீ விலை மிகவும் அதிகமாக இருந்ததால், டீ பானமானது பெரிய தனவந்தர்களிடம் தான் குடிகொண்டிருந்தது. ஆங்கிலேய வர்த்தகக் கம்பனிக்கு அந்தக் காலத்தில் டீ வியாபாரம் தான் மிகவும் லாபகரமாக இருந்து வந்தது.

1813வது வருஷம் ஆங்கிலேயப்பார்லிமெண்ட் வர்த்தகக் கம்பெனி சைனு டீ வியாபாரத்தில் அனுபவித்து வந்த பல விதமான சாதகங்களை (privilege) குறைக்க முயன்றூர்கள். அதிலிருந்து கம்பெனி அதிகாரிகள் இந்தியா தேசத்தில் டீ உற்பத்தி செய்வதில் கொஞ்சம் ஊக்கம் காட்டினூர்கள். ஆனால் எங்கு டீ உற்பத்தி செய்வது என்று தெரியாமலிருந்து வந்தார்கள். 1823 ஆண்டில் மேஜர் ராபர்ட் ப்ரூஸ் (Major Robert Bruce) என்னும் ஓர் ஆங்கிலேயர் தேயிலைச் செடிகள் அஸ்ஸாம் மாகாணத்தில் வளருவதாகக் கண்டுபிடித்தார். அது முதற்கொண்டு அவர் அஸ்ஸாம் மாகாணத்தில் சில இடங்களில் தேயிலைச் செடிகளைப் பயிரிடுவதில் சிரத்தைகாட்டி வந்தார். 1834-வது வருஷத்தில் நமது தேசத்தில் வைஸராயாக இருந்த வில்லியம் பெண்டிங் பிரபு தேயிலை இந்தியாவில் உற்பத்தி செய்யமுடியுமா என்று விசாரிக்க ஒரு கமிட்டியை ஏற்படுத்தினூர். அப்பொழுது அந்தக் கமிட்டியின் எண்ணம் சைனு தேசத்திலிருந்து தேயிலை வித்துக்களை வரவழைத்து, அதைக்கொண்டு நம் தேசத்தில் தேயிலை செடிகளை விருத்தி செய்வதாக இருந்தது. ஆனால் இந்தக் கமிட்டியின் பிரயத்தனம் ஒன்றும் அவ்வளவாகக் கைகூடவில்லை. முன்பு சொன்ன ராபர்ட் ப்ரூஸின் சகோதரர் ஒருவர் ஸி. ஏ. ப்ரூஸ் என்பவர் இந்தக் கமிட்டி ஏற்படும்கொஞ்சகாலத்திற்கு முன்பே எங்கு எங்கு ஸ்வபாவிகமாக தேயிலைச் செடிகள் உறபத்தியாகின்றது என்பதைக் கவனித்து வந்தார். இவர்தான் நமது தேசத்தில் தேயிலைத் தொழிலை ஏற்படுத்துவருக்குப் பிரதம புருஷர் எனக் கருதப்படுகின்றது.

கவர்ன்மெண்ட் ஆராய்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்ட தோட்டத்திலிருந்தும்,மற்றும் ஸ்வயமாக வளர்ந்த தேயிலைச் செடிகளிலுமிருந்தும், 18*8 - வது வருஷம் டீ இங்கிலாந்து தேசத்திற்கு முதல் முதலாக அனுப்பப்பட்டது. அந்த டீ மிகவும் நன்றூக இருந்ததென்று கருதப்பட்டது. டீயை ஏலம் போட்டதில், ஒரு பவுண்டு டீ, 16 ஷில்லிங்கிலிருந்து 34 ஷில்லிங் வரை விற்றதாகக் கூறப்

படுகின்றது. இந்தச் செய்தியைக் கேட்டு சில ஆங்கிலேய முதலாளிகள் இந்தியா தேசத்தில் டீ தோட்டங்களைப் பயிர் செய்யலாம், அதிலிருந்து நல்ல லாபம் கிடைக்கும் என்று நம்பிக்கை கொண்டார்கள். 1839-வது ஆண்டில் முதன் முதலாக அஸ்ஸாம் டீ கம்பெனி ஏற்படுத்தப்பட்டது. அதன் மூல தனம் 2 லக்ஷம் பவுன். முதலில் அந்தக் கம்பெனியின் நிர்வாகம் மிகவும் மட்டமாக இருந்தது. முதல் 13 வருஷங்கள் அந்தக் கம்பெனிப் பங்குதாரர்களுக்கு ஒரு பைசாகூட டிவிடென்டு கொடுக்கவில்லை. இந்தக் கம்பெனியின் 120 பவுன் மதிப்புள்ள பங்குகள் ஒருசமயம் 2½ ஷில்லிங் விற்றதாகச் சொல்லப்படுகின்றது. 1852-ம் வருஷம் முதற்கொண்டு கம்பெனி அபிவிருத்தி அடைய ஆரம்பித்தது. லாபம் அதிகமாகி வந்தது. இதனால் இங்கிலாந்து முதலாளிகள் மறுபடியும் இந்தத் தொழிலில் பணத்தைப் போட முன்வந்தார்கள்.

நமது அரசாங்கத்தாரும் இந்தத் தொழிலை முன்னுக்குக் கொண்டுவர பிரயத்தனம் செய்தார்கள். அஸ்ஸாம், ஸில்கட், கச்சார், டார்ஜானிங் இந்தப் பிரதேசத்தில் டீ விவசாயிகளுக்கு (planters), கவர்ன்மெண்ட் நிலங்களை மிகவும் குறைந்த விலைக்கு விற்றார்கள். ஒரு ஏக்கர் விலை 2 ரூபாயிலிருந்து 5 ரூபாய் வரையில் கொடுத்ததாகச் சொல்லப்படுகின்றது. அதே சமயத்தில் ஆங்கிலேய பாங்கிகளும், விவசாயிகளுக்கு முன் பணம் கொடுத்து, பின்பு கொஞ்சம் கொஞ்சமாக வாங்கிக்கொண்டது. வட்டியும் சுலபமான வட்டி. இதனால் டீ தொழில் நாளுக்குநாள் அபிவிருத்தி அடைய ஆரம்பித்தது. இத்தொழிலிலிருந்து வந்த லாபத்தைக்கொண்டு, டீ கம்பெனிகள் கொஞ்சம் கொஞ்சமாக தரிசாகக் கிடந்த நிலங்களிலும் டீ உற்பத்தி செய்ய ஆரம்பித்தார்கள். 1885-வது வருஷத்தில் டீ பயிரிட்ட நிலங்களின் விஸ்தீர்ணம் 310,595 ஏக்கர் என்று மதிப்பிட்டார்கள். இது 1900-வது ஆண்டில் 524,720 ஏக்கருக்கு அபிவிருத்தி அடைந்தது. 1930-வது வருஷத்தில் டீ தோட்டங்களின் விஸ்தீர்ணம் 803,532 ஏக்கர். 1937-வது வருஷத்தில் 834,371 ஏக்கராக அபிவிருத்தி அடைந்தது.

இதேமாதிரி டீ உற்பத்தியும் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டுவந்தது. 1900-வது ஆண்டில் டீ உற்பத்தி சுமார் 20 கோடி பவுண்டு ஆக இருந்தது. இது 1929-வது ஆண்டில் 43·3 கோடியாகவும், 1939-வது வருஷத்தில் 44·6 கோடியாகவும், 1942-வது ஆண்டில் 57 கோடியாகவும் அபிவிருத்தி ஆகிற்று. சென்ற இரண்டு வருஷங்களாக டீ உற்பத்தி நம் தேசத்தில் கொஞ்சம் குறைவு. 1943-வது வருஷத்தில் டீ உற்பத்தி 55·5 கோடி பவுண்டாக இருந்தது. 1944வது வருஷத்தில் 50·7 கோடி பவுண்டுதான் உற்பத்தி ஆகிற்று என்று கணக்கிடுகின்றார்கள். இதில் தென்னிந்தியாவின் பங்கு சுமார் 10 கோடி பவுண்டு. சென்ற இரண்டு ஆண்டுகளாக டீ உற்பத்திக்குச் சில அசௌகரியங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. அஸ்ஸாம் மாகாணத்தில் யுத்த துவக்கத்தின் காரணமாக, தோட்டத்தில் வேலை செய்துவந்த கூலி ஆட்கள், சிலர் யுத்தத் தொழில்களில் அதிக வரும்படி வந்ததால், டீ தோட்டங்களைவிட்டுப் புதிய வேலைக்குப் போய் விட்டார்கள். கூலியாள்கள் சிரமம் மாத்திரமல்ல; மற்றும் செயற்கை எருக்கள் நெருக்கடி. அதாவது அமோனியம் சல்வேட் அயல் தேசத்திலிருந்து அதிகமாக வருவதில்லை. தோட்டத்தின் மேல் வேலை பார்த்துவந்த மேல் அதிகாரிகள் சிலர் யுத்தத்தின் காரணமாக சைனியத்தில் சேர்ந்துகொண்டார்கள். அதுவும் தவிர, போக்குவரத்துச் சாதனங்கள் (Transport) மிகவும் குறைவு. மோட்டார் லாரிகள் பெட்ரோல் முதலியவைகள் நெருக்கடி. இந்தக் காரணங்களால், சண்டை முடியும் வரையில் டீ உற்பத்தி தடைபட்டுக் கொண்டுதான் இருக்கும் என்று ஊகிக்கப்படுகின்றது.

இந்தியாவில் தேயிலைத் தோட்டங்களை முதல் முதலில் ஏற்படுத்த ஆங்கிலேயர்

எந்த உணவுப் பொருள்களை நீ அதிகம் விரும்புகிறாயோ

அவற்றினால் அதிக பலத்தைத் திரட்ட முயற்சிக்கவும்!





ஒவ்வொரு ஸ்திரீயும் எந்தெந்த பதார்த்தங்கள் ஊக்கமளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்க வேண்டும். டால்டா "குக் புக்" (ஆங்கிலத்தில் மட்டும் எழுதியுள்ளது) உணவுப்பொருள்களின் தராதரத்தைப் பற்றியும், 150 இந்திய ஆகாரத் திட்டங்களைப்பற்றியும் விவரித்திருக்கிறது. 'உங்களிடம் ஒரு பிரதி இருக்க வேண்டியதவசியம். Dept. C109 P.O. Box No. 353 Bombay என்ற விலாசத்திற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்

விருப்பத்துடன் நீங்கள் சாப்பிடும் உணவுப்பொருள்களை அதிக ஊக்கந் தரக்கூடியவைகளாகச் செய்யுங்கள். நமக்குப் பிரியப்பட்ட சில உணவுப் பொருள்கள் அதிக நன்மை அளிப்பதில்லை என்று உங்களுக்குத் தெரியுமா? அவைகள் பசியைத் தணிக்கின்றன. ஆனால் சிறிது ஊக்கமட்டும் அளிக்கின்றன—தேவையான அளவு ஊக்கத்தைக் கொடுப்பதில்லை. இது ஒரு திடுக்கிடக்கூடிய யோசனைதான். ஆரோக்கியம், சந்தோஷம், திறமை—இவைகளெல்லாம் ஊக்கத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளன. சாப்பாடு நம் தேவைக்கு வேண்டிய ஊக்கத்தைக் கொடுக்காவிட்டால் ஏற்படும் தீமைகள் பல. எல்லா உணவுப் பொருள்களும் சிறிதளவு ஊக்கத்தை அளிக்கின்றன. ஆனால் தினசரி சாப்பிடும் சில உணவுப்பதார்த்தங்கள் சொல்ப ஊக்கமளிக்கக் கூடியவை. இம்மாதிரியான சாப்பாட்டுக்கு ஊக்கத்தைக் கொடுக்கவேண்டுமானால் அதிக ஊக்கமளிக்கக் கூடிய பதார்த்தங்களைச் சேர்க்கவேண்டும். வைடமின் நிறைந்த டால்டாவினால் சமைப்பது அனுகூலத்தைக் கொடுக்கிறது. இயற்கையளிக்கும் ஊக்கத்தைக்கொடுக்கக்கூடிய சத்துப் பொருள்களை டால்டா கொடுக்கிறது. எல்லா உணவுப்பதார்த்தங்களையும் டால்டாவினால் சமையல் செய்வது நலம்.

வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

HVM. 34-23-40 TM

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

யர்கள் எப்படிக் காரணமாக இருந்தார்களோ, அதே மாதிரி இதன் அபிவிருத் அவர்கள்தான் காரணம். இதனால் இந்தத் தொழிலில் அவர்கள் ஆதிக்யம் அதிகம். இந்தியாவில் தேசிய உணர்ச்சித் ததும்பி இருக்கும் இக்காலத்தில்கூட, நூற்றுக்கு சுமார் 75 அல்லது 80 சதம் (Cent) தோட்டங்கள் அவர் கையில் (Ownership) இருப்பதாக மதிப்பிடப் படுகின்றது. இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மூலதனம் சுமார் ரூ 52·20 கோடி எனக் கணக்கிடப்படுகின்றது. இதில் சுமார் ரூ. 39·15 கோடிகள் ஸ்டர்லிங்கை மூலதனமாகக் கொண்டது. இவ்வளவு பணமும் மொத்தம் 630 கம்பெனிகளில் போடப்பட்டிருக்கின்றது.

1885-வது ஆண்டு முதற்கொண்டு 1929-வது ஆண்டு வரையில், அதாவது சுமார் 45 வருஷ காலம், டீ தொழில் ஆங்கிலேயர்களுக்கு அதிக லாபத்தைக் கொடுத்துக்கொண்டு வந்தது என்று சொல்லத் தேவையில்லை. கொழுத்த சம்பளம் கொடுத்து சில ஆங்கிலேயர்களை மேல்பார்வையிட ஒவ்வொரு தோட்டமும் வைத்துக்கொண்டு வந்ததும் அன்னியில் இந்த 45 வருஷமும் அநேகமாக எல்லாத் தோட்டங்களும் 100-க்கு 40-ல் இருந்து 100 சதம் வரையில் கம்பெனிப் பங்குதாரர்களுக்குக் (Dividend) கொடுத்துக்கொண்டு வந்தது. இப்பொழுதும் கூட பங்குதாரர்களுக்கு நல்ல (Dividend) கொடுத்துக்கொண்டு வருகின்றது. நமது தேச வியாபாரத்திலும் டீ ஒரு முக்கிய ஸ்தானத்தை வகிக்கின்றது. பிரதி வருஷத்திலும் ரூ. 30 அல்லது ரூ. 35 கோடி மதிப்புள்ள டீ நாம் அசல் தேசத்திற்கு அனுப்புகின்றோம்.

பிணியாளர்களுக்கோர் தேறுதல்

மேல் நாட்டு மருந்துகளாலும் ஏனைய நம் நாட்டு மருந்துகளாலும் குணமடையாதிருக்கும் "குஷ்டம்" "படை" "மேகப்பற்று" முதலான சரும வியாதிகளுக்கு எமது

கந்தகராஜரஸாயனம்

உறுதியான பலனைக் கொடுக்கிறது

பவுண்டு விலை ரூ. 60—0—0

வாத வியாதி, மாதவிடாய் சம்பந்தமான கோளாறுகள், முதலான எவ்வித நோய்களையும் எமது மூலிகைகளால் செய்யப்பட்ட ஔடதங்கள் கண்டிக்கின்றன.

முழு விபரங்களுக்கு

அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள் :

மானேஜர் :

ஆர்ய வைத்தியசாலை,

கோட்டைக்கல், தென் மலையாளம்.

சந்தேகமின்றியில் நீ துணிச்சலாய் இருக்கிறாய். அப்படி இல்லாவிட்டால் தான் நீ ஒரு அதிசயமான சிறுவனாய் இருப்பாய். ஆனால் வீரமுள்ள இந்திய சிறுவன் என்ன செய்யக்கூடும் என்று நீ கேட்கலாம். விடை மிக எளிது. அவன் ஐ. ஏ. எப்பில் சேருகிறான். இந்த மேன்மையான சேவையில் அவனுடைய பால்ய தைரியத்தை காண்பிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் உண்டு. மேலும் நடத்தையின் நற்குணத்துக்கு அஸ்திவாரம் போட்டு வருவான். பிற்கால வெற்றிக்கு, தலைமைவகிப்பதின் அதிகாரங்கள், சிநேகம், முதல் எத்தனம் எல்லாம் முக்கியமான தேவைகள். யுத்த பிற்கால இந்தியாவிற்கு உங்களை ஐ. ஏ. எப். தயார் செய்யட்டும்.

உங்களுடைய பிற்கால வாழ்க்கையைப் பற்றி நினைப்பதற்கு இதுவே சமயம்!

- இந்திய ஆகாயப் படையில் அடையும் பயிற்சியும் அனுபவமும் அனேகருக்கு லாபகரமான சிவில் வாழ்க்கை நடத்த தேவையான யோக்யதாம்சங்களை கொடுக்கிறது என்பதற்கு சந்தேகமேயில்லை.
- யுத்தம் நடக்கும் வரை தங்கள் ஆதிக்கத்திலுள்ள அநேக வேலைகளை காலியாக வைத்திருப்பதாக சர்க்கார் வாக்களித்திருக்கின்றனர். இந்த வேலைகளின் பேர்பாடு யுத்தசேவை செய்தவர்களைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும்.
- யுத்த சேவையிலிருந்தவர்களில் தேர்ந்தெடுத்தவர்களுக்கு குறிப்பிட்ட வியாபாரம் அல்லது தொழிலில் சர்க்கார் சிலவில் பிரத்யேக பயிற்சி அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் தயாராகி வருகிறது.
- தற்சமயம் பல்கலைக்கழகத்திலிருக்கும் மாணவர்களுக்கு யுத்த சேவையால் யுத்தத்திற்குப் பிறகு மதிப்பு உள்ள சலுகைகளை அடைவார்கள். அதன் மூலம் அவர்கள் மேற்கொண்டும் படிக்கலாம். சரியான விவரங்களை பல்கலைக்கழக அதிகாரிகளிடமிருந்து பெறலாம்.

இந்த கூப்பனை கத்தரித்து அதை உங்களுக்கு சமீபத்திலுள்ள G. D. (பைலட்டுகள்) ரெக்ரூட்டிங் ஆபிசருக்கு அனுப்புங்கள். அவர் உங்களுக்கு விண்ணப்ப பாரமும் இந்திய ஆகாயப் படையில் பைலட் சேவைக்கான விவரங்களையும் நிபந்தனைகளையும் அனுப்புவார்.

பெயர் ______________________________

விலாசம் ______________________________

ஐ. ஏ. எப்க்குத் தேவையானது

நல்ல திடசரீரமும், நல்ல பார்வை, காது கேட்குதல், $17\frac{1}{2}$ முதல் 28 வயதுக்குள் இருக்கும் மனிதர்கள். அவர்கள் சுறுசுறுப்புள்ள யுத்த சேவையில் பறப்பதினால் ஏற்படும் பிரயாசத்தை தாங்கக் கூடியவர்களாய் இருக்கவேண்டும். நல்ல பொது அறிவுள்ள படிப்பும் ஆங்கிலம் நன்றாய் பேசவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும்.

உங்களது கூப்பனை
சமீபத்திலுள்ள G. D. R. Oக்கு அனுப்புங்கள்

AAA—1531—TM

ஐ. ஏ. எப். ஜி. டி. (பைலட்ஸ்) ரிக்ரூடிங் ஆபீஸர்
புதுப்பேட் லேன்ஸ், மவுண்ட் ரோடு, மதராஸுக்கும்

ஐ. ஏ. எப். ஜி. டி. (பைலட்ஸ்) ரிக்ரூடிங் ஆபீஸர்
கப்பான் ரோடு, பெங்களூருக்கும்

கருமையே செம்மை

[இ. லி. சாஸ்திரி]

[' காக்கைச் சிறகினிலே நந்தலாலா ' என்ற மெட்டு]

கருமை கருமையென்று கரிக்காதே - அதன்
அருமை பெருமைகளை அறியாதே.
காகத்தின் குஞ்சுமிகக் கறுப்பாயினும் - தம்பி
கன்கமென் றதன்தாய் கருதுமல்லவோ ?
பத்துமாதம் சுமந்து பெற்ற பிள்ளையை - தாயும்
' பார்க்கக் கறுப் ' பென்று தள்ளவில்லையே.
கறுப்புமசி கூட்டில் இருக்கிறது - தம்பி
காயிதத்தி லதைக்கான மணியாகுது.
கணுக்கால் வரை நீண்ட கருங்கூந்தலும் - தம்பி
காண்பதற்குக் கவர்ச்சி கொண்டதல்லவோ ?
கார்மேகம் மிதப்பதைக் கானமயிலும் - கண்டு
களிமிகுந்து நடன மாடுமல்லவோ ?
குளத்தின் ஆழமான சலப்பரப்பும் - தம்பி
குளிர்ச்சியைக் கண்களுக்குத் தருமல்லவோ ?
கன்னங்கரு விழிகள் வெகுஅழகாம் - தம்பி
மன்மதனை யுமயங்கச் செய்யுமல்லவோ ?
குயிலின் நிறம்சுத்தக் கறுப்பாயினும் - தம்பி
மயிர்சிலிர்க்கு மதுரகீதம் பாடுமல்லவோ ?
கானல் அடுத்துள்ள கருஞ்சலமும் - தம்பி
வானத்தைப் படம்பிடித்துக் காட்டுமல்லவோ ?
காரிருளும் காணக் கறுப்பல்லவோ ? - தம்பி
மாரனின் லீலைகளுக் குகந்ததல்லவோ ?
கறுப்புப்பூனை யொன்றைக் கண்டுவிட்டால் - தம்பி
காலமிக நல்லதொன் று நேருமல்லமோ ?
முழுதும் கறுப்பான நாயைக் கண்டதும் - முன்னர்
விழுந்து ' வைரவ ' ரென்று வணங்கவில்லையோ ?
கன்னியின் மேனி முழுக்கறுப்பானுல் - என்ன !
அன்னவளிடம் காதல் இல்லையாகுமோ ?
கண்ணுக் கிடுமை கருமையல்லவோ ? - தம்பி
களைமிகுந்து முகத்தைக் காட்டுமல்லவோ ?
கண்ணனின் கரிய மேனியழகில் - தம்பி
எண்ணரிய கோபிகள் மயங்கவில்லையோ ?
அன்னை பராசக்தி காருருக்கொண்டாள் - தம்பி
பின்னை கறுப்பைநீ கரிக்கலாகுமோ ?

அழகுப் பொக்கிஷம்

அழகு தானே கலை! அதைத்தான் மைசூர் சந்தன சோப் உங்களுக்கு அளிக்கிறது. நின்று மணக்கும் அதன் துல்லிய மணமும் மேனியை அழகு படுத்திக் காப்பாற்றும் அதன் குணமும் ஒப்பு உயர்வற்றவை.

மைசூர்
சந்தன சோப்

கவர்ன்மெண்ட்
சோப் பாக்டரி
பெங்களூர்

பிரார்த்தனைகள்

[பண்டிட் யம். வி. எஸ். ராம், பி. ஏ., பி. எல்.]

எல்லா மனிதர்களும் தினசரி நான்கு காலங்களில் த்யானம் செய்யவும், ஸர்வ க்ஷேமங்களை வேண்டிக்கொள்ளவும், அகிலாண்டவன் அருளால் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆயினும், உலக ஸேவாவியாபகங்களை உத்தேசித்து, சில முக்கிய நல்லோர்களே இத் தியான பிரார்த்தனைகளில் மனமார எந்நாளும் ஈடுபட்டுள்ளோர். அவர்களை ஜனங்கள் ரிஷிகள் என்றும், வேதாந்திகள் என்றும் சொல்லி வருவது வழக்கம். இப்பொழுதும் சமூக ஏற்பாடுகள் குறைவற நடந்தேறி வருகிற சிறப்பு நாடு இப்பாரதமே.

1. எல்லா ஜீவர்களும் ஸந்தோஷமாக இருக்கட்டும்.

2. ப்ரியமும், தர்மமும் எங்கும் பரவட்டும்.

3. பசுக்கள் விருத்தியடையட்டும்.

4. நல்லோர்கள் செழிக்கட்டும்.

5. ஒருவருக்கொருவர் உண்மையில் அறிந்துகொள்ளட்டும்.

6. பொருளுள்ளவர்கள் மனதோடு பங்கிட்டுக் கொடுத்து மலரட்டும்.

7. வித்தையுள்ளவர்கள் தைர்யமாக அறிவைப் பரப்பட்டும்.

8. ஜனங்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய போட்டிகளையும், ஆடல் பாடல்களையும், கனபதார்த்தங்களையும் நிறுத்திக்கொண்டு, பழமையாக வருகிற ஜீவாதாரத் தொழில்கள் ஓங்கிவளரட்டும்.

9. கடவுளை வழிபட வேண்டுமானால் மனிதர்கள் செய்கையில் ஜீவஹிம்ஸையை ஒழிக்கட்டும்.

10. இனிய சொற்களும் தர்ம செயல்களும் மேல் மேல் விளங்கட்டும்.

11. கடவுளின் பிரதிநிதிகளாகிய மகாத்மாக்களையும், பெரியார்களையும் ஜனங்கள் வணங்கி, கடவுளைப்போலவே பூஜிக்கட்டும்.

12. நடப்பதும், பார்ப்பதும், நல்லதும் கெட்டதும் ஈசனின் செயலேயாகும். முடிவில் எல்லாம் உலக க்ஷேமத்திற்கே மாறட்டும்.

13. பிராணிகளை வெறுத்துக் கொலை புரிவது இவ்வுலகிலிருந்து அறவே நீங்கட்டும்.

14. சாப்பாட்டின் ஓர் அளவை வயிறு காட்டுவதுபோல, ஒரு மனிதனின் பொருள் சேமிப்புக்கும், பூமியை அடைவதற்கும் எல்லைகள் உடனே உண்டாகட்டும்.

15. ஸாதுக்களுக்கு ஸதா கிருத யுகம் தான். அது போலவே மற்ற ஜனங்களும் நல்லோர் வழிகளைப் பின்பற்றி எப்பொழுதும் ஆனந்தத்தில் நின்று விளங்கட்டும்.

16. நல்ல சேர்க்கையே ஸ்வர்க்கம் அல்லது சுகத்தைத் தரக்கூடியது. இனி யாவது ஒவ்வொரு மனிதனும் அச்சேர்க்கைக்கு ஆளாகட்டும்.

17. ப்ரயாஸையால் எள்ளிலிருந்து எண்ணெயைக் காண்பதுபோல, தன் சரீரத்திலுள்ள ஆத்மாவைச் சிரமப்பட்டுக் காண முயற்சி செய்யட்டும்.

18. கடவுளும் காட்சிகளும் ஒன்றே என்று அறியவேண்டிய காலம் வருக, வருக.